ஆரம்பக்கல்வி

ELEMENTARY EDUCATION

JUNE—1955

6 - AUG 1956

மிஸ் ஹெலன் கெல்லர்

ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94-95, புது தெரு
மண்ணடி, சென்னை-1

ASSOCIATION PUBLISHING HOUSE

"ARAMBA KALVI OFFICE"

94/95, New Street, Mannady P. O. Madras-1.

POST BOX NO. 1818

"ஆரம்பக்கல்வி" இனும்

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையில், எமது "புதுமுறை சங்க வாசகங்களை" அல்லது "வீரபாண்டியன் தமிழ் வாசகங்களை" பாட புத்தகங்களாக, அல்லது ரூ. 50–க்குக் குறையாமல் இதர பாட புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுத்து ஆதரிக்கும் எய்டெட், பஞ்சாயத்து, லேபர் ஆரம்பப் பாடசாலைகளுக்கு, "ஆரம்பக்கல்வி" மாதப் பத்திரிகையை இனுமாக மாதாமாதம் அனுப்பிவைக்கப்படும். மாதிரிப் பிரதிகள் வேண்டுபவர்கள் கீழ்க் குறித்துள்ள தொகைக்குத் தபால் ஸ்டாம்புகளை (Postal Stamps) வாங்கிக் கவரில் வைத்து அல்லது மாதிரிப் பிரதிகளுக்கு அனுப்பவேண்டிய தொகை ஒரு ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால் அந்தத் தொகையை M. O. மூலம் அனுப்பவும்.

புதுமுறை சங்க வாசகங்கள்

	புத்தகத்தின் விலை			சேஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
முதல் வகுப்பு	0	4	0	8	4–5–'55
இரண்டாம் வகுப்பு	0	5	0	22	19–5–'54
மூன்றாம் வகுப்பு	0	7	0	23	19–5–'54
நான்காம் வகுப்பு	0	8	0	23	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0	9	0	23	19–5–'54

இந்த ஐந்து புத்தகங்கள் மட்டும் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 1–0–0 அனுப்பவும்.

ஆரம்பக்கல்வி

PUBLIC LI
G 1956
MADRAS

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்

ஆசிரியர் : பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3.] [தனிப் பிரதி 4 அணா.

மலர் 16 ஜூன் 1955 இதழ் 6

அவசரம்! அவசரம்!!
மிக மிக அவசரம்!!!

எட்டாவது வகுப்பு வரையில், எல்லாப் பிள்ளைகளுக்கும், கல்வி, இலவசமாக அளிக்கப்பட வேண்டுமென்று நமது "ஆரம்பக் கல்வி" இதழ் நீண்ட காலமாக முழக்கமிட்டு வந்திருக்கிறது.

ஆரம்ப ஆசிரியர்கள், இந்த வேண்டுகோளை வற்புறுத்தி, அடிக்கடி சொற்பொழிவாற்றி யிருக்கிறார்கள்.

ஆசிரியர்களின் மாநாடுகள் நடைபெற்ற நேரத்திலெல்லாம், இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டியது எத்துணை அவசியம் என்பதை எடுத்துக்காட்டித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

ஆரம்ப ஆசிரியர்கள்—ஆசிரிய மானேஜர்களின் தூது குழு அரசியலாரைப் பேட்டி கண்ட வேளைகளில் எல்லாம், இந்தக் கொள்கை முழக்கத்தை எழுப்பாமல் இருந்தது கிடையாது.

சமயம் கிடைத்தபோதெல்லாம் ஆரம்ப ஆசிரிய உலகம், எட்டா வது வகுப்புவரை இலவசக் கல்வி என்கிற இலட்சியத்தை, அரசின ரின் கண்கள்முன் நிறுத்தி, அவர்கள்தம் செவிகளிலும் விழவைத் திருக்கிறது.

நமது முயற்சி வீண்போகவில்லை.

மாநாடுதோறும் நாம் எழுப்பி வந்த முழக்கம் காட்டுக்கூச்ச லாக மாறிவிடவில்லை.

இதோ, நமது கோரிக்கை, வீரப் புன்னகையுடன் வெற்றிப் பவனி வருகிறது.

ஆமாம் நண்பர்களே! மெய்யாகத்தான்! சென்னை அரசாங் கத்தார், இனி, எட்டாவது வகுப்பு வரையில் கல்வி இலவசம் என்று அறிவித்து விட்டனர்.

ஆரம்பப் பள்ளிகளில் எட்டாவது வகுப்பு வரையிலும், உயர் நிலைப் பள்ளிகளில் மூன்றாவது படிவம் வரையிலும், கல்வி இனி இலவசம் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டனர்.

ஆண்டுக்கு 1200 ரூபாய் அல்லது அதனினும் குறைவான வருமானமுடைய பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளுக்கு, இந்த வகுப்புகளில், இனி, சம்பளம் எதுவும் செலுத்தவேண்டிய அவசி யமே கிடையாது.

கோடை விடுமுறைக்காக இப்போது மூடப்பட்டிருக்கிற பள் ளிக்கூடங்கள் திறந்தது முதல் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரு கிறது.

இனியும், ஆண்டுக்கு 1200 ரூபாய்க்குமேல் வருமானமுடைய பெற்றோர்களின் பிள்ளைகளுக்குச் சம்பளம் உண்டு. ஆனால் அத்தகு பிள்ளைகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருக்கும். அது மட்டுமல்ல. அத்தகு பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குச் சம்பளம் கட்டுவதிலே அதிகமாகச் சிரமப்படக் கூடியவர்களல்ல. தாங்கக்கூடிய சக்தி உடையவர்கள். ஆகவே அவர்கள் அந்தப் பளு வைச் சுமப்பதிலே தவறு எதுவுமில்லை.

ஏழைப் பெற்றோர்கள் இனி சம்பளம் எதுவும் கட்டவேண்டிய தில்லை.

ஆலைத் தொழிலாளிகள், சிறு குமாஸ்தாக்கள், ஏழை விவசாயி கள், மூட்டை சுமந்தும் முதுகை வளைத்தும் வண்டி இழுத்தும்

கட்டை வெட்டியும் பாடுபடும் பாட்டாளிகள், இப்படிப் பட்டவர்களின் பிள்ளைகளுக்கு இனி சம்பளமில்லை.

இது, சிறந்ததோர் திட்டம். சீரும் சிறப்பும் இந்த நாடு எய்த வேண்டுமென்று எண்ணுவோரின் உள்ளத்திலெல்லாம் இன்பத்தை அள்ளி வழங்கக்கூடிய அரிய திட்டம். எதிர் காலத்தில், இந்த நாட்டில், கல்வியறிவு அற்றவர் எவரும் இல்லை என்று சொல்லக்கூடிய உயர் நிலையை ஏற்படுத்தக்கூடிய திட்டம். ஆரம்ப ஆசிரியர்கட்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கும் மாண்புமிக்க திட்டம்.

நாம் நீண்ட பல ஆண்டுகளாகக் கேட்டுவந்தோம்—அது இப்போது நிறைவேறிவிட்டது.

நமது கிளர்ச்சி அதன் கனியை ஈந்துவிட்டது.

நம் முழக்கம், வெறும் முழக்கம் என்கிற நிலையைத் தாண்டி, நடைமுறைத் திட்டம் என்கிற உயர் நிலையைப் பெற்றுவிட்டது.

இது, சிறந்ததோர் வெற்றி ஆரம்ப ஆசிரியர்கட்கு.

இத்தகு வெற்றி பெற்ற ஆரம்ப ஆசிரியர்களை—அவர்களின் இலட்சிய உள்ளங்களை — அந்த உள்ளங்களில் நடமாடும் உயரிய எண்ணங்களை மனமாரப் பாராட்டுகிறோம்.

இப்படிப்பட்டதோர் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவது மிகவும் அவசியம் என்பதை, இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகாவது, அரசாங்கத்தார் திட்டவட்டமாகத் தெரிந்து கொண்டனரே, தெரிந்து நடைமுறைக்கும் கொண்டு வந்தனரே, அதற்காக அவர்களுக்கும் நமது பாராட்டு மிகப் பெரிய அளவில் உரியது. நம் மனம் நிறைந்த நன்றி, அரசாங்கத்திற்கு.

திட்டம் மிகச் சிறந்ததொன்று. எனவே மிகமிக மகிழ்கிறோம். ஆனால் அதே நேரத்தில், இந்தத் திட்டம் நடைமுறைக்கு வருவதன் விளைவாக, ஆரம்பப் பள்ளிகளின் நிர்வாகிகளுக்குப் பெரியதோர் ஆபத்து ஏற்பட இருக்கிறது. அதனை உடனடியாக நீக்கவேண்டியது அரசினரின் கடமை என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

ஆதித்திராவிட வகுப்புப் பிள்ளைகளும், என். ஜி. ஓ. க்களின் பிள்ளைகளும், ஏழைச் சிறுமிகளும் ஆரம்பப் பள்ளிகளில் கட்டணம் செலுத்தாமல் கல்வி பயிலலாம் என்று அரசினர் ஏற்கெனவே ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இந்த ஏற்பாட்டின் விளைவாக பள்ளிக்கூட நிர்வாகிகளுக்கு, மாதந்தோறும் கிடைக்கக்கூடிய வருமானம் மிகவும் குறைந்து போயிருக்கிறது.

ஓர் ஆரம்பப் பள்ளியில் மொத்தம் 200 பிள்ளைகள் கல்வி பயில்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோமானால் அவர்களில் 50 பேர் ஆதித்திராவிடப் பிள்ளைகளாகவும், 20 பேர் என். ஜி. ஓக்களின் பிள்ளைகளாகவும் 80 பேர் ஏழைச் சிறுமிகளாகவும் இருக்கக்கூடும். அப்படி யிருந்தால், மிச்சமுள்ள 50 பேரிடம் மட்டுமே, நிர்வாகிகள், சம்பளம் வசூலிக்கமுடியும். அப்படி வசூலிப்பதால் கிடைக்கக் கூடிய வருமானம் மிகவும் குறைவாகவே இருக்கமுடியும்.

இப்படியெல்லாம் கட்டணமின்றிப் படிக்கும் சிறுவர் சிறுமியர்க்கான நஷ்ட ஈட்டுத் தொகையை அரசாங்கத்தார், மூன்று மாதங்களுக்கு ஒரு முறைதான் கொடுத்து வருகின்றனர். ஆனால், பள்ளிக்கூட நிர்வாகிகள் மாதந்தோறும் செய்து தீரவேண்டிய செலவுகளோ, ஏராளமாக இருக்கின்றன.

வேலைக்காரிகள் — ஆயாக்கள் — தோட்டிகளுக்குச் சம்பளம், கைத்தொழிற் பயிற்சிக்குத் தேவையான பண்டங்கள் வாங்குவது, ஆசிரியர்களின் பிராவிடண்ட் நிதிக்கு நிர்வாகிகள் செலுத்த வேண்டிய தொகை, பள்ளிக்கூடக் கட்டிடத்திற்கு வாடகை, கல்விப் பயிற்சிக்குத் தேவையான கருவிகள் பண்டங்கள் மேசை நாற்காலிகள் முதலியன வாங்குவது, வீட்டு ரிப்பேர் முதலிய பல்வேறு செலவுகளை, நிர்வாகிகள், மாதந்தோறும் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

இவ்வாறாகச் செலவுசெய்யப்பட வேண்டியதோ மாதந்தோறும் —அரசியலாரின் நஷ்ட ஈட்டுத் தொகை கிடைப்பதோ மூன்று மாதங்களுக்கு ஒரு முறை—மாதந்தோறும் நிர்வாகிகளுக்குக் கிடைக்கும் வருமானமோ மிகமிகக் குறைவு. எனவேதான், அந்தந்த மாதத்தில், கிடைக்கும் சொற்ப வருமானத்தைக் கொண்டு, செய்யப்பட வேண்டிய பெருஞ் செலவை எப்படிச் சரிக்கட்டுவது என்பது தெரியாமல், நிர்வாகிகள் திண்டாடித் தவித்துத் தத்தளிக்கின்றனர்.

இந்தத் தவிப்பும் தத்தளிப்பும் தீரவேண்டுமானால், சலுகை பெற்ற மாணவ மாணவியரின் நஷ்ட ஈட்டுத் தொகையை, அரசாங்கத்தார், மாதந்தோறும் தந்துவிடவேண்டும்.

அப்படி மாதந்தோறும் தந்தால்தான் பள்ளிக்கூடங்களை நடத்துவது எளிதில் முடியும் என்று நிர்வாகிகள் பலமுறை தெரிவித்திருக்கின்றனர்.

அண்மையில் நடைபெற்ற உதவி பெறும் ஆசிரிய மானேஜர்கள்—மானேஜர்களின் மாநில மாநாட்டிலேயும் இந்தக் கோரிக்கையை வற்புறுத்தித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இது ஏற்கெனவே இருந்துவரும் நிலை.

இப்போதோ, ஏழைப் பெற்றோர்கள் அனைவரின் பிள்ளைகளுக்கும் கல்வி இலவசம் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதன் விளைவாக, இனி ஆரம்பப் பள்ளிகளில், சம்பளம் கட்டிப் படிக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகவே இருக்கும்.

ஓர் ஆரம்பப் பள்ளியில் ஏறத்தாழ 200 பிள்ளைகள் படிப்பார்களானால் அவர்களில் 20 அல்லது 30 பிள்ளைகளுக்கு மேல் சம்பளம் கட்ட வேண்டிய அவசியம் இனி இருக்காது.

ஆகவே, பிள்ளைகள் கட்டும் சம்பளத்திலிருந்து நிர்வாகிகள் பெறக்கூடிய வருமானம், இனி, ஏறத்தாழ எதுவும் இல்லை என்று சொல்லத்தக்க நிலையில்தான் இருக்க முடியும்.

உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகள் (Aided Elementary Schools) அத்தனையும், இனிமேல், தங்களுடைய செலவுகளுக்குத் தேவையான தொகையை, அரசாங்கத்தார் தருகிற இலவசக் கல்வி நஷ்டஈட்டுத் தொகையிலிருந்துதான் சரிகட்டியாக வேண்டும்.

இந்த நிலையிலும், இனிமேலும், அரசாங்கத்தார், இந்தத் தொகையை, மூன்று மாதங்களுக்கு ஒருமுறைதான் தந்துவருவது என்று இருப்பார்களானால், உதவிபெறும் ஆரம்பப்பள்ளிகளின் நிர்வாகிகள், அந்தந்த மாதம் செய்து தீரவேண்டிய செலவுகளை எப்படிச் செய்ய முடியும்?

1000—2000 என்று கையிலே இருப்புத் தொகை (Reserve Fund) வைத்திருந்தால், அந்தத் தொகையிலிருந்து செலவுக்கு எடுத்துக்கொண்டு, மூன்று மாதங்களுக்குப் பின்னால், அரசாங்கத்தார் பணத்தைத் தருகிறபோது சரிகட்டிவிட முடியும.

ஆனால் உதவிபெறும் ஆரம்பப்பள்ளி நிர்வாகிகளில் எத்தனைப் பேர் இத்தகைய இருப்புத் தொகையை வைத்திருக்க முடியும்?

அந்தந்த மாதச் செலவுக்குத் தேவையான தொகையே இல்லாமல் திண்டாடும்போது பெரியதோர் இருப்புத்தொகை அவர்களிடம் எப்படி ஏற்பட்டுவிட முடியும்?

எனவேதான் கூறுகிறோம், சலுகைபெற்ற பிள்ளைகளின் நஷ்ட ஈட்டுத் தொகையை மாதந்தோறும் தர அரசாங்கத்தார் ஏற்பாடு செய்யாவிட்டால், உதவிபெறும் நிர்வாகிகளில் மிகப் பலர் தங்கள் பள்ளிக்கூடங்களை மூடவேண்டிய நெருக்கடிக்கு ஆளாகிறார்கள்.

ஆரம்பக் கல்வி விரைந்து பரவ வேண்டுமானால் புதிய பள்ளிக்கூடங்கள் ஏராளமாகத் திறக்கப்படவேண்டும்.

ஆனால் இப்போதோ, இருக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

இந்த நெருக்கடியிலிருந்து உதவிபெறும் பள்ளிகளைக் காப்பாற்ற வேண்டுமானால், மாதந்தோறும் நஷ்டஈட்டுத் தொகையைத் தர உடனே ஏற்பாடு செய்யவேண்டும்.

ஜூன் மாதத்தில் பள்ளிக்கூடங்கள் திறக்கப்படுகின்றன. அந்த மாதத்திற்குரிய நஷ்டஈட்டுத் தொகையை ஜூலை மாதத்திலேயே அரசாங்கத்தார் தந்துவிட வேண்டும். இப்படியே ஒவ்வோர் மாதத்திற்குரிய தொகையையும் அடுத்த மாதத்திற்குள் தந்துவிட வேண்டும்.

அவசரம்; அவசரம்; மிக மிக அவசரம். உடனடியாக அரசியலார் இந்த ஏற்பாட்டை மேற்கொண்டால்தான் உதவிபெறும் பள்ளிகளிற் பல, நெருக்கடியிலிருந்து தப்பமுடியும்.

அவசரமும் அவசியமுமான இந்த எற்பாட்டைச் செய்வதிலே, அரசாங்கத்தாருக்கு சங்கடம் எதுவும் இருக்கமுடியாது.

அவர்கள் மிக எளிதில் முடிக்கக்கூடிய மிகச் சிறிய செயல் இது.

ஆசிரியர்களின் ஊதியத்திற்கான உதவித் தொகையை (Teachers' Grant) மாதந்தோறுந்தான் கொடுத்து வருகிறார்கள்.

அதுபோலவே, அதன்கூடவே, சலுகை பெற்ற மாணவர்களின் நஷ்டஈட்டுத் தொகையையும் மாதந்தோறும் எளிதில் தந்துவிட இயலும்.

பள்ளி நிர்வாகிகளிடமிருந்து, அரசாங்கத்தார், ஆசிரியர்களின் ஊதியத்திற்கான புள்ளி விவரங்களை மாதந்தோறும் பெறுவது போலவே, சலுகை பெற்ற மாணவர்களுக்கான புள்ளி விவரங்களையும் மாதந்தோறும் பெற்றுக்கொள்ளலாம்.

இரண்டு புள்ளி விவரங்களையும் ஒன்றாகவே பெற்றுக்கொண்டு, இருவகை உதவித் தொகைகளையும் ஒன்றாகவே அளித்துவிடுவது மிகவும் நல்லது.

*   *   *

இந்த ஜூன் திங்கள் முதல் உதவிபெறும் ஆரம்பப் பள்ளி களுக்கு மற்றோர் பெரிய ஆபத்தும் ஏற்படவிருக்கிறது.

இனி, ஆரம்பப் பள்ளிகளில் எட்டாவதுவரை படிக்கும் ஏழைப் பிள்ளைகள் கட்டணம் வேண்டியதில்லை என்பது போலவே, உயர் நிலைப் பள்ளிகளில் மூன்றாவது படிவம்வரை படிக்கும் பிள்ளைகளும் சம்பளம் செலுத்தவேண்டிய அவசியமில்லை.

ஆனால் ஒரு வேறுபாடு.

ஆரம்பப் பள்ளிகளின் எட்டாவது வகுப்பிற் படிக்கும் பிள்ளை களுக்கு ஈ.எஸ். எல். சி. என்று சொல்லப்படும் அரசாங்கப் பரீட்சை உண்டு.

ஆனால் உயர்நிலைப் பள்ளிகளின் மூன்றாவது படிவத்தில் படிக் கும் பிள்ளைகளுக்கு அந்தப் பரீட்சை கிடையாது.

எனவே இனி, பல பிள்ளைகள், ஈ. எஸ். எல். சி. என்னும் இந் தத் தொல்லை நமக்கெதற்கு என்று எண்ணி, ஆரம்பப் பள்ளிகளை விட்டுவிட்டு உயர்நிலைப் பள்ளிகளிற் சேர்ந்துவிடுவர்.

இதனால் ஆரம்பப் பள்ளிகளின் மாணவர் எண்ணிக்கை குறைந்து, வருமானமும் சுருங்கிவிடும்.

இந்த ஆபத்திலிருந்து ஆரம்பப் பள்ளிகள் காப்பாற்றப்பட வேண்டுமானால் உடனடியாக, ஈ. எஸ். எல். சி. பரீட்சை ஒழிக்கப் படவேண்டும்.

ஒழிக்கப்பட்டால்தான் ஆரம்பப் பள்ளிகளின் இன்றைய மாண வர் எண்ணிக்கை நிலைக்கமுடியும். அந்த எண்ணிக்கை நிலைத்தால் தான், அந்தப் பள்ளிகளாற் சிறப்புறப் பணியாற்றமுடியும்.

இதற்கு முன்னர்கூட, ஆரம்பப் பள்ளிகளின் எட்டாவது வகுப்பிற்கு மட்டும்தான் ஈ. எஸ். எல். சி. பரீட்சை உண்டு; உயர் நிலைப் பள்ளிகளின் மூன்றாவது பாரத்திற்கு அது கிடையாது என்ற போதிலுங்கூட, அப்போதெல்லாம் இருவகைப் பள்ளிகளிலும் மாணவர்கள் சம்பளம் கட்டியாகவேண்டும். அதுவும், ஆரம்பப் பள்ளிகள் எட்டாவது வகுப்பு மாணவனிடம் வசூலித்துத்தந்த சம் பளத்தின் அளவைவிட, உயர்நிலைப் பள்ளிகள் தம் மூன்றாவது படிவத்து மாணவனிடம் வசூலித்துவந்த கட்டணத்தின் அளவு அதிகம்.

கட்டணக் குறைவு என்கிற இந்தக் காரணத்தை முன்னிட்டுத் தான், ஈ. எஸ். எல். சி. பரீட்சை ஆரம்பப் பள்ளிகளில் மட்டும் உண்டு என்ற போதிலுங்கூட, இதுவரையில், மாணவர்கள் இங்கேயே சேர்ந்துவந்தனர். இனிமேல்தான் இருவகைப் பள்ளிகளிலும் சம்பளம் இல்லையே ! எனவே மாணவர்கள் ஈ. எஸ். எல்.சி. பரீட்சை இல்லாத பள்ளியையே இனித் தேர்ந்தெடுத்தால் அதிலே வியப்பு எதுவும் இல்லை.

ஈ. எஸ். எல். சி. பரீட்சை இருந்ததாக வேண்டும் என்பதற்கு எந்தவிதக் காரணமும் கிடையாது. ஆனால் அது ஒழிந்தாக வேண்டும் என்பதற்கோ ஏற்கெனவே பல காரணங்கள் உண்டு. அவற்றோடு, இப்போது, மிக முக்கியமான இந்தக் காரணமும் உருவாகியிருக்கிறது.

ஆம்—அந்தப் பரீட்சையை உடனடியாக எடுத்துவிடுவதே எல்லோருக்கும் எல்லாவகையிலும் நல்லது. ஆரம்பப் பள்ளிகளின் மாணவர் எண்ணிக்கை குறையாமல் இருப்பதற்கும் அதுவே நல்ல வழி.

* * *

1. கட்டணச் சலுகை பெற்ற மாணவர்களுக்கான நஷ்ட ஈட்டுத் தொகையை மாதந்தோறும் தருவது.

2. ஆரம்பப் பள்ளிகளின் மாணவர் எண்ணிக்கையைக் குறைக்கக்கூடியதும் வேறு பல குறைகளைக் கொண்டதுமான ஈ. எஸ். எல். சி. பரீட்சையை எடுத்துவிடுவது.

இந்த இரண்டு ஏற்பாடுகளையும் சென்னை அரசாங்கத்தார் உடனே செய்தால்தான், ஆரம்பப் பள்ளிகளின் வாழ்க்கை, துயரங்கள் நிரம்பிய பாலைவனமாக இல்லாமல், இன்பத் தென்றல் வீசும் பழமுதிர் சோலையாக இருக்கமுடியும்.

இந்த ஏற்பாடுகள் இரண்டையும் அரசாங்கத்தார் தவறாமல் செய்வார்கள்—அது நமக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இவற்றை உடனடியாகச் செய்யவேண்டும். செய்தால்தான் ஆரம்பப் பள்ளிகளை நோக்கி வேக வேகமாக வரும் பல ஆபத்துக்களை அழித்தொழிக்க இயலும். ஆமாம். ஆகவேதான் அரசாங்கத்திற்கு இந்த அவசர வேண்டுகோள்.

காலமும் கருத்தும்

மனமிருந்தால் மார்க்கமுண்டு !

இது, தமிழ்நாட்டில் தொன்று தொட்டு வழங்கி வரும் ஓர் பழமொழி. "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ ?"—இப்படிக் கேட்கும் ஓர் இனிய மூதுரையும் உண்டு. "எண்ணிய எண்ணி யாங்கு எய்துப—எண்ணியார்—திண்ணியராகப் பெறின்"—இவ்வாறு இயம்பினர் அந்த உலகப் பெரும் புலவர் திருவள்ளுவர். இந்த மொழிகளெல்லாம வெறும் மொழிகளல்ல, அனுபவ வாழ்க்கையிலிருந்து வடித்தெடுக்கப்பட்ட உண்மை என்பதை எழில்பட நிலை நாட்டிவிட்டார் ஓர் ஆசிரியர்.

நிலம் நீர், தோட்டம் துரவு, ஆள் அம்பு ஏதும் இல்லை அந்த ஆசிரியருக்கு. கையிலே கால் காசு கிடையாது. சேர்த்து வைத்த சொத்து என்று அவர் எதையும் காட்டவும் இயலாது. நாளை வாழ்வுக்கு என் செய்வோம் என்று ஏங்குகிற நிலை தான். ஆசிரியர்தானே அவர் ! அவர்தம் நிலை வேறெப்படி இருக்கமுடியும் ? வேறெப்படி இருக்கும் விதமாக ஆட்சியாளர்கள் நிலைமையை ஏற்றியிருக்கிறார்கள் இந்த நாட்டிலே ! இதுவும் ஓர் ஊதியமா என்று கேலி செய்யப்படவேண்டிய சின்னஞ்சிறு தொகையைத்தானே, சம்பளம் என்ற பெரிய பெயரைக் கூறி, ஆசிரியர்களிடம் தந்து வருகிறார்கள் நம் ஆட்சியாளர்கள் !

ஆசிரியர்கள் அனைவரையும் வாட்டி வரும் இந்த வறுமை அந்த ஆசிரியரையும விடவில்லை; வாடினார்; வதங்கினார்; இல்லாமையின் கொடிய கரங்களிற் சிக்குண்டு தத்தளித்தார். இந்த நிலையிலேயும் அவருக்கு ஓர் ஆசை ! பரந்த இந்த உலகத்தைச் சுற்றிப் பார்த்துப் பற்பல நாடுகளையும் நேரில் கண்டு, அந்தந்த நாட்டில் மக்கள் வாழும் முறைகளையும், ஆட்சி நடக்கும் வகையினையும், கல்வி கற்பிக்கப்படும் நெறியினையும் நன்கறிய வேண்டும் என்று ஓர் ஆவல் அவருடைய உள்ளத்தை நீண்ட நாட்களாகக் குடைந்து வந்தது.

கையிலே காசு இல்லை—உலகத்தையா சுற்றப் போகிறாய் ?"

"நடக்கிற செயலா இது ? முடியக்கூடிய காரியமா ?"

"கொம்புத் தேனுக்கு முடவன் ஆசைப்படுவதா ? சங்கீதத்தைக் கேட்டு மகிழ செவிடன் விரும்புவதா ?"

"உண்ண உணவில்லை, உலகம் சுற்ற விருப்பமா ?"

"வேண்டாமப்பா வீண் ஆசை! பகற் கனவுதான் உன் நினைவு"

இப்படித்தான் அந்த ஆசிரியரின் நண்பர்களும் உறவினரும் கூறியிருப்பர். அவருடைய ஆவலை முதலில் அறிந்ததும் நண்பர்களும் உறவினரும் மட்டுமா? நாமேகூட அப்படித்தானே சொல்லியிருப்போம்! நிலைமையை அறிந்த யாரும் அப்படித்தான் சொல்லமுடியும். அதிலே தவறுமில்லை. ஆனால் அந்த ஆசிரியர் தான் கொண்ட எண்ணத்தை நிறைவேற்றி முடித்திருக்கிறார். உலகம் முழுவதையும் சுற்றிவிட்டு வந்துவிட்டார். ஆமாம்—நண்பர்களின் கேலி, உறவினரின் கிண்டல், ஊராரின் கெக்கலி அத்தனையையும் பொய்யாக்கி விட்டார். தன் நெஞ்சத்தில் நின்றாடிய கனவை நனவாக்கி விட்டார். தனது ஆசையை நிறைவேற்றி விட்டார். திண்ணிய உள்ளம் அவருக்கு இருந்தது. எனவே, எண்ணியதை எண்ணியாங்கு எய்தி விட்டார்!

வட நாட்டில் உள்ள சௌராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்தவர் அந்த ஆசிரியர். பெயர் கல்லுபாய் ஜிஜாபாய், வயது 65.

சௌராஷ்டிரத்திலிருந்து பம்பாய்க்கு வந்தார். அங்கிருந்து லண்டனுக்குச் செல்வதற்குத் தேவையான தொகையை நண்பர்கள் பலர் திரட்டிக் கொடுத்தனர். லண்டன்மாநகர் சென்ற பிறகு பணத்திற்கு என்ன செய்வது? அங்கிருந்து வேறு நாடுகளுக்கு எப்படிச் செல்வது? வழி நெடுகச் செலவுக்கு எங்கே போவது? திரும்பவும் தாய் நாட்டிற்கு எப்படி வருவது? இந்தப் பிரச்சினைகளையெல்லாம் எண்ணிப் பார்த்து உள்ளம் கலங்கவில்லை ஆசிரியர் ஜிஜாபாய். லண்டன் சென்ற பிறகு அவைபற்றி எண்ணுவோம் என்ற முடிவுடன் புறப்பட்டு விட்டார்!

இங்கிலாந்தில் பல அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தி அவற்றின் மூலம் ஓரளவு பணம் திரட்டிக் கொண்டார். அந்த நாட்டு வானொலி மூலம் கருத்துரையாற்றுகிற வாய்ப்பும் அவருக்குக் கிடைத்ததாம். அதன் மூலமும் பணம் சிறிது கிடைத்ததாம்!'

இப்படியெல்லாம் கிடைத்த பணத்தைக் கொண்டும், ஆங்காங்கே பலர் செய்த உதவியைக் கொண்டும், தோழர் ஜிஜாபாய், இங்கிலாந்து முழுவதையும் சுற்றிப் பார்த்திருக்கிறார். அதுமட்டுமா—பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, கிரீஸ் யூகோஸ்லேவியா, துருக்கி ஆகிய ஐரோப்பிய நாடுகளையெல்லாம் கண்டிருக்கிறார்.

பின்னர் மத்திய கிழக்குப் பகுதி சென்று அரபு நாடு ஒவ்வொன்றையும் பார்வையிட்டிருக்கிறார். ஆப்ரிக்கா கண்டத்தையும் விடவில்லை. அங்கும் பல நாடுகளைச் சுற்றிப் பார்த்திருக்கிறார். அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து, தாய்லந்து,

பர்மா, ஜப்பான், சீனா, பிஜி— எதையும் பாக்கி விடவில்லை. உலகம் முழுவதையும் சுற்றுப் பயணம் செய்துவிட்டு சென்ற பிப்ரவரித் திங்களில்தான் தன் நாடு திரும்பியிருக்கிறார் பேரார்வம் படைத்த அந்த முதியவர்.

1948-ல் பம்பாயிலிருந்து புறப்பட்டவர் 1955-ல் தான் தாய் நாடு திரும்பியிருக்கிறார். இடையே ஏழு ஆண்டுகள், உலகப் பயணம். இத்தனைக்கும், தன் வீட்டை விட்டுப் புறப்படும் போது, அந்த ஆசிரியரிடம், பழைய துணிகள் கொண்ட கைப்பை ஒன்றைத் தவிர வேறு தொகை ஏதுமில்லை.

ஆச்சரியம் ஆனால் உண்மை! நம்ப முடியாதது, ஆனால் நடந்திருக்கிறது! உருண்டோடிடும் பணமின்றி உலகம் முழுவதையும் சுற்றி முடித்திருக்கிறார் அந்த ஆசிரியர்.

இப்போது சொல்லுங்கள். உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ என்பதும் மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்பதும் வெறும் பழமொழிகளா? அவை உண்மைகள் அல்லவா?

புறப்படுகிறது அணுக் கப்பல்!

அணுச் சக்தி என்ற சொல்லைக் கேள்விப் பட்டவுடனே, பயங்கரமான ஒரு குண்டு—அது மக்கள் மீது வீசப்படும் கொடுமை—அந்தக் கொடுமையின் விளைவாக ஆயிரமாயிரம் மக்கள் மாண்டு ஒழியும் வேதனை—அந்த வேனையைப் பெருக்கிடும் வகையில், மேலும் பல்லாயிரவர், உயிருடன் உலவும் பிணங்களாக, பற்பல குறையுடன் நடமாடும் நாச நிலை—இவைகளெல்லாம்தான் நம் நினைவுக்கு வருகின்றன. ஆனால் அணுச் சக்தி, அழிவுக்கு மட்டுமே பயன்படும் ஓர் ஆபத்தான சக்தியல்ல; ஆக்க வேலைக்கும் பயன்படக்கூடிய ஓர் அரும் பெரும் ஆற்றலாகும். மனித சமுதாயத்தை அடக்கியாளும் ஆட்சித் தலைவர்கள் மட்டும் அணுச் சக்தியை அழிவுத் துறையின் பக்கம் திருப்பிவிடாமல் ஆக்க வேலைகளுக்குப் பயன் படுத்த முனைவராயின், மனித சமுதாயம் மட்டற்ற நன்மையை அடையும். இணையற்ற இன்பம், உலகத்தில் அரசோச்சும். மின்சாரம் மனித சமுதாயத்திற்கு எங்கெந்த தகையில் பணி புரிகிறதோ அத்தனை வகைகளிலும், மின்சாரத்தைவிட மிகப் பல மடங்கு அதிகமான முறையிலும் சிறப்பான நிலையிலும் அணுச் சக்தி பணி புரியமுடியும். மோட்டார்களை ஓட்ட, ரயில் வண்டிகளை இழுக்க, கப்பல்களை இயக்க, இயந்திரங்களை உருட்ட, மலைகளைப் பிளந்து ஆறுகளைத் திருப்பி, உயிரைக் கொன்று தின்னும் பாலை வனங்களைப் பழமுதிர் சோலைகளாக மாற்ற, என்று உள்ள இத்தனைக்கும் அணுச் சக்தி பயன்படும். இயற்கையில் உள்ள குறைபாடுகளைக் கூட அணு ஆற்றலின் முலம்

திருத்தமுடியும் என்பதை சோவியத் ரஷ்யாவின் பொறி நூல் வல்லுநாகளில் ஒருவராகிய ஏ. மார்க்கின் என்பார் மிக அழகாக எடுத்து விளக்கியிருக்கிறார்.

“மலைகளைப் பிளந்து, மத்திய ஆசிய நதிகளைத் திருப்பி, யூரல் கடலுக்கும் காஸ்பியன் கடலுக்கும் வடக்கே உள்ள பாலை நிலங்களைச் செழிப்பான வயல்களாக மாற்றலாம். சகாரா பாலைவனத்திற்குப் பாசன வசதி செய்து அதனை வளம் செழிக்கும் வட்டாரமாக மாற்றலாம். பாரிங் ஜலசந்தியில் ஓர் அணைகட்டி, அங்கே காணப்படும் உஷ்ண நீரோட்டத்தை வட துருவத்திற்குத் திருப்பி, அங்கே நிரந்தரமாக உறைந்து கிடக்கும் பணியை உருகச் செய்து, அந்த வட்டாரத்தைப் பசுந்தரை ஆக்கலாம். லண்டன், பாரிஸ், பெர்லின், வார்சா, மாஸ்கோ, பீகிங் ஆகிய நகரங்களை இணைத்து ரயில் பாதை போடலாம்.” என்று தோழர் மார்டின் அண்மையில் அவர் எழுதியுள்ள ஓர் கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார். இத்தனையும் முழு உண்மை—வெறும் கற்பனையல்ல என்பதை எடுத்துக் காட்டுவதுபோல, அண்மையில், அமெரிக்காவிலிருந்து வந்திருக்கிறது ஓர் இனிய செய்தி.

அறத்தொடு பொருந்திய நீடித்த அமைதியை உலகில் நிலைநாட்ட வேண்டும் என்கிற அமெரிக்காவின் உறுதியைப் பிறநாட்டவர்க்கெல்லாம் அன்புடன் தெரிவிக்கும் கருத்துடன், அணுச்சக்தியால் இயக்குவிக்கப்படும் ஒரு வர்த்தகக் கப்பலை உலகம் முழுவதும் சுற்றிவர ஏற்பாடு செயயப்போவதாக, அமெரிக்கக் குடியரசின் தலைவர் ஐசனோவர் ஏப்ரல் இறுதியில் அறிவித்திருக்கிறார்.

அமெரிக்காவின் நோக்கம் எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். உலக அமைதியை நிலைநாட்டும் உன்னத எண்ணமாக இருக்கட்டும். அல்லது தன் நாட்டில் அணுச் சக்தி எந்த அளவு வளர்ந்திருக்கிறது பாரீர் என்பதை உலகுக்கு விளம்பரம் செய்யும் புது முறையாக வேண்டுமானாலும் இருக்கட்டும். நோக்கம் எதுவாக இருந்தாலும், அணுச் சக்தியைக் கொண்டு கப்பலொன்று இயங்க இருக்கிறது, அந்தக் கப்பல் அனைத்துலகத்தையும் சுற்ற இருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

அந்தக் கப்பலை இயக்குவதற்குத் தேவையான எரிபொருள், அடுத்தடுத்து நிரப்பப்பட வேண்டிய அவசியமில்லையாம். அந்தக் கப்பலில் இயங்குகின்ற அணுச்சக்தியின் மூலமாக கப்பல் ஆயிரக்கணக்கான மைல்கள் தொடர்ந்து செல்ல முடியுமாம்.

மகிழ்ச்சி--மகிழ்ச்சி--மட்டற்ற மகிழ்ச்சி இச் செய்தியை அறிய.

உண்மையிலேயே இப்படி ஒரு கப்பல் உலகத்தைச் சுற்றி வருமானால், அதனால் ஏற்படக்கூடிய

பயன் மிகவும் பெரிதாக இருக்க முடியும். ஆக்கத் துறையில் இத்தனை அருமை பயனை மனித சமுதாயத்திற்கு அளிக்கக் கூடிய அணுச் சக்தியை, வீணாக, மனித சமுதாயத்தை அழிக்கக்கூடிய மடமைத் துறையில் பயன்படுத்துகிறோமே, இது எத்தனைப் பேதமை எனகிற உணர்ச்சியை உலகை ஆளும் ஆட்சிப் பீடத்தவர்கள் நெஞ்சிலே, அந்தக் கப்பல், ஊட்டக் கூடுமல்லவா? அந்த நற்செயலை நிகழ்த்துவதற்காகவாவது, அணுக் கப்பல், அனைத்துலகையும் சுற்றி வர வேண்டியது அவசியம். மிக மிக அவசியம்.

இதற்குமா எதிர்ப்பு? ஏனோ முணு முணுப்பு?

இப்படித்தான் கூறவேண்டியிருக்கிறது குன்றக்குடி அடிகளாரின் மிக நேர்மையான வேண்டுகோள் ஒன்றைக் கூட ஒரு சிலர் எதிர்க்கின்றனர் என்பதை அறியும்போது.

தமிழ்நாட்டுக் கோவில்களில் தமிழ் மொழியிலேயே, இனி அர்ச்சனைகள் முதலிய வழிபாடுகளை நிகழ்த்த வேண்டும், அதுவே முறை என்று குன்றக்குடிகளார் தெரிவித்திருக்கிறார். இந்தக் கருத்தை வற்புறுத்தி அவர் செல்லுமிடந்தோறும் சொற்பொழிவாற்றி வருகிறார்.

இந்தக் கருத்தை அவர் வெளியிடுகிறார் என்பதை அறிந்ததும், ஒரு சிலர், சீறி பாய்கிறார்களாம்- சினம் கொண்டு அலைகிறார்களாம். ஆகுமா இப் போக்கு என்று கூவுகிறார்களாம். ஆபத்து வந்ததே இந்த மதத்திற்கு என்று அலறுகிறார்களாம். இந்த மாறுதல் மட்டும் வந்துவிட்டால், நமது ஆசாரம் அழிந்துவிடும்—பக்தி பொசுங்கிவிடும்—மந்திரங்கள் மாண்பை இழந்து விடும்—உலகம் தவிடுபொடியாகி விடும் என்றெல்லாம் அவர்கள் கொதித்தெழுந்து பேசுகிறார்களாம்.

ஏன் இந்த ஆத்திரமும் ஆவேசமும் என்பதுதான் நமக்குத் துளியும் விளங்கவில்லை. தமிழ்நாட்டுக் கோவில்களில் தமிழ் மொழியில் அர்ச்சனை முதலியன செய்வதுதான் முறை. அந்த முறையை, என்ன காரணத்தினாலோ நாம் இதுவரை பின்பற்றாமல் இருந்தோம். தமிழ் மொழிக்கு உரிய அந்தப் பெருமையை, சிறப்பை, அதிகாரத்தை, இதுவரையில் வட மொழிக்கு விட்டுக் கொடுத்து விட்டிருந்தோம். இதுவரையில் ஒரு தவறை இழைத்து வந்தோம் என்பதால், அந்தத் தவறை, இனியும் தொடர்ந்து செய்தல் வேண்டும் என்று பொருள்? ஒருமுறை தவறு செய்துவிட்டால், பிறகு, அதிலிருந்து மீளவே கூடாதா? ஏன் கூடாது? என்னவென்று எண்ணிக்கொண்டார்கள் தமிழ் மொழியை எதிர்ப்பவர்கள்?

மந்திரங்கள் வடமொழியில் சொல்லப்படாமல் தமிழ்மொழி

யில் சொல்லப்பட்டால் அவற்றின் சிறப்பு சிதைந்துவிடுமாம். பலன் அழிந்து விடுமாம். அழகு குலைந்து விடுமாம். அவற்றால் கிடைக்கவேண்டிய இன்பம் கிட்டாமல் தொலைந்து விடுமாம். சொல்கிறார்கள் சிலர் துணிந்து. நாம் கேட்கிறோம்—தமிழ் மொழி என்ன அத்தனைத் தாழ்வான மொழியா? வடமொழியால் சொல்லப்படும் அதே கருத்தைத் தமிழ் மொழியாற் கூறினால் பலன் கிட்டாது என்கிறார்களே அது எப்படிக் கிட்டாமற் போய் விடும்? ஆண்டவனுக்குத் தமிழ் தெரியாதா? தமிழிலே இறைவனை வழுத்தினால் இறைவனுக்குப் புரியாதா? வடமொழியால் வேண்டினால்தான் அருள் புரிவேன்—செந்தமிழாற் கேட்டால் செவி சாய்க்கமாட்டேன் என்று 'எல்லாம் வல்லவர்' எப்போதாவது கூறியதுண்டா? இல்லையே! பிறகு ஏன் இந்த ஆத்திரமும் ஆவேசமும்? எதற்காக இந்தக் கொதிப்பும் கொந்தளிப்பும்? தமிழ் மொழியிலே மந்திரங்களைச் சொன்னால் பலன் கிட்டாது, வேற்று மொழியிலே சொன்னால்தான் அது கிட்டும் என்று பேசுவதைவிடச் செந்தமிழுக்கு இழைக்கப்படும் அவமானம் வேறொன்று இருக்கமுடியுமா? எப்படி மனம் துணிந்தது இவர்களுக்கு முத்தமிழின் மீது இத்தனைப் பெரும் பழியை வீச?

தெளிவாகவே சொல்கிறோம் தமிழிலே அர்ச்சனைகளை இயம்புவதால் குற்றம் இல்லை. குற்றம் இல்லை என்பது மட்டுமல்ல, அது தான் முறை. தமிழ்நாட்டுக் கோயில்களில், தமிழ் மொழியை ஒதுக்கித் தள்ளிவிட்டு, பிறிதோர் மொழியில் அர்ச்சனைகளைச் செய்வதுதான் குற்றம். குன்றக் குடிகளார் விரும்பும் இச் சீர்திருத்தம், நீண்ட காலத்திற்கு முன்னரே செய்திருக்கப்பட வேண்டியதொன்று. இனியும் இதனைச் செய்யாதிருப்பது முறையல்ல. தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வோம் என்று பாடினார் கவிஞர் பாரதியார். வீதிதோறும் வீடு தோறும் செழிக்கவேண்டிய முழக்கம் கோயில்களில் மட்டும் செழித்தல் கூடாதா? அங்கும் தான் அது செழித்தல் வேண்டும். ஆமாம்! கட்டாயமாக!! யார் எதிர்த்தாலும்!!!

விசித்திரம்தான்!
ஆனால் விபரீதம்கூட!

"நீண்ட காலமாக இருந்து வருகிறது என்பதற்காகவே ஒன்றை ஒப்புக்கொண்டு விடாதே. பெரியவர்களெல்லாம் சொல்கிறார்கள் என்பதற்காகவே ஒன்றை ஏற்றுக்கொண்டு விடாதே, வேதங்கள் சொல்கின்றன—சாஸ்திரங்கள் புகல்கின்றன என்பதற்காகவே ஒன்றிற்குத் தலையசைத்து விடாதே. எந்தக் கருத்தாயிருந்தாலும் அதனை உன்னுடைய அறிவின் மூலமாக ஆராய்ச்சி செய்து பார். அதன் பிறகும் அது சரியென்று தோன்றுமானால் மட்டும் அதனை ஏற்றுக்கொள்" என்று, பேரறி

ஞர் புத்தர், 2500 ஆண்டுகளுக்கு முன்னரே: அழுத்தந் திருத்தமாக இயம்பியிருக்கிறார். "எந்தப் பொருளை நீ யாரிடம் கேட்டாலும் சரி, அந்தப் பொருளை அவர் சொல்கிறார் என்பதற்காகவே ஏற்றுக்கொண்டு விடாதே. அந்தப் பொருள் உண்மையான பொருளா என்பதைக் கண்டறிந்த பிறகுதான் நீ அதனை ஏற்றல் வேண்டும். அதுதான் அறிவுடைமை" என்று தெளிவுரை பகர்ந்திருக்கிறார் **அறிவின் தலைவர் திருவள்ளுவர்.** "மூட நம்பிக்கையா? அது ஓர் அருவருக்கத்தக்க பொருளாயிற்றே! நசுக்கிப் போடு அதை! ஒரு கணமும் தயங்காதே! உம்! சீக்கிரம்!" என்றார் பிரஞ்சு நாட்டுப் **பேரு மன்னர் வால்டேர்.** யார் எப்படி இடித்துச் சொன்னால் என்ன, இந்த நாட்டிலே, மிகப் பலர், இன்னமும், இந்த 1955-ம் ஆண்டிலும், மிகப் பல நிகழ்ச்சிகளில், மூட நம்பிக்கைக்கே முதலிடம் தந்து வருகின்றனர். அறிவின் துணையைக் கொண்டு எதனையும் ஆராய்ந்து பார்க்க மறுக்கின்றனர். மூடநம்பிக்கை இவ்வாறு அவர்கள் உள்ளத்தை முற்றுகையிட்டிருப்பதின் விளைவாக மிகப் பல தீமைகட்கும் ஆளாகின்றனர்.

இதோ ஒரு செய்தி!

ஐதராபாத்திலே ஒரு கணவர். அவருக்குத் தன் மனைவியின் ஒழுக்கத்திலே ஐயப்பாடு ஏற்பட்டது.

இப்படி ஓர் ஐயப்பாடு ஏற்பட்டால், அந்த ஐயம் உண்மையா அல்லவா என்பதைத் தெளிவு படுத்திக்கொள்ள யாது செய்தல் வேண்டும்?

அறிவின் நெறிவழி செல்வார் என்ன செய்வர்?

கண்களையும் காதுகளையும் கூர்மையாகத் தீட்டிக்கொண்டு சற்று விழிப்போடிருந்து நிகழ்ச்சிகளைக் கவனித்தறிவர். என்ன நேரத்தில் எங்கு செல்கிறாள்? எவரெவரிடம் எப்படியெப்படிப் பழகுகிறாள்? யார் யாரிடம் நெருங்கிய தொடர்பு கொள்கிறாள்? இவற்றையெல்லாம் கூர்ந்து கவனிப்பர்.

இதுதானே முறை? ஆனால் இந்த முறையைக் கையாளவில்லை அந்த ஐதராபாத் அதிசய மனிதர்.

பெரியதோர் வாணலியை எடுத்தார். ஏராளமான எண்ணெயை அதில் ஊற்றி, அதனைக் கொதிக்க வைத்தார். தளதளவென்று எண்ணெய் கொதிக்கும் போது மனைவியை அழைத்தார். உன் இரு கைகளையும் நுழை இந்த எண்ணெயிலே என்றார்.

ஏன் அப்படி ஒரு கட்டளை என்கிறீர்களா? அந்தக் கேள்விக்கான விடையிலேதான் இருக்கிறது விபரீதம்! கொதிக்கும் எண்ணெயிலே கற்புடைய மாது தன் கைகளை நுழைத்தால், அந்தக் கைகள் வெந்து கொப்பளிக்காமல் என்றும் போல இனி

திருக்கும் என்றும், கற்புநெறி தவறிய களங்க நெஞ்சுடையாள் தன் கைகளை நுழைத்தால் அக் கைகள் வெந்து கருகும் என்றும் ஓர் மூடநம்பிக்கை இந்த நாட்டிலே உண்டு. அந்த முழு மூட எண்ணத்தை மனமார நம்பியிருக்கிறார் அந்தக் கணவர். கணவர் மட்டுமல்ல மனைவியும் கூட. எனவேதான் கொதிக்கும் எண்ணெயிலே கைகளை விடு என்றார் அந்த மாவீரர்! அப்படியே ஆகட்டும் என்று அன்புடன் கூறி, அவ்விதமே செய்து விட்டார் அம்மையாரும்? விளைவு? கூறவா வேண்டும்? கைகள் வெந்து கொப்பளித்தன. செய்தியறிந்த மங்கையின் பெற்றோர், ஓடோடி வந்து அவளை அழைத்துச் சென்று மருத்துவ மனையில் சேர்த்திருக்கின்றனர்.

கற்புடையவளாக இருந்தாலென்ன, அந்த நெறியிலிருந்து நீங்கியவளாக இருந்தாலென்ன, ஆணானாலென்ன, பெண்ணானாலென்ன, எவராக இருந்தாலும், நீதிமுறை வழுவாத நல்லோரானாலும் கொலையும் களவும் நிதமும் புரிந்திடும் பண்பினரானாலும், கொதிக்கும் எண்ணெயிலே கையை நுழைப்பவர் எவரானாலும், கை வெந்தேபோகும் இது இயற்கை, கொதிக்கும் எண்ணெயின் பண்பு இது. தென்றலின் பண்பு இனிமையைத் தருவது. வெண்ணிலாவின் இயற்கை பால் ஒளியை வீசுவது. கதிரவனின் இயல்பு வெப்பத்தை வழங்குவது. இவைபோலத்தான் கொதிக்கும் எண்ணெயின் இயற்கை தன்னிடம் கையை நீட்டுவாரை வேகவைப்பது. நல்லவரா அல்லவரா எண்ணிப் பார்த்து நல்லவரானால் விட்டுவிடுவதும் அல்லவரானால் கைகளைச் சுடுவதும் என்கிற இயற்கை கொதி எண்ணெய்க்கு இருக்க முடியாது. சிறிதளவு அறிவுடையவரும் புரிந்துகொள்ளக்கூடிய எளிய உண்மை இது. ஆனால் இந்தச் சிறு உண்மையைக்கூட உணராதவர்கள் இந்த நாட்டிலே ஆயிரமாயிரம் உண்டு. உண்டு என்பதால்தான் இப்படிப்பட்ட கொதி எண்ணெய் நிகழ்ச்சிகள் அடிக்கடி நம் நாட்டில் நடந்தபடி இருக்கின்றன. நாள் இதழ்களிலும் இப்படிப்பட்ட செய்திகள் அடிக்கடி வந்தபடி இருக்கின்றன.

இப்படிப்பட்ட தீய செயல்கள் நம் நாட்டில் இனியாவது நடைபெறாமல் இருக்கவேண்டுமானால், மூட நம்பிக்கைகளால் விளையும் கொடுமைகளையும், பகுத்தறிவுப் பாதையில் இன்பநடை போடுவதால் ஏற்படக்கூடிய நன்மைகளையும், நாட்டின் தலைவர்கள்—ஏடு பல கற்றவர்கள்—மக்களுக்கு வழிகாட்டிகளாக இருப்பவர்கள்—ஆசிரியத் தொழில் புரிபவர்கள்—இன்ன பிறரெல்லாம் மக்களுக்கு எடுத்துக் கூறவேண்டும். அறிவின் வழியே சிறந்த வழி என்பதை நம் சமுதாயத்திற்கு உணர்த்தவேண்டும்.

(53-ம் பக்கம் பார்க்க)

படிப்பது எப்படி?

எல். ஜே. லார்சன், எம். ஏ., பி. எஸ்ஸி

எப்படிப் படிப்பது என்பது தெரியாமல் வகுப்பிலே பலர் தவறுகிறார்கள். நல்ல புத்தகங்கள் இருக்கின்றன; நல்ல ஆசிரியர்கள் இருக்கிறார்கள்; உள்ளமும் துடியாக இருக்கிறது. இருந்தாலும் பரீட்சையில் தவறுகிறார்கள். ஏன் தெரியுமா? படிப்பது எப்படி என்று அவர்களுக்குப் போதிக்கப்படவில்லை.

ஆசிரியர்கள் பங்கும் இதில் உண்டு. படிப்பது எப்படி என்பது எல்லா மாணவர்களுக்கும் தெரிந்திருக்கும் என்று அவர்கள் நம்பிவிடுகிறார்கள். அதனாலேயே குறிப்பிட்ட துறையில் தேர்ச்சி பெறுதற்குச் சாத்தியமான சில முறைகளின் நுட்பங்களை அவர்கள் மாணவர்களுக்குத் தெரிவிக்கத் தவறி விடுகிறார்கள்.

மாணவர்கள் எல்லோரும் ஒரே மாதிரியான அறிவைப் பெற்றவர்கள் என்று பல ஆசிரியர்கள் எண்ணி விடுகிறார்கள். இது தவறு. ஒரு குறிப்பிட்ட துறையில் பயிற்சிபெற, ஏற்கனவே கொஞ்சம் அறிவுப் பயிற்சி, அந்தத் துறையிலே முன்னேற விரும்பும் மாணவர்களுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். இத்தகைய அறிவுப்பயிற்சி மாணவர்கள் பெற்றிருக்கிறார்களா என்று ஆசிரியர்கள் சோதித்துப் பார்த்தார்களானால், மாணவர்களிடையே இருக்கும் குறைபாடுகள் எவை, பயிற்சித் துறை பூரண பலனளிக்க வேண்டுமானால் எவை எவை மீண்டும் போதிக்கப்பட வேண்டும் என்பதை அறிந்துகொள்வார்கள். பரீட்சையிலே தவறுபவர்களின் எண்ணிக்கையும் அப்பொழுது எளிதில் குறைந்துவிடும்.

படிப்பு உத்தமமாக அமைய வேண்டுமானால், மாணவர்கள் சில முறைகளைக் கையாள வேண்டும். இப்போது பள்ளி மாணவர்களும் கல்லூரிமாணவர்களும் சீரான சூழ்நிலையிலே பயிற்சி பெறுகிறார்கள் என்று சொல்ல முடியாது. தங்களுடைய முயற்சியைத் தீவிரமாக்க அவர்களுக்கு விருப்பந்தான். ஆனால் அதற்கு வழி தெரியாமல் திண்டாடுகிறார்கள். அவர்களுக்குச் சாதகமாக சில குறிப்பு கீழே தருகிறோம். ஆரம்ப ஆசிரியர்களும் இவற்றைக் கவனிப்பது நல்லது. பாலப் பருவத்திலிருந்தே ஒரு செம்மையான படிப்பு முறையை வளர்ப்பது அவர்களுடைய கடமையும் கூட.

கீழே கொடுக்கப்பட்ட விதிகளைக் குறுக்கியோ நீட்டியோ அவரவர்களுடைய வழக்கத்திற்கேற்ப, உசிதம்போல் மாற்றி

அமைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு விதியையும் பற்றி நாங்கள் விவாதிக்கவில்லை. விதியை மாத்திரம் வெறுமனே கொடுக்கிறோம். அவரவர்கள் தேவைக்குத் தகுந்தபடி சுவீகரித்து, அனுபவத்தால் லாபம் அடையலாம்.

விதிகள்

1. உடலைச் செம்மையாக ஆரோக்கியத்துடன் வைத்துக் கொள்ள வேண்டும்.

2. அறிவுப் பயிற்சிக்குத் தடையாக கண் மங்குதல், செவி மந்தமாகுதல், பற்கள் செம்மையின்மை, தொண்டையிலே சதை படர்தல், சரியாக, சுவாசிக்க இயலாமை இன்னும் இவை போன்ற குறைகள் இருந்தால், அவை சீக்கிரமாக நிவர்த்திக்கப்பட வேண்டும்.

3. சூழ்நிலை நன்கு அமைதல் வேண்டும். வெளிச்சம், உஷ்ணம், உடை, ஆசனம் இவையெல்லாம் சாதகமாக அமையப் பெற்றிருக்க வேண்டும்.

4 குறிப்பிட்ட நேரத்திலே பயிற்சி முறையைத் தொடங்க வேண்டும்.

6. சாத்தியப்படும்போது, தினசரிப் பாடங்கள் முடிந்தவுடன் புதிதாக என்ன படிக்க வேண்டும் என்பதை முன்னலேயே நிர்ணயம் செய்து கொள்ளுங்கள்.

7. தாமதமாமல் உடனே ஆரம்பிக்க வேண்டும்.

8. பயிற்சியில் வணங்கி மனத்தைச் செலுத்த வேண்டும்.

9. வேலை செய்யும்பொழுது, அதில் பூரணமான ஈடுபாடு இருக்க வேண்டும்.

10. வணங்கிப் படித்தல் ஒரு தொல்லையாகி விடக்கூடாது.

11. கற்க வேண்டும்; கற்றபின் அதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

12. எல்லாவற்றிற்கும் ஒரு இலட்சியம் அமைத்துக் கொள்ள வேண்டும்.

13. ஆசிரியருக்காக வேலை செய்கிறோம் என்ற உணர்வு அகலவேண்டும்.

14. கூடிய வரை யாருடைய சாதகத்தையும் எதிர்பார்க்கக் கூடாது.

15. இலட்சியத்தைப் பற்றி ஒரு தெளிவான வடிவம் மனதிலே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

16. புதியன தொடங்குமுன் பழைய பாடத்தை எண்ணிப் பார்க்க வேண்டும்.

17. படிக்கவேண்டியன குறித்து ஒரு பொது நோக்கு ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

18. கற்கும்போது சில கடினமாக இருக்கும்; சில எளிதாக இருக்கும். கடினமானவற்றிலிருந்து எளிதானவற்றிற்குச் செல்வதா? அல்லது எளிதானவற்றிலிருந்து கடினமானவற்றிற்குச் செல்வதா,

எதிர்பார்த்த பலனைத் தருகிறது என்பதைத் திட்டப்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள்.

19. பின்னால் எந்த சக்திகளுக்கு அதிகம் சந்தர்ப்பம் ஏற்படுமோ அந்த சக்திகளுக்கு இப்பொழுதே பயிற்சி கொடுத்துக் கொள்ளுங்கள்.

20. சக்திகள் எங்கே குறைபாடு உற்றிருக்கின்றனவோ அங்கே அதிகம் கவனம் செலுத்துங்கள்.

21. முக்கியமானவை மாத்திரமேயல்ல, அதற்குக் கொஞ்சம் மேலேயே, ஆயத்தமாக கிரகித்து வைத்துக் கொள்ளுங்கள்.

22. அதனதன் முக்கியத்துவத்திற்குத் தகுந்தபடி அவற்றைப்பற்றி நிர்ணயம் கொண்டிருப்பதோடு அடிப்படையான சில உண்மைகளை நினைவில் கொள்ள முயலுங்கள்.

23. சில அவ்வளவு முக்கியமாக இரா; அவற்றிற்கு ஒரு வித தற்காலிகமான கவனந்தான் செலுத்த வேண்டியிருக்கும். அதையும் நிர்ணயித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

24. பயிற்சி சுமாரான காலம் நடைபெறட்டும்; ஆனால் களைப்போ சோர்வோ தட்டும்படி அவ்வளவு நீளமாக இருந்துவிட வேண்டாம்.

25. நெட்டுரு பண்ணும் பொழுது, ஒரே அடியாக அல்லாமல், பல தறுவாய்களில் செய்ய முயலுங்கள்.

26. பயிற்சி எங்கு நிறுத்தப்பட வேண்டுமோ, அங்கு நிறுத்திக்கொள்ளுங்கள். மீண்டும் நினைவுப்படுத்திக்கொள்ள உசிதமான வழியில் ஒரு மார்க்கம் வகுத்துக் கொள்ளுங்கள்.

27. தீவிரமான பயிற்சியில் ஈடுபட்ட பிறகு கொஞ்சம் நிதானியுங்கள்; உங்கள் உள்ளம் பயின்றதைச்சிந்திக்கட்டும். பிறகு புதிய பாடம் தொடங்குங்கள்.

28. பல முறைகளையும் கடைப்பிடித்து, வேலையில் உங்களுக்குள்ள ஈடுபாட்டை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

29. பொது விதிகளுக்கு நீங்களே உதாரணம் அமைத்துக் கொண்டு அவற்றைப்பற்றி சிந்தியுங்கள்.

30. ஒவ்வொரு பத்தியையும் படித்த பிறகு மனத்தாலேயே வரிசையாக நினைவுக்குக்கொண்டு வர முயலுங்கள்.

31. முக்கியமானவற்றை கோடிட்டு அதன் மதிப்புத்தெரியும்படி உங்கள் புத்தகத்தில் வைக்கலாம்.

32. பெரிய கட்டுரையாகக் இருக்கலாம். அதைப் பயின்று தேற வேண்டுமானால், குறிப்புகள் எடுத்து அதை நெட்டுரு செய்து வைத்துக்கொள்ளுங்கள்.

33. பயின்றதைக் கூடிய வரை அதுவும் சீக்கிரமாக நடை

முறையில் உபயோகப்படுத்த முயலுங்கள்.

34. சில முக்கியமானவையாக இருக்கும். இலக்கணக் குறிப்புகள், விதிகள், தேற்றங்கள், தேதிகள், பொதுவான குறிப்புகள் இவை போல்வன; இவற்றைப் புரிந்துகொண்டு, நெட்டுரு செய்வது நல்லது.

35. நெட்டுரு பண்ணவேண்டியவை சிரமமாயிருந்தால், அதைச் செய்வதற்கு நீங்களாகவே ஒரு உசிதமான முறை வகுத்துக் கொள்ளுங்கள்.

36. நெட்டுரு பண்ணுவதைப் பத்தி பத்தியாகப் பிரிக்காமல் முழுவதையும் சேர்த்தே பண்ணுங்கள்.

37, இரைந்து படித்துப் படித்து நெட்டுரு பண்ணுவதே நல்லது; கூட வேகமாகவும் படிக்க வேண்டும்.

38. ஆசிரியர்களின் உரையை தனி முறையில் வகுப்பில் எடுத்துக்கொண்டு, அதைத் தனிக் கட்டுரையாக வீட்டில் வந்து நீங்கள் எழுதிக் கொள்ளலாம். இது மிகுந்த பயனைத் தரும்.

—"நல்வழி"

"ஆரம்பக் கல்வி ஆபீஸ்"

★

94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

★

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-8

ரிகார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-0

பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-0

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-0

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-0

(தபால் செலவு உட்பட)

★

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

உலகம் வியக்கும் உயரிய வாழ்க்கை

கண்களோ காணமாட்டா. காதுகள் செவிடு. வாயும் பேசாது. என்றாலும் அந்த அம்மையாரின் செயல் திறத்தையும் அறிவு வளத்தையும் கண்டு உலகமே வியக்கிறது. யார் அந்த அம்மையார்? எப்படி அவர் உலகம் போற்றும் உயரிய நிலையினரானார்? எத்தகைய சிறப்பினது அவரது அதிசய வாழ்க்கை? இந்த விவரங்களை யெல்லாம் தெளிவாக எடுத்து விளக்கும் இக் கட்டுரை, "ஹிந்து" நாளிதழில் திரு கே. கே. துக்கால் என்பவரால் தீட்டப்பட்டு, தமிழில் "அமெரிக்கன்ரிப்போர்ட்டர்" என்னும் ஏட்டில் வெளியிடப்பட்டது.

ஆசிரியர்கள் காண, கண்டு ஊக்கமும் ஆக்கமும் பெற, இக் கட்டுரை இங்கே தரப்படுகிறது:—

"பத்தொன்பதாம் நூற்றுண்டில் தோன்றிய மனங்கவரும் மக்கள்" நெப்போலியனும் ஹெலன் கெல்லருமாவர் என்று மார்க் டுவையின் ஒரு தடவை சொன்னார். இன்று இருபதாம் நூற்றுண்டின் அரைப் பகுதி கழிந்து விட்டது. ஹெலன் கெல்லர் இக் காலத்திலும் சிறப்புமிக்க பெண் மணியாக விளங்குகிறார். அவருக்கோ காது கேளாது, கண் தெரியாது. ஆயினும் அவர் ஒரு நூலாசிரியர், கல்வித் துறை அறிஞர்.

ஹெலன் கெல்லருக்கு வயது எழுபத்து நான்கு. குழந்தைப் பருவம் முதல் இந்த அம்மையாருக்குக் கண் தெரியாது. காது கேளாது, பேச முடியாது. ஆயினும் அவர் இந்த மூன்று இடர்ப்பாடுகளையும் வென்று உலக முழுவதிலும் பார்வை உள்ளவர்களுக்கும் பார்வை இல்லாதவர்களுக்கும் ஊக்கமூட்டக்கூடியவராகி விட்டார்.

நம்பிக்கையூட்டும் பெண்மணி

மிஸ் கெல்லர் பெப்ரவரிமாதத்தில் இந்தியாவுக்கு வந்தார். இந்தியா, பர்மா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் நான்கு மாதங்கள் சுற்றுப்பிரயாணம் செய்தார். இது 40,000 மைல் சுற்றுப்பிரயாணம். வெளிநாட்டு அந்தகருக்காக ஏற்பட்டுள்ள அமெரிக்க தர்ம ஸ்தாபனமும் அவர்சுற்றுப்பிரயாண நாடுகளின் அரசாங்கங்களும் இவரது சுற்றுப் பிரயாணத்துக்கு உதவி அளித்தன.

உடற் குறையுள்ள லக்ஷக் கணக்கான மக்களுக்கு ஊக்க மூட்டுபவராக விளங்கும் கண் தெரியாத இப் பெண்மணி இதற்குமுன் ஐந்து முறை உலகத்தைச் சுற்றிவந்திருக்கிறார். கண் தெரியாதவர்களுடைய கஷ்டங்களை மக்கள் உணர்ந்து உதவிசெய்ய ஊக்கமூட்டுவதற்காக அவர் இவ்

வாறு சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறார். இந்தப் பிரயாணத்தில் அவர் கண் தெரியாதவர்களுக்காகச் செய்யப்படும் காரியங்களைப் பார்வையிடுவார்; தொண்டர்கள், வணிகர்கள், உத்தியோகஸ்தர் கூட்டங்களில் பேசுவார்; பெண்கள் சங்கங்களிலும், மத சம்பந்தமான சங்கங்களிலும், முக்கியமான வைத்திய சாலைகளிலும், சர்வகலா சாலைகளிலும் அவர் பேசுவார்.

கண் தெரியாதவர்களுக்கும், காது கேளாதவர்களுக்கும் முழு வாழ்வு பெறும் உரிமை கிடைப்பதற்காக உழைப்பதே அவரது வாழ்க்கையின் நோக்கம். அவரது எழுத்தையும் பேச்சையும் விட அவரது வாழ்க்கையே முக்கியமானது. தொட்டுப் பார்த்து அவர் விசாரிக்கப் படித்ததும், நண்பர்களுடைய கண்களின் துணையால் அவர் 'பார்க்கும்' பயிற்சி பெற்றதும், சங்கீதம், சத்தம்,நாட்டியம், அசைவு இவற்றை அவர் 'உணரப்' படித்ததும் முக்கியமானவை. தவிர்க்க முடியாத இயற்கையான இடர்ப்பாடுகளை மேற்கொள்ளும் ஆற்றல் மனிதனுடைய உள்ளத்திற்கு உண்டு என்பதற்கு அவர் சிறந்த உதாரணமாக இருக்கிறார்.

1880, ஜூன் 27-ல் அலபாமாவில் டஸ்கம்பியாவிலுள்ள ஒரு தோட்டத்தில் அமெரிக்க வரலாற்றில் சிறப்புற்று விளங்கும் ஒரு குடும்பத்தில் மிஸ் ஹெலன் கெல்லர் பிறந்தார். அவரது தந்தையார் அமெரிக்க உள்நாட்டுப் போரில் (1865-69) தென் பகுதிப் படையில் கேப்டனாக இருந்தார். அவர் ஒரு பத்திரிகை ஆசிரியராகவும் இருந்திருக்கிறார். ஹெலன் நல்ல உடல் நலமுள்ள குழந்தையாக இருந்தார்; அசாதாரணமான அறிவுடைத்தவராகவும் விளங்கினார். ஆறு மாதத்தில் அவர் பேசினார். ஒரு வயதானதும் அவர் நடந்தார். அவர் பத்தொன்பது மாதக் குழந்தையாயிருந்தபோது, அவருக்கு மிகக் கடுமையான காய்ச்சல் ஒன்று வந்தது; அதனால் அவர் பார்வையிழந்தார்; கேட்க முடியாதவருமாயினார். சாதாரண முறைபற்றி அவர் படிக்கக்கூடாதவரானார். ஆதலால் அவர் நாகரீகமற்ற குழந்தையாக வளர்ந்தார். அவர் தமக்கு வேண்டியதைச் சைகை காட்டிக் கேட்பார்; அவர் கேட்டதை அவரது பெற்றோர் கொடுக்காவிட்டால், அவர் மிகவும் கோபங்கொள்வார்.

அவருக்கு வயது ஆறு ஆயிற்று. பாஸ்டனில் பெர்கின்ஸ் நிலையம் என்னும் கண் தெரியாதவர் பாடசாலையில் ஆசிரியராயிருந்த மிஸ் ஆனி சல்லிவன் என்னும் பெண்மணி ஹெலனுக்கு ஆசிரியையாக நியமிக்கப்பட்டார்.

மிஸ் ஹெலன் கெல்லர் தாம் முதன் முதல் தம் ஆசிரியையைக் கண்டதைத் தமது வாழ்க்கையின் மிகவும் முக்கியமான

நிகழ்ச்சி என்று சொல்கிறார். மிஸ் ஹெலன் கெல்லர் "என் வாழ்க்கை வரலாறு" என்னும் நூலில் தமது ஆசிரியை முதன் முதல் தம் வீட்டுக்கு வந்ததைப் பின்வருமாறு எடுத்துரைக்கிறார்:

வாழ்வளிக்க வந்தவர்

"எனக்கு ஏழு வயதாவதற்கு மூன்று மாதத்திற்கு முன், 1867 மார்ச் 3-ந் தேதி பிற்பகலில் நான் யாதோ ஒன்றை எதிர்பார்த்தவளாக வீட்டின் முன் கூடத்தில் அமைதியாய் நின்றுகொண்டிருந்தேன். கைகளால் என் தாயார் எனக்கு உணர்த்தியதைக் கொண்டும் அங்குமிங்கும் அவசர அவசரமாய் அவர் நடந்துகொண்டிருந்ததைக் கொண்டும் யாதோ அசாதாரணமான ஒரு சம்பவம் நடக்கப்போகிறது என்று நான் ஊகிக்கலானேன். ஆதலால் நான் வாசலுக்குப் போய்ப் படியில் நின்று காத்துக் கொண்டிருந்தேன்.

"யாரோ எனக்கு நேரே நடந்துவருவது தெரிந்தது. அது என் தாயார் என்று நினைத்து என் கையை நீட்டினேன். யாரோ ஒருவர் கையைப்பிடித்து அணைத்துக்கொண்டார். அவரே எல்லாவற்றையும் எனக்கு வெளிப்படுத்த வந்தவர். எல்லாவற்றையும் விட அவரே என்னிடத்தில் அன்புகூற வந்தவர். "எனக்கு ஒளி வேண்டும், ஒளி வேண்டும்" என்பதே என் உள்ளத்தினின்று சொல்லின்றிப் பிறந்த குரல். அந்த நேரத்திலேயே வாழ்க்கையின் ஒளி என்மீது வீசலாயிற்று."

ஹெலன் முகம் வெளிறிய பலவீனமான பயங்கொள்ளிப் பெண் அல்ல என்றும் உடல் உரமும் உடல் நலனும் உள்ளவள் என்றும், குதிரைக் குட்டிபோல் துள்ளி விளையாடுபவள் என்றும் மிஸ் சல்லிவன் கண்டு ஆச்சரியமடைந்தார். முதல் நாளிலேயே மிஸ் சல்லிவன் ஹெலனின் கையில் எழுத்துக்களை உணர்த்தத் தொடங்கினார்.

"என் ஆசிரியை என்னை ஒரு அறைக்குள் கூட்டிக்கொண்டு போய் எனக்கு ஒரு பொம்மையைத் தந்தார். நான் சிறிதுநேரம் அதை வைத்து விளையாடினேன். அதன் பின் அவர் மெல்ல என் கையில் D-O-L-L என்னும் எழுத்துக்களைக் காட்டினார். உடனே அந்த விரல் விளையாட்டு எனக்கு மிகவும்விருப்பமாயிற்று; நானும் அவ்வாறே செய்ய முயன்றேன்."

சில மாதங்களில் 800 சொற்களைப் படித்துவிட்டார். அவற்றை எழுதினார்; பிரெய்ஸ் எழுத்திலும் எழுதினார். அறிவு பெற அவருக்கு இருந்த ஆசைக்கு ஒரு அளவே இல்லை. அவர் ஆச்சரியமான முன்னேற்றமடைந்தார். மிஸ் சல்லிவன் தம் நண்பர் ஒருவருக்குப் பின்வருமாறு எழுதினார்: "இந்தக் குழந்தைக்குக் கல்வியூட்டுவது என் வாழ்க்கையின் முக்கிய சம்பவமாக இருக்கும்

அவள் விசேஷமான ஆற்றல் உள்ளவள்; நான் அதனை அபிவிருத்தி செய்ய முடியும் என்பது என் நம்பிக்கை.''

வயது பத்தாயிற்று. நியூயார்க்கிலுள்ள ஊமையர் பாடசாலைக்குத் தலைமையாயிருந்த மிஸ் சேரா புள்ளரிடம் படிக்கும்படி ஹெலனைக் கூட்டிக்கொண்டு போனார்கள். ஹெலனுக்கு ஒலியைப்பற்றி ஒன்றும் தெரியாதாதலால், அவர் அல்லும் பகலும் ஒவ்வொரு சொல்லையும் மிகவும் வருந்திப் படிக்கவேண்டியதாயிற்று. அலபாமாவுக்குப் போகும்போது தம் சகோதரியிடம் தாம் ஊமை அல்ல என்று சொல்லிவிடவேண்டுமென்று அவர் எண்ணினார். அவ்வெண்ணம் அவருக்கு ஊக்கமூட்டியது.

கூட்டத்தில் பேசுகிறார்

பிற்காலத்தில் ஹெலன் கூட்டத்தில் பேசப் படித்துக்கொண்டார். பொதுக் கூட்டத்தில் பேசுவதற்கு அவர் மூன்று ஆண்டுகள் பழகினார். அவர் தமது சத்தத்தை ஒரு நெறிப்படுத்த வேண்டியதாயிற்று.

அவர் லத்தீன் மொழியும், பிரஞ்சும், ஜெர்மனும் பயின்றார். பதினாறுவது வயதில் அவர் செயற்கரும் செயலொன்று செய்தார். அவர் அமெரிக்காவில் மஸாச் குஸெட்ஸிலுள்ள கேம்பிரிட்ஜில் ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தின் பெண்டிர் பகுதியாகிய ராட்கிளிப் கல்லூரியில்சேர்ந்தார். எட்டு வருஷங்கள் அவர் பெரு முயற்சிசெய்து படித்தார். அவருடைய ஆசிரியையும் அவரோடு கல்லூரிக்குச் சென்று விரிவுரைகளைக் கையில் எழுதிக் காட்டவேண்டியதாயிற்று. படிக்கவேண்டியவைகளை ஆசிரியை படித்துக் காட்டவேண்டியதாயிற்று.

1904-ல் ஹெலன் படிப்பை முடித்துக் கலைப்பட்டம் பெற்றார். ஆங்கில மொழியில் அவர் பெற்றிருந்த புலமைக்காக அவர் விசேஷமாக கௌரவிக்கப்பெற்றார். ராட்கிளிப்பில் அவர் இருந்த காலத்தில் இரண்டாவது வருஷத்தில் அவர் தமது முதல் புத்தகத்தை எழுதினார். ''என் வாழ்க்கை வரலாறு'' என்பது அதன் பெயர். அது தொடர்ச்சியாக அமெரிக்கப் பெண்டிர் பத்திரிகை ஒன்றில் வெளியிடப்பட்டது. அதனால் அவர் உலகப் புகழ் பெற்றார். அதுமுதல் பொதுவாழ்க்கையில் மிகவும் ஊக்கமூட்டும் ஒருவராக மிஸ் ஹெலன் கெல்லர் விளங்குகிறார்.

வேறு பல நூல்களும் அவர் எழுதியிருக்கிறார். அமெரிக்காவிலுள்ள பத்திரிகைகள் பலவற்றிற்கு அவர் கட்டுரைகளும் எழுதியிருக்கிறார்.

புத்தகங்கள் எழுதும்போது அவர் மிகவும் வருந்தி உழைக்க வேண்டியதிருக்கிறது. அவர் சாதாரண டைப்ரைட்டரையாவது பிரேயில் எழுத்து எழுதும் கருவியையாவது பயன்

படுத்துகிருர். அவர் விரைவாக எழுதமுடியாது: அவர் தாம் எழுதியவற்றைத் திரும்பப் படிக்க முடியாது. அவரது தளராத முயற்சிக்கு ஒரு அளவே இல்லை.

கவிதையும் இலக்கியமும் சங்கீதமும் கலையும் அவருக்கு மிகவும் விருப்பம். அவர் சினிமாவுக்குப் போகிருர். அவரோடு செல்வோர் அவரது கையில் கதையை எழுதிக் காட்டுகின்றனர். இசையை ஒளி அதிர்ச்சிகளைக் கொண்டு அறிந்து அவர் இன்புறுகிருர். சிற்பங்களைக் கையால் தொட்டுப் பார்த்து அவர் மகிழ்கிருர். மார்க் டுவையினின் நகைச்சுவையை ஒலி அதிர்ச்சியால் அவர் உணர்ந்துகொண்டார். என்ரிக்கோ காருஸோவின் இனிய குரலை ஹெலனின் கைகள் உணர்ந்தன. ஜாஸ்கா ஹெய்பெட்ஸ் வயலின் மீட்டிய போது ஹெலன் அதில் தமது கையை வைத்து இசையின்பம் துய்த்தார். பியானேவில் கையை வைத்து மென்மையான அதிர்ச்சியையும் நுண்மையான இசையையும் அறிந்து கொள்கிருர். சென்ற ஆண்டு அவர் விரல் நுனியால் ஜனதிபதி ஐஸன் ஹாவர் புன்னகை புரிந்ததைக் "கண்டார்"

குழந்தைப் பருவம் முதல் ஹெலன்கெல்லருக்கு பெர்ஞர்ட்ஷா, ரவீந்திரநாத்தாகூர் ஆல்பர்ட் ஜன்ஸ்டன் போன்ற உலகப் பெரியார் பலர் தெரியும். ஜனதிபதி குரோவர் கிளீவ்லன்ட் (1993-97) முதல் அவருக்குப் பின்வந்த ஜனதிபதிகள் யாவரும் அவருக்குத் தெரியும்.

அவர் தனிமையாய் அமைதியாயிருக்கும்பழக்கம்உள்ளவர்.

ஹெலன் கெல்லரிடம் நற்பண்பும் நன்னேக்கமும் கடும் உழைப்பும் கமழ்கின்றன. இருள் நிறைந்த தம் வாழ்க்கையை அவர் இனியதாக்கியதுமன்றி, தம் அறிவாற்றலால் தம்மைப் போல் துயருற்று வருந்துவோருக்காக அவர் உழைக்கிருர்.

பின்வருவன அவரது நிலையைப் புலப்படுத்தும். "நல்ல நண்பர்களும் விருப்பமான வேலைகளும் எனக்குக் கிடைத்ததால் என் வாழ்க்கை இன்பம் நிறைந்ததாயிற்று. என் குறைபாடுகளைப்பற்றி நான் எண்ணுவதே இல்லை. அவற்றை நினைத்து நான் வருந்தியதே இல்லை. சிற்சில சமயங்களில் ஒருவிதமான ஆவல் சிறிது ஏற்படுவதுபோல் தோன்றும்; ஆனல் அது பூக்களில் பட்ட காற்றுப்போல அகன்றுவிடும். காற்று கடந்து போகிறது; பூக்களோ திருப்தியாக இருக்கின்றன."

கனக்டிக்கட் ராஜ்யத்தில் காட்டில் ஒரு நல்ல வீட்டில் அவர் குடியிருக்கிருர். வெட்ட வெளியில் ஒரு மூலையில் கல் தூணில் ஒரு ஜப்பான் விளக்கு ஒன்று நிற்கிறது; அது எப்பொழுதும் எரிந்துகொண்டேயிருக்கிறது. அவரது வாழ்நாளில் அது அணைந்துபோகாது. அது ஒரு அடையாளமாக அங்கு நிற்கிறது.

புது வைரம்

இந்நாளில் அமெரிக்காவிலிருந்துவரும் செய்திகள் அரசியலையும் அணுக்குண்டையும் பற்றியேதான் இருக்கின்றன. இருந்தாலும் நடு நடுவே சில ருசிகரமான விசேஷச் செய்திகளும் வராமலில்லை. சமீபத்தில் அமெரிக்காவிலுள்ள ஜெனரல் எலக்டிரிக் கம்பெனியின் ஆராய்ச்சி நிலையத்தில் செயற்கையாக வைரம் செய்திருக்கிறார்களாம். இதைப்பற்றித் தடபுடலாகச் செய்தி வந்ததோடு, செயற்கை வைரங்கள் ஏராளமாகச் செய்யப்பட்டால் எப்படி தென் ஆப்பிரிக்க வைர மார்க்கட்டு தலைகீழாகக் கவிழும் என்றெல்லாம் ஹேஷ்யங்கள் கூறப்பட்டிருந்தன. செயற்கை வைரம் என்றால் ஏதோ 'ரங்கூன்' வைரத்தைப்போல் 'இமிடேஷன்' டால் அடிக்கும் சரக்கு என்று எண்ணிவிடவேண்டாம்! அசல் வைரத்தைப் போன்றதுதான். ஆனால், மனிதன் செய்தது. ஹைட்ரஜன் குண்டுகளையும் அணுக்குண்டுகளையும், அனாயாசமாகப் பண்ணி மலைகளென வீதி குவிக்கும் இக்காலத்தில் வைரம் செய்யப்பட்டிருப்பதில் என்ன வேடிக்கை என்று தோன்றலாம். இயற்கையன்னை எப்படி வைரத்தை உண்டாக்குகிறாள் என்று பார்த்தால் செயற்கையில் உள்ள கஷ்டங்கள் தெரியும்.

வைரம் ஒளி வீசும் அழகியதோர் கல். இதன்மேல்தான் மாதர்களுக்கு ஏன் இந்த நாட்டம்? பொன்னும் புஷ்பராகமும் சிவப்பும் பச்சையும் இருந்தாலும் வைரத்தின்மேல் உள்ள மோகம் ஒருநாளும் குறையாது. வைரம் மிக உறுதியானது. இதனால்தான் மிகவும் கெட்டியான பொருள்களை வைரத்தோடு ஒப்பிடுகிறோம். வைரம் பாய்ந்த மரமும் வைர மனம் படைத்தவர்களும் நமக்குத் தெரியாதா? மாதர் அணிகலனாகிய இந்த வைரத்தை ஆண்களும் விரும்பி அணிந்துகொள்ளுகிறார்கள். என்றாலும் இது மிகக் குறைவு. வைரம் மிக விலையுயர்ந்ததால் வைரத்தை அடையமுடியாத ஆத்மாக்கள் ரங்கூன் வைரத்தின் மேல் கடைக்கண் நோக்குகின்றன. ரங்கூன் வைரம் வெறும் கண்ணாடிதான். ஆனால் நிஜ வைரம் இன்னும் மட்டமான அடுப்புக் கரியால் ஆனது என்று சொன்னால் நீங்கள் மலைத்துப் போவீர்கள். சாதாரண அடுப்புக் கரிதான் வைரமாக மாறுகிறது. இதுதான் இயற்கையன்னையின் லீலாவினோதங்களில் ஒன்று. பலகோடி வருஷங்களுக்கு முன் "கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நின்ற" நெடுமரங்கள், காலக்கிரமத்தில் கீழே விழுந்தன. மரத்தின்மேல் மண் வந்து மூடிக்கொண்டு மரத்தைப் புதைத்து விட்டது. பூமியி

னுள்ள சூட்டால் மரம் கருகிக் கரியாயிற்று. பூமிக்குள் புதைந்து கிடந்த கரி பூமியின் மாறுதல்களுக்கு இலக்காகியது—மேலே மேலே மண் வந்து மூட மூடக் கீழேயுள்ள கரியின் மேல் அழுத்தம் அதிகமாகியது. அபாரமான அழுத்தத்துடன் மகத்தான சூடு வேறு சேர்ந்து கொண்டது. இவைகளால்தான் கரி புது ரூபத்தில் ஒளி வீசும் வைரமாக வெளிவர முடிந்தது. இதுதான் இயற்கையில் வைரம் உண்டாகும் விதம். எல்லா வைரமும் அழகாகவும் படிகத்தன்மை உடையதாயும் சுத்தமாயும் இருக்க வேண்டுமென்பதில்லை. மட்டரகமான கருப்பு வைரங்கள் பல. இவைகளும் மிகக் கெட்டியாக இருப்பதால் இவைகளைக் கொண்டு கண்ணாடிகளை வெட்டுதல் கற்களைக் குடைதல் போன்ற பல தொழில் வேலைகள் செய்யப் படுகின்றன. மிக நல்லவைகள் மாதர்களின் அணிகலன்களாகவும் மன்னர்களின் மகுடங்களிலும் இடம்பெற்றன.

நம் நாடு ஆதிகாலத்திலிருந்து வைரத்துக்கும் அழகிய ஆபரணக் கற்களுக்கும் பெயர் போனதாய் இருந்து வந்தது. பண்டைக்காலத்தில் நம்முடன் வர்த்தகம் நடத்திய கிரேக்கர்கள் வைரம் தென் இந்தியாவில் கிடைத்தது பற்றிக் கூறியிருக்கிறார்கள். கோல்கொண்டாவிலும் ஆந்திர நாட்டின் ஒரு பகுதியிலும் வைரம் கண்டெடுக்கப்பட்டதாம். சமீப காலத்தில் சரித்திரப் புகழ் பெற்ற வைரங்கள் பல இந்தியாவில் தோன்றியிருக்கின்றன. கோஹினூர் என்பது மிகப் பிரசித்தி பெற்றது. விலை மதிக்க முடியாதது. மொகலாய ஆட்சிக் காலத்தில் பொன்னையும் வெள்ளியையும் வைடூரியத்தையும் நிலத்தையும் மென்சிகப்பையும் வைத்து இழைத்து உருவான மயிலாசனத்தின் மகுட மணியாக விளங்கியது கோஹினூர். பின்னாளில் இந்தியாவைத் தாக்கிச் சூறையாடிய பலருள் ஒருவனும் பாரசீகத்தவனுமான நாதிர்ஷா கோஹினூரைக் கண்ணைப் பறிப்பதுபோல் கொண்டு போய்விட்டான். அவன் அதை வைத்துக் கொண்டு நெடுநாள் வாழவில்லை. நாதிர்ஷாவிடமிருந்து கோஹினூர் லாகூர் அரசனிடம் கைமாறி, பின்னர்க் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வந்தது. 'கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது' போலவும் 'பழம் நழுவிப் பாலில் விழுந்தது' போலவும் கொள்ளையே இலக்காக ஆறாயிரம் மைல் கடந்து வந்த வெள்ளைக் கூட்டத்துக்குக் கோஹினூரும் மயிலாசனமும் லகுவாகக் கிடைத்துவிட்டன. காதும் காதும் வைத்தாற்போல் கோஹினூர் லாகூரிலிருந்து சென்னை வந்து கப்பலேறிப் பின் விக்டோரியா ராணியிடம் அடைக்கலம் புகுந்தது. ஒரு நூறு ஆண்டுகளாக இங்கிலாந்தின் மணி மகுடத்தின் திலகமாக விளங்கி வருகிறது கோஹினூர்.

போனவருடம் இந்திய லோக சபாவில் சிலர் கோஹினூரைத் திருப்பிக்கேட்கவேண்டுமென்று கிளர்ச்சி செய்தனர். "யானை வாயிலே போன கரும்பு" போல வெள்ளையர் கைக்குப்போன பொருள் திரும்புமா? ஷாஜஹான் காலத்தில் மிகப் பெரியதாக "பெரிய மொகல்" என்றொரு வைரம் இருந்ததாம். இது கோஹினூரைப் போல நான்கு பங்கு பெரியதாம். கோஹினூரும் இதில் வெட்டப்பட்ட ஒரு துண்டுதான் என்று சொல்வோரும் உண்டு. உலகிலேயே இப்பொழுது மிகப் பெரிய வைரம் கல்லினன் என்பது. இது சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன் டிரான்ஸ்வாலில் வெல்ஸ் என்ற ஒருவர் அகஸ்மாத்தாகக் கண்டெடுத்ததே இது. அப்பொழுது இது 3,024 காரட் எடை இருந்ததாம். ஏ அப்பா! யன்றுதான் சொல்லத் தோன்றுகிறது. இதற்கு விலை கொடுத்து வாங்க உலகத்தில் ஆளே இல்லையாம்! அதனால் அதை ஆங்கிலேய மன்னர் ஏழாம் எட்வர்டுக்கு இனமாகக் கொடுத்தார்களாம். எப்படி இருக்கிறது கதை? கல்லினனின் ஒரு பகுதி தான் இப்பொழுது இங்கிலாந்தின் மன்னரது செங்கோலில் உள்ளது. நைஜாம் என்ற ஒரு பெரிய வைரம் நைஜாமிடம் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இப்பொழுது மத்திய இந்தியாவில் பன்னு என்னுமிடத்தில் ஏராளமாக வைரம் வெட்டி எடுக்கப்படுகிறது.

இயற்கையில் வைரம் விளையும் விதத்தை அறிந்த விஞ்ஞானிகள் செயற்கையில் செய்ய முயன்றனர். மாய்ஸான் என்ற பிரஞ்சுக்காரர் இரும்பை உருக்கி அதில் கொஞ்சம் கரிப்பொடியைத் தூவினர். தண்ணீரில் உப்பு கரைவதைப் போல இரும்புத் தண்ணீரில் கரியும் கரையும். உருகிய இரும்பைத் திடீரென்று தண்ணீரில் குளிர வைத்தார். இரும்பு கெட்டியாகும்பொழுது அதற்குள்ளே மாட்டிக்கொண்டுள்ள கரி வெகுவாக அழுத்தப்பட்டது. மேலும் சூடு வேறு. இச் சூழ்நிலையில் கரி வைரமாக மாறியது. என்றாலும் இதைக் கொண்டு நல்ல பெரிய வைரங்கள் செய்ய முடியவில்லை. சமீபத்தில் அமெரிக்காவில் எப்படிச் செய்தார்கள் என்பதன் விவரங்கள் கிடைக்கவில்லை. இருந்தாலும் வைரம் செய்யக் கரியாலான ஒரு வஸ்துவை உபயோகித்திருக்கிறார்கள் என்றும், இதனை 15 லக்ஷம் பவுண்டு அழுத்தத்திற்கு உட்படுத்தியிருக்கிறார்கள் என்பதும் தெரிகிறது. இப்படி சிருஷ்டி செய்யப்பட்ட வைரங்கள் மஞ்சளாகவும், நீலமாகவும், கருப்பாகவும் இருந்தனவாம். படிகமான வைரம் கிடைத்ததாகத் தெரியவில்லை. இம்முறை கொண்டு ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி ஏராளமாக வைரம் உண்டுபண்ணி விடும் என்றும் இயற்கையில் வைரம் விளையும்

தென்னாப்பிரிக்காவின் கதி அதோகதிதான் என்றெல்லாம் சொல்லப்படுகின்றன. செயற்கை வைரம் கிடக்கட்டும். இப்பொழுது அணு வைரம் வேறு வந்திருக்கிறதே, தெரியுமா?

உயர்ந்தரக வைரம் பளிங்கு போல் இருக்க வேண்டும் என்று தான் இதுவரை நினைத்துக் கொண்டிருந்தோம். பளிங்கு, கவர்ச்சியுடையது என்றாலும் வண்ணங்களின் ஜாலம் யாரைத் தான் மயக்குவதில்லை! முக்கியமாக மாதர்களுக்கு பவழச் சிகப்பும், இலைப் பச்சையும், தளிர்ப் பச்சையும், மேக நீலமும், கத்திரிப்பூ ஊதாவும் மிகப் பிரியமானவை. நல்ல வைரங்களிலும் நூலுக்குச் சாயம் ஏற்றுவதுபோல் கலர் ஏற்றலாமாம். இங்கிலாந்தில் ஹார்வெலில் உள்ள அணு ஆராய்ச்சி ஸ்தாபனத்தில் வைரத்தின்மேல் அணுக் கதிர்களைப் பாய்ச்சிப் பரிசோதனை செய்திருக்கின்றனர். அணு விளைவால் படிகவைரம் மஞ்சளாகவும், நீலமாகவும், பச்சையாகவும், கருப்பாகவும் மாறுகிறதாம். இவைகள் ஜகஜோதியாக டால் வீசிப் பிரகாசிக்கின்றனவாம். இவைகள் இன்னும் விலைக்கு வந்ததாய்த் தெரியவில்லை. மலிந்தால் கடைக்கு வரும். அப்பொழுது லண்டனில் நாரீமணிகள் அழகிய அணுவைரங்களில் ஜ்வலிப்பார்கள். வருங்கால பம்பாய்ப் பெண்ணினமும் கலர் தோய்ந்த அணு வைரங்களைக்கொண்ட தோடுகளையும் அட்டிகைகளையும் நாசூக்காகப் போட்டுக்கொண்டு மாதுங்காவை வளைய வரும். வெறும் வைரமா? அணு வைரமல்லவா? அதைப் போட்டுக்கொண்டு வீட்டில் அடைபட்டுக் கிடந்தால் நாலு பேர் பார்ப்பது எப்படி? அந்தக் காலமும் சீக்கிரம் வருமா?

—"திராவிடநாடு"

அறிவுச் சுடர்

உள்ளம் என்ற கோயிலின் ஒளி விளக்கு, பகுத்தறிவு. கோபம் என்ற புயல் வீசினால் அந்த அரிய விளக்கு அணைந்துவிடும். ஆகவே, கோபத்திற்கு இடம் கொடாதீர். பகுத்தறிவை அணைத்து விடாதீர்.

—இங்கர்சால்.

ஆயிரம் தோல்விகள் அடுக்கடுக்காக ஏற்படட்டும். அத்தனையையும் தழுவத் தயார். ஆனால் நன்றி கெட்டவன் செய்யும் நயவஞ்சகம்—அதை மட்டும் என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது.

—நெப்போலியன்.

இந்தியாவின் வருமானம்

இந்தியத் துணைக்கண்டத்தின் மொத்த மக்கள் எண்ணிக்கை 1951–ஆம் ஆண்டில் எடுத்த கணக்குப்படி 35,68,29,485 ஆகும். 1951–52ஆகிய ஓராண்டு காலத்தில் இந்தியாவிலுள்ள எல்லோர்க்கும் கிடைத்த வருமானம் ரூ. 9990 கோடியாகும். இந்த வருமானத்தை இந்தியாவிலுள்ள எல்லோர்க்கும் சரி சமமாகப் பிரித்தால், ஆள் ஒன்றுக்கு ரூ. 274½தான் கிடைக்கிறது. இதைத்தான் இந்தியாவின் ஓராளின் ஒரு ஆண்டின் சராசரி வருமானம் என்று சொல்லுவர்.

இதே நிலையில் பார்த்தால் அமெரிக்காவில் ஒரு ஆளின் சராசரி வருமானம் ரூ. 10,000–க்கு மேலும், இரஷ்யாவில் ரூ. 5000-க்கு மேலும் கிடைக்கின்றன. செல்வத்தை உண்டாக்குவதாக வைதீகர்களால் கருதப்படும் கற்பனைக் கடவுளான திருமகளுக்கு அளிக்கப்படும் வந்தனையும் வழிபாடும் இந்தியத் துணைக் கண்டத்தைப்போல் உலகில் வேறு எங்கும் காணமுடியாது. திருமகளின் படத்தை வீடுகளிலும், கடைகளிலும், தொழிற்சாலைகளிலும், அலுவலகங்களிலும் கொண்டிராத இந்து மக்கள் இந்தியாவிலே மிக மிகக் குறைவாகும். திருமகளின் ஏகபோக 'அருள்' இத்துணைக் கண்டத்திற்கு இருந்தும், சராசரி ஒரு ஆளின் ஆண்டு வருமானம் ரூ. 274½தான்! ஆனால் தனித் 'திருமகளின்' வழிபாடு அறவே இல்லாத அமெரிக்காவின் சராசரி ஆண்டு வருமானமோ இந்தியாவைப்போல் நாற்பது மடங்கு மிகவாக இருக்கிறது! அங்கே 'முயற்சி' வருமானத்தைப் பெருக்கிக் கொண்டே போகிறது. இங்கே 'பக்தி' தாழ்ந்த நிலையிலேயே இருத்திவைக்கிறது!

1950—51-ல் இந்தியாவின் மொத்த நாட்டு வருமானம் ரூ. 9530 கோடியாகும். அந்த ஆண்டின் ஒரு ஆளின் சராசரி வருமானம் ரூ. 265·2 நாட்டின் மொத்த வருமானம் ரூ. 9530 கோடி எவ்வெவ் வழிகளில் கிடைக்கின்றது என்பதைக்கீழ்க் கண்ட அட்டவணையின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

இந்தியத் துணைக்கண்டத்தில் (யூனியனின்) தொழில்கள் மூலம் கிடைக்கும் மொத்த நாட்டு வருமானம்

	விபரம்	1950—51-ல் ரூ. கோடிக் கணக்கில்
1.	உழவுத் தொழில்–கால்நடைகள் வளர்ப்புப்பற்றிய எல்லாத் துறைகளும்	4780

2.	காடுகள்	70
3.	மீன்பிடிப்பு	40
4.	சுரங்கங்கள்	70
5.	பெருந் தொழிற்சாலைகள்	550
6.	சிறிய தொழிற்சாலைகள்	910
7.	தபால் தந்தி போக்குவரத்துக்கள்	40
8.	புகைவண்டிகள்	180
9.	வங்கிகள் — இன்சூரன்சுகள்	70
10.	பிறவாணிகம் போக்குவரத்து மூலம்	1400
11.	சம்பள வேலைகள் கவின்கலைகள்	470
12.	அரசாங்க வேலைகள் (நிருவாகம்)	430
13.	வீட்டு வேலைகள்	130
14.	வீட்டுச் சொத்துக்கள்	410
	ஆகமொத்தம்	9550
	வெளிநாடுகளிலிருந்து பெறும் வருவாய்	20
	எனவே இந்தியாவில் மட்டும் வருமானம்	ரூ. 9530

இந்தியக் துணைக் கண்டத்தில் தொழில்செய்து வருமானம் தேடுவோரின் எண்ணிக்கை ஏறத்தாழ $14\frac{1}{4}$ கோடி பேர்கள். மொத்தம் $35\frac{1}{2}$ கோடி மக்களில் ஏனைய $21\frac{1}{4}$ கோடி மக்கள், $14\frac{1}{4}$ கோடி மக்களின் வருமானத்தை நம்பிதான் உயிர் வாழ்கிறார்கள்.

மொத்தம் தொழில் செய்யும் 14,32,21,000 பேர்கள் கீழ்க் கண்டவாறு பல்வேறு தொழிற் துறைகளில் ஈடுபட்டுள்ளார்கள்:

	விபரம்	1951–ல் ஆயிரக் கணக்கில்
1.	உழவு—கால்நடை	1,02,711
2.	காடு	350
3.	மீன்பிடிப்பு	579
4.	சுரங்கம்	780
5.	பெருந்தொழிற்சாலை	2969
6.	சிறிய தொழிற்சாலைகள்	11521
7.	தபால் தந்தி போக்குவரத்து	195
8.	புகைவண்டி	1178
9.	வங்கி—இன்சூரன்சு	147
10.	பிற வாணிகம்—போக்குவரத்து	9533
11.	சம்பள வேலை—கவின்கலை	6425

12.	அரசாங்க நிருவாகம்	3886
13.	வீட்டுவேலைகள்	2947
14.	வீட்டுச் சொத்துக்கள்	—
	ஆகமொத்தம்	143221

மொத்தம் தொழில் புரிவோரில் 100–க்கு 72 பேர்கள் விவசாயத்தைச் சார்ந்த துறைகளிலும், 11 பேர்கள் சுரங்கம்—ஆலை — சிறிய தொழிற்சாலை போன்றவைகளிலும், மீதி 17 பேர்கள் பிற துறைகளிலும் ஈடுபட்டிருக்கின்றனர்.

விவசாயத்தில் ஈடுபட்டிருப்போரின் எண்ணிக்கை சிறிது சிறிதாகக் குறைந்து, பொருள் உற்பத்தித் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை வளர்ந்து கொண்டே சென்றால்தான் நாட்டின் சராசரி வருமானம் ஏறுவதற்கு வழிவகை ஏற்படும். பொறிகளின் (இயந்திரங்களின்) உதவியைத் தேவையான அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ள இந்தியா இன்னமும் சரியாகக் கற்றுக்கொள்ளாத காரணத்தால் தான் மிகமிகத் தாழ்ந்த நிலையில் கிடக்கிறது. மனிதன் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யப் பொறிகள் தயாராக இருக்கின்றன என்றால், அப்படிப்பட்ட வேலைகளைப்பொறிகளிடத்து விட்டுவிட்டு, மனிதன் பொறிகளால் செய்யமுடியாத பிற வேலைகளைக் கவனிக்க முன்வரவேண்டும். அப்பொழுது தான் மனிதனின் உழைப்பு குறையும், பயன் மிகும், ஓய்வு நேரம் கிடைக்கும், இன்பவாழ்வு பெருகும். எந்த ஒரு தொழிலையும் பொறிகளிடத்து விடமாட்டேன், எல்லாத்தொழில்களையும் கையாலேயே செய்து கொள்வேன் என்று எந்த ஒரு நாடாவது பிடிவாதம் காட்டுமேயானால், அந்த நாடு வரவரக் கீழ் நோக்கிச் செல்வதாகுமே ஒழிய மேல் நோக்கிச் செல்வதாகாது.

மக்கள் இன்பவாழ்வு வாழவேண்டுமானால்— அவர்களது வாழ்க்கைத்தரம் உயரவேண்டுமானால் நாட்டின் வருமானம் பெருக வேண்டும்; வருமானம் பெருக வேண்டுமானால், பொருளுற்பத்திப் பெருகவேண்டும்; பொருளுற்பத்திப் பெருக வேண்டுமானால்பொறித்தொழில்கள் பெருகவேண்டும்! பொருளாதாரச் சமத்துவ நோக்கங்கொண்ட ஆட்சிமுறை இந்தக் குறிக்கோள்களை விரைவில் அடைய உதவி செய்வதாக இருக்கும்.

—“மன்றம்”

மனிதர்கள்!

D. E. மாசிலாமணி

ஒரு கிராமத்திற்கு சாக்ரடிஸ் அலுவலாகச் சென்றார். அங்கு காணப்பட்ட சில விவசாயிகளைக் கண்டு அவ்விட வழக்கப்படி அவர்களை வாழ்த்தினார். விவசாயிகள் சாக்ரடிசைப்பற்றிக் கேள்வி பட்டிருந்தபோதும், அன்று அவரை யாரென்று அறிந்துகொள்ளவில்லை. சாக்ரடிஸ் தமது கண்ணோட்டத்தைப் பலவிடங்களில் திருப்பினார். ஏற்றபடி விவசாயம் செய்யப்படாத அக்கிராமத்தில் எங்கும் குப்பை மேடுகளும், பஞ்சமுமே காட்சியளித்தன. விவசாயத்திற்கு ஏற்ற தண்ணீர் வசதி செய்து கொள்ளவும் அறிந்திராத அக்கிராமத்தினரை வருத்தத்துடன் நோக்கிப் பார்த்தார். அதன்பின் தமது வழக்கமான வினு அம்புகளை எய்ய ஆரம்பித்தார்.)

சாக்ரடிஸ் :— விவசாயி என்பவன் தனது நில தானிய விளைச்சலினால் லாபமடைகிறான் அல்லவா?

விவசாயிகள் :—ஆம்; அதற்கென்ன சந்தேகம்.

சாக்ரடிஸ் :— அப்படியானால் நீங்களெல்லாரும் செல்வம் படைத்தவர்களென்றே நம்புகிறேன்.

விவசாயி: — அதுதான் தவறு; நிச்சயமாக எங்களுக்குஎக்காலத்திலும் போதுமான பணம் கிடைத்ததேயில்லை. உமது கேள்வி எவ்வளவு அறிவீனமாயிருக்கிறது!

சாக்ரடிஸ் :— அப்படியானால் நீங்கள் உங்களை விவசாயிகள் நில முதலாளிகள் என்று கூறிக் கொள்வதே முற்றிலும் சரியல்ல என்றுகூட எண்ண இடமிருக்கிறது!

விவசாயி :— (சாக்ரடிஸின் சொல் சாதுர்யத்திலிருந்து அவரை இன்னாரென்று அறிந்து) சாக்ரடிஸ் பெரியாரே! எங்களை மன்னிக்கவேண்டும். நாங்கள் எங்களை விவசாயிகள் என்று அழைப்பதுகூட ஒரு விதத்தில் தவறுதான். (சாக்ரடிசை அறிந்த பின்பு மிக யோசனையுடன், ஜாக்கிரதையாக பதில் அளிக்க முயல்கிறார்கள்.)

சாக்ரடிஸ் :— தோழர்களே! அப்படியானால் நீங்கள் யாரென்று உங்களை அழைக்க விரும்புவீர்கள்?

விவசாயி 2 :—(பரிகாசமாக) எப்படியாயினும், நாங்கள் மனிதர்கள்! அதற்கு சந்தேகமில்லை.

சாக்ரடிஸ் :— ஆம்; அதற்குச் சந்தேகம் இருக்கமுடியாது!

ஆனால் மனிதர்கள் மிருகங்களை விடப் பன்மடங்கு உயர்ந்தவர்கள் என்பதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?

விவசாயி :— ஆம்; அதில் என்ன சந்தேகமிருக்கிறது? (அச்சமயத்தில் மிகவும் அழுக்கான ஒரு சிறுவன் அழகான, தூய ஒரு நாய்க்குட்டியுடன் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறார்.)

சாக்ரடிஸ் :—(அந்தச் சிறுவனைச் சுட்டிக் காட்டி) அந்தச் சிறுவன் மிகவும் அழுக்காகத் தோன்றுகிறான்.

விவசாயி 2 :—ஆம் பெரியாரே, எங்கள் குழந்தைகள் அன்றாடம் குளிக்க வைக்கப்படுவதில்லை. நாங்கள் ஏழைகள். எங்கள் பெண்களுக்கு மாவு அரைப்பதற்கும், உணவு சமைப்பதற்கும், சாணி தட்டுவதற்குமே பொழுது போதுவதில்லை; அப்போது குழந்தைகளைக் குளிப்பாட்டி அலங்காரம் செய்யும் வசதிகளை அநுபவிக்க கிராமக் குழந்தைகள் எதிர்பார்ப்பது முடியாத காரியமே.

சாக்ரடிஸ் :— அந்தச் சிறு நாய்க் குட்டி மிகவும் சுத்தமாகக் காணப்படுகிறதல்லவா?

கிராமவாசி 4:—ஆம்; அந்தக் குட்டியின் தாய் அதனை உடல் முழுவதும் பன்முறை நக்கி ஒரு அழுக்குமின்றி சுத்தமாக வைத்துக் கொள்கிறது.

சாக்ரடிஸ் :—நீங்கள் உங்களை மனிதர்கள், விலங்குகளைவிடப் பன்மடங்கு சிறப்பானவர்கள் என்று சொன்னது ஞாபகத்திற்கு வருகிறது. அழுக்கடைந்த ஒரு குழந்தை, தூய்மையான ஒரு விலங்கைவிட மிக உயர்ந்தது என்று ஒப்புக்கொள்ள முடியுமா?

விவசாயி :—பெரியாரே! எங்களை மன்னித்து விடுங்கள். நாங்கள் அறிவிலிகள். சுத்தத்தில் மட்டும் நாங்கள் மிருகங்களுக்கு மேற்பட்டவர்கள் அல்லவென்று ஒப்புக் கொள்கிறோம்.

சாக்ரடிஸ் :—சரி; மனிதர்கள் கல்வி கற்கக் கூடியவர்கள்; ஆனால் மிருகங்கள் அவ்வாறு செய்ய முடியாதென்றே நினைக்கிறேன்.

கிராமவாசி 5 :— (வெகு வேகமாக) ஆம்; மனிதர்கள் படிக்கவும், எழுதவும், கூடியவர்கள். அவர்களுக்கு நிறையப்புத்தகங்கள் உண்டு.

சாக்ரடிஸ் :— (அவனை நோக்கி)உனக்குப் படிக்கத் தெரியுமா?

விவசாயி 5 :—தெரியாது ஐயா! எனக்குத் தெரியாது!.

சாக்ரடிஸ் :—உனக்கு?

விவசாயி 2 :— எனக்கும் தெரியாது.

சாக்ரடிஸ் :—உனக்கு?

விவசாயி 3 : —எனக்கும் தெரியாது.

சாக்ரடிஸ் :— நீங்கள் சற்று முன்பு உங்களை மனிதர்களென்று பெருமையுடன் சொன்னீர்கள் அல்லவா?

விவசாயி :— ஐயா! நாங்கள் அவ்வாறு கூறக்கூட அருகதையற்ற படிப்பறிவில்லாதவர்கள் தான். ஆடுமாடுகளுக்குச் சமமானவர்களென்றே எங்களைச் சொல்லலாம்!

சாக்ரடிஸ் :— ஆனால் பசுக்கள் தங்கள் கன்றுக் குட்டிகளை மிகச் சுத்தமாக வைத்துக்கொள்கிறது. அப்பொழுது நீங்கள் அவைகளுடன் ஒப்பிடமுடியுமா?

விவசாயி 2 :— பெரியாரே! எங்கள் மனம் புண்படுகிறது. இதற்கு என்ன பதில் கூறுவதென்றேஎனக்கு விளங்கவில்லை.

சாக்ரடிஸ் :— தோழர்களே! என்னை மன்னியுங்கள். உங்கள் அறிவீனத்தையும், அசுத்தப் பழக்கவழக்கங்களையும் கண்டு மனம் வருந்துகிறேன். நீங்கள் உங்களைச்சரியான மனிதர்களாக, விலங்கினும் உயர்ந்த மக்களாகக் கருதினால் உங்கள் கிராமத்தையும், உங்கள் குழந்தைகளையும், தக்கபடி சுத்தப்படுத்தவேண்டும். உங்கள் கிராமம் சுத்தமாயிருக்க வேண்டுமானால் ஆறடி ஆழம் பள்ளம் தோண்டப்பட்ட குறிப்பிட்ட குப்பைக் குழிகளில் மாத்திரம் சகல குப்பை, அழுக்குகளைப் போடவேண்டும். மேலும் தினந்தோறும் உங்கள் குழந்தைகள் குளிப்பாட்டப்பட வேண்டும். இத்துடன் விலங்கினும் உயர்ந்த மனிதர்களாக நீங்கள் உங்களைக் கருதினால், சுத்தமான ஜன்னல்கள் வைக்கப்பட்ட காற்றோட்டமான வீடுகளிலே வசிக்க வேண்டும்.

விவசாயிகள் :— உமது ஆலோசனைகளை நாங்கள் எப்படி மறுக்கமுடியும்? உமது குற்றச்சாட்டுகள் உண்மையென்று ஒப்புக்கொண்டு எங்களைச் சீர்திருத்த முயலுகிறோம்.

சாக்ரடிஸ் :— தோழர்களே! உங்கள் பெண் குழந்தைகளையும் ஆண்பிள்ளைகளுடன் கல்விச் சாலைக்கு அனுப்பத் தவறுதீர்கள். நாகரீக மனிதர்கள் செய்ய வேண்டிய காரியங்களில் இதுவும் ஒரு முக்கியமான காரியமென்று அறிந்து கொள்ளுங்கள்.

கிராமவாசிகள் :— சாக்ரடிஸ் பெரியாரே! நீர்தான் இப்போது எங்கள் கண்களைத் திறந்துவிட்டீர். நீர் கூறிய காரியங்களை நாங்கள் ஒழுங்காகக் கடைபிடிக்கும் வரை நிச்சயமாக மனிதர்களென்று எங்களைக் கூறிக்கொள்வது பொருத்தமல்ல என்றுஒப்புக்கொள்கிறோம்.

சாக்ரடிஸ் :— (அவ்விடத்தை விட்டு எழுந்து) நண்பர்களே! எனக்கு நேரமாகிவிட்டது. உங்களைச் சந்தித்து, உங்கள் கிராமத்தைச் சுற்றிவரும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததற்காக மகிழ்கிறேன். சில காலத்திற்குப் பின்பு திரும்பவும் உங்களைச் சந்திக்க முயல்கிறேன்.

அன்று நடந்த பொதுத் தேர்தல்-
இன்று கிடைக்கும் விவரங்கள்

இந்தியாவில் முதன் முதல் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு ரூ. 10·4 கோடி செலவாயிற்று; இவை மாநில சட்டசபைகளுக்கும் மக்கள் சபைக்குமாக நடைபெற்ற தேர்தல்களுக்கான செலவாகும்.

இத்தகவல், மக்கள் சபையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தேர்தல் குழுவின் அறிக்கையிலிருந்து கிடைத்திருக்கிறது.

ஒவ்வொரு வாக்காளருக்கும் 9. 6 அணு செலவாயிற்று என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

1948 முதல் 1952 வரை, இந்தச் செலவுகள், தேர்தலை ஒட்டிச் செய்யப்பட்டனவாம்.

17 கோடி 32 லட்சம் வாக்காளர்கள் இருந்தனர்; அவர்களுக்கெல்லாம் தேர்தல் பற்றிய அறிவிப்புகள் தருவது, வேறுபட்ட கால நிலைகளில் கடினமான ஒன்றாகவே இருந்ததாம்.

இந்தியா முழுவதிலும் தேர்தல்கள் மிக அமைதியாக—சட்டத்திற்குட்பட்டு நடைபெற்றிருப்பதை தேர்தல் குழு குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறது.

சுமார் 886 லட்சம் வாக்காளர்கள் பங்குபெற்ற தேர்தலில் புகார் செய்யப்பட்ட குற்றங்கள் 1,250 மட்டும்தானாம்!

வாக்குப் பதிவு செய்த வாக்காளர்களின் பெருந்தொகையைக் கணக்கிலெடுத்துப் பார்க்கும்போது, இந்தக் குற்றங்கள் மிக மிகக் குறைவானவை.

இந்தியா முழுவதற்குமாக வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்கு, 3,84,214 ரீம் காகிதம் உபயோகிக்கப்பட்டது.

1600 குமாஸ்தாக்களுக்கு மேல் 6 மாத காலத்திற்கு இந்தப் பட்டியல் தயாரிக்க நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

மொத்தமாக 26,120 அபேட்சைப் பத்திரங்கள் தாக்கள் செய்யப்பட்டன; அவற்றில், 1538 பத்திரங்கள் தள்ளுபடி செய்யப்பட்டன; 4,347 பேர் அபேட்சையைத் திரும்பப் பெற்றுக்கொண்டனர்; ஆக, 17,235 பேர் போட்டிகளில் கலந்துகொண்டனர்.

(35-ம் பக்கத் தொடர்ச்சி)

விவசாயி :—பெரியாரே! நீர் எக்காலத்திலும் எங்கள் மத்தியில் வரலாம். அதனை நாங்கள் ஆசையுடன் எதிர்பார்ப்போம். ஆனால் நீர் மறுமுறை எங்கள் மத்தியில் வரும்போது நாங்கள் மனிதர்களாய் உமக்குக் காட்சி கொடுப்போமென்று நம்புகிறோம்.

வாக்காளர்களின் விரலில் குறியிடுவதற்காக ரூ. 2லட்சம் பெறுமான அழியாத மை உபயோகிக்கப்பட்டது.

சுமார் 60 கோடி வாக்குச் சீட்டுக்கள் தயாரிப்பதற்காக,180 டன் காகிதம் உபயோகிக்கப்பட்டது; இதன் விலை மதிப்பு சுமார் 10 லட்சம் ரூபாய்.

'வாக்குப் பெட்டி 'களுக்காக 122 லட்சம் ரூபாய்க்கும் அதிகமாகவே, 24 லட்சம் இரும்புப் பெட்டிகள், ஒரு லட்சம் மரப் பெட்டிகள் தயாரிப்பதற்காகச் செலவிடப்பட்டது.

இந்த ருசிகரமான விவரங்களும், அனைத்திந்தியத் தேர்தல் குழு அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் காணக்கிடக்கின்றன.

கடந்த பொதுத் தேர்தலின் போது மொத்தம் 122 இடங்களில் நடைபெற்ற தேர்தல்கள் செல்லத் தக்கதல்ல என்று தீர்ப்பளிக்கப்பட்டதினால் 196 பேர் பதவி இழந்தனர் என்று தெரிய வருகிறது.

இந்தியா முழுவதும் நியமிக்கப்பட்ட 66தேர்தல் விசாரணைக் குழுக்களிடம் 314 விண்ணப்பங்கள் தாக்கலாயின.

மந்திரிகளாயிருந்தோர் மீது 17 புகார் மனுக்களும், முதன் மந்திரிகளாயிருந்தோர் மீது 4 புகார் மனுக்களும் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்றுகூறி தாக்கலாயிருந்தன; அவைகளில் மூன்று மனுக்கள் ஒரேஒரு முதன் மந்திரியின் தேர்தல் செல்லாதெனக் கூறின.

தேர்தல் விசாரணைக் குழுவிற்காக 1953—54-ம் ஆண்டுவரை சுமார் பத்து லட்சம் ரூபாய் செலவாயிற்று. இந்தச் செலவு, மத்திய அரசாங்கத்தாலும், சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கங்களாலும் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

27,915 அபேட்சகர்களும், அவர்களின் 3,187 ஏஜெண்டுகளும் கலந்துகொண்ட கடந்த பொதுத் தேர்தலின்போது செலவு செய்த தொகைக்கான கணக்கினை 7,224 அபேட்சகர்களும், 855 ஏஜெண்டுகளும் தேர்தல் கமிஷனுக்கு தாக்கல் செய்யாதிருந்தனர்; அவர்கள் எல்லாம் மீண்டும் தேர்தலில் பங்கு பெறக்கூடாதென தேர்தல் கமிஷன் உத்திரவிட்டிருந்தது. ஆனால் பின்னர் அவர்கள் கணக்கு தாக்கல் செய்யாதிருந்தது, வேண்டுமென்று அல்லவென்றும், 'தாக்கல் செய்ய வேண்டுமென்ற சட்டமறியாதவர்களாயிருந்தனர்' என்பதாலும் தான் என்றறிந்து, அவர்கள்மீது விதித்திருந்த தடையைநீக்கியது தேர்தல் கமிஷன்.

தோட்டத்து மலர்கள்

[தில்லை மறை முதல்வன்]

'வீட்டில் குழந்தைகள்-தோட்டத்தில் மலர்கள்' என்று பாடினார் ஒரு கவிஞர். எவ்வளவு அழகான கருத்து! தோட்டத்தில் பூத்துச் சிரிக்கும் மலர்களை வீட்டில் தவழ்ந்து விளையாடும் குழந்தைகளுக்கு ஒப்பிடுகிறார் கவிஞர். தோட்டங்களில் மலர்கள் குலுங்கினால்தான் அழகிருக்கிறது. அதுபோல குழந்தைகளின் மழலைமொழி வீடுகளில் சிந்தினால்தான் அங்கே ஜீவனிருக்கிறது. ஆம்; பூக்களின்றி சோலை இல்லை! குழந்தைகளின்றி வீடுகளில்லை!

இனிமை நிறைந்த குரலில் மனிதன் பாடுகிறான். கேட்போர் உலகை மறந்து உணர்வு மறந்து அந்த இசையில் லயித்து விடுகின்றனர். தூரிகையை வர்ணங்களில் நனைத்து திரையில் கிறுக்குகிறான் ஓவியன்-அது அற்புதமான ஓவியமாகி விடுகிறது! மனிதனின் கையிலுள்ள உளிபட்டு பாறைகள் நெஞ்சையள்ளும் சிற்பங்களாக மாறி விடுகின்றன. ஏட்டில் எழுத்தாணி கொண்டு ஏதேதோ எழுதுகிறான்–மனித குலமே அந்தக் கவிதைச் சோலையில் மயங்கிவிடு கிறது!

இவைகளில்—இந்த மனித சிருஷ்டிகளில் — தலைசிறந்தது எது? 'எதுவுமே இல்லை' என்ற பதிலைத்தான் இந்தக்கேள்விக்குத் தரமுடிகிறது. ஏனெனில் மனித சிருஷ்டிகளில் சிகர சிருஷ்டி குழந்தைகள் தான்! அதுவும் ஞானப்பல் முளைக்காத பிஞ்சுக் குழந்தைகள்!

காலையில், ஒளி அரும்பும் வேளையில், மலர்கள் மீது தூங்குகின்றனவே, பனித்துளிகள்... அவைபோலப் பரிசுத்தமானவை குழந்தைகள். வானவெளி போன்ற பரந்த இதயம்! எண்ணங்கள் எழும்பாத உள்ளம்! பகைமையின் நிழல்படாத உள் நெஞ்சம்! விலையில்லாத மழலை மொழி! கவிதைதரும் புதுமேனி! படைப்பில் உயர்வின் சின்னம் குழந்தைகள் தான்!

வாழ்க்கையின் துயரப்புகை குழந்தைகளின் மனவானைச் சூழ முன்னால் அவர்கள் பேசுகிற மதலை மொழி... வர்ணனைக்குச் சிக்காத அந்த இன்பமொழிக்கு ஈடே இல்லை! அந்தப் பேச்சில் ஆழ்ந்த சிந்தனைகள் எதுவும் இருக்காது. அர்த்தமில்லாத பேச்சுதான். ஆனாலும் அந்த அர்த்தமில்லாத பேச்சில் ஒரு சலிக்காத இனிமை இருக்கிறதே! அதனால்தான் அந்தப் பேச்சில் பலரும் 'பைத்தியம்' கொண்டு விடுகின்றனர்.

மடிகின்ற இரவோடு குழந்தைகளின் கவலைகளும், துயரங்களும் மடிந்துவிடுகின்றன. மலர்கின்ற காலையோடு அவர்களது புது வாழ்வும் மலர்கிறது. அவர்கள் மனதில் பேதமில்லை. பிளவில்லை.

உயர்வு தாழ்வில்லை. தீமை செய்யும் எண்ணம் இல்லை. அவர்களுக்கு வஞ்சனை தெரியாது. பயம் தெரியாது.பாம்புகளோடும் விளையாட முனைவார்கள். எதற்கும் பயன்படாத பொருள்கள் கூட அவர்களிடம் மதிப்புப் பெறும். எல்லோராலும் வெறுக்கப்பட்டவர்கள் கூட அவர்களுக்கு உயர்ந்தவர்களாக இருப்பார்கள். அவர்களின் வெளிப்புறத்தில் அழுக்கிருக்கும். ஆனால் அகத்தில் கொஞ்சங்கூடக் கறை கிடையாது. தூசிபடியாத தூய்மையான மனம் குழந்தைமனம்! இதெல்லாம் ஞானப்பல் முளைக்கும் முன்புதான்!

உலகை மறந்து உற்சாகத்தோடு விளையாடுகிறார்கள். தங்களுக்குப் பிடித்தவைகளுக்காகப் பிடிவாதம் செய்கிறார்கள். பிடிக்காதவைகளைத் தூக்கி எறிகிறார்கள். விரும்பியது கிடைத்தால் மனம் விட்டு வாய் நிறையச் சிரிக்கிறார்கள்-கிடைக்கா விட்டால் சத்தம் போட்டு அழுது புரள்கிறார்கள். வீட்டுப் பண்டங்களை உடைத்துத் தொல்லை கொடுக்கிறார்கள். சுத்தமான வீட்டினுள் கரியால் கோடுகள் கிறுக்கியும் காகிதங்களைக் கிழித்துப் போட்டும் விஷமங்கள் செய்கிறார்கள்.

ஆனால், இவைகளில் தான் அழகிருக்கிறது; உயிரிருக்கிறது; வாழ்க்கை இருக்கிறது; குழந்தைகளின் பாதச் சுவடுகள் படியாத இடங்கள் சூன்யம் கவிந்தபொட்டல் வெளிகள்தான்!

குழந்தைகள் மனம் மர்மங்கள் நிறைந்தது. அது ஒரு அவிழ்க்க முடியாத சிக்கல்! சிறந்த பாடகனின் இசையால் குழந்தையின் அழுகையை நிறுத்த முடியாது. ஆனால் எவராவது குறட்டை விட்டுத் தூங்குவது கண்டால் அழுகை சட்டென்று நிறுத்திவிடும். ஆம் குழந்தை மனம் அதிசயமானது! அந்த அதிசயத்திலும் ஒரு அழகு இருக்கிறது! குழந்தைகள் பொறுப்பில்லாத பொற்கதிர்கள்—ஆனால் அதன் கவர்ச்சியோ அந்தப் பொறுப்பில்லாத தன்மையில்தான் இருக்கிறது!

குழந்தை... ஆண் பெண் இருவரின் கூட்டுக்குரலில் பிறந்த வீணை நாதம்! ஆண் பெண் இருவரின் விழித்தழுவுதலில் தெறித்த மின்னல்! இன்பம் பெற்றெடுத்த இனிமைப் புதையல்! வாழ்க்கை ஒரு பூங்கா—அதில் உள்ள மலர்கள் குழந்தைகள்! காதல் ஒரு மரம்—அதில் உள்ள கனிகள்தான் குழந்தைச் செல்வங்கள்!

கண்ணம்மாவைக் குழந்தையாக்கிப் பாடும்போது பாரதி தன்னையே மறந்து விடுகிறான். அவனது கவிதை இதயம் பொங்கி அவனையே பூரிக்கடித்து விடுகிறது, இதோ பாருங்கள்...

"அள்ளி அணைத்திடவே என் முன்னே ஆடிவருந் தேனே! ஓடி வருகையிலே கண்ணம்மா உள்ளங்குளிருதடீ! ஆடித்திரி

தல் கண்டால் உனைப்போய் ஆவி தழுவுதடி! உச்சிதனை முகர்ந்தால் கருவம் ஓங்கி வளருதடி! மெச்சியுனை ஊரார் புகழ்ந்தால் மேனி சிலிர்க்குதடி! கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளந்தான் கள்வெறி கொள்ளுதடி! உன்னைத் தழுவிடிலோ கண்ணம்மா உன்மத்தமாகுதடி! உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில் உதிரங் கொட்டுதடி!...'?

அதுமட்டுமா? இன்னும் இருக்கிறது......

'இன்பக் கதைகளெல்லாம் உன்னைப்போல் ஏடுகள் சொல்வதுண்டோ? அன்பு தருவதில் உனை நேர் ஆகுமோர் தெய்வமுண்டோ? மார்பிலணிவதற்கே உன்னைப்போல வைர மணிகளுண்டோ? சீர்பெற்று வாழ்வதற்கே உன்னைப்போல் செல்வம் பிறிதுண்டோ?'

'பாரதிக்கு இணை பாரதியே' என்று சொல்லும்படிப் பாடிவிட்டான். அவன் ஆற்றலை நினைத்து வியக்காமலிருக்க முடியவில்லை!

'வான் பெற்ற நிலவைப்போல வந்தொரு குழந்தை என்னைத் தேன் பெற்றவாயால் அப்பா எனத் தாவும்! திங்கள் எழில் பெற்ற தாய் மடியின் மீது யாழ் கிடப்பதுபோலப் பிள்ளை உற்றிடும்! அம்மா என்னும் அவ்விசை அமிழ்தின் ஊற்றும்!'—இது புதுவைக் குயில் பாரதிதாசன் அனுபவ வெளியீடு. அதில்தான் எத்தனை எழில்!

'அன்பின் பணியும், வையம் பெறும்பயனும் எங்கே? என்ற கேள்விக்கு புரட்சிக் கவிஞர் காட்டும் காட்சி இது...

"..................
அக்குழந்தை தாய்க் கைப்
[புறத்தில்
நற்றமிழ்ப் பால் குடிக்க
நகர்த்தும் தன் சிவந்தவாயை.
அணைத்துக் கொண்டிடுவாள்
[அன்னை.
அமிழ்தச் செம்பினையும், தன்
[பால்
இணை இதழ் குவிய உண்ணும்
இளங் குழந்தையையும்
[சேர்த்தே
அணி மேலாடையினால் மூடி
அவள் இடை அசைப்பாள்!
[அன்பின்
பணி காண்பேன் வையம்
[பெற்ற
பயனைக்கண்ணாரக் காண்பேன்!"

குழந்தை தாயிடம் பால் குடிப்பதில் அன்பின் பணியை, வையம் பெற்ற பயனைக் காண்கிறார் கவியரசர். இதோ

இன்னொன்று...

'...பிள்ளை சிரிக்கையில்
சிரித்தது வையம்! சிரித்தது
[வானமே!'

இரண்டே வரியில் எல்லாம் அடக்கம். குழந்தைகள் சிரிக்கின்றன! குவலயம் சாந்தி பெறுகிறது!

வேய்ங்குழல் பொழியும் கீதத்தில் தங்களையே பறிகொடுத்து

விடுகிறார்கள் சிலர். யாழின் அமுதத் தந்திகளிலிருந்து கிளம்பும் நாத ஒலியில் கரையே இல்லா இன்பத்தைக் காண்கிறார்கள். ஏனெனில் இவர்கள் குழந்தைகளின் மழலைமொழி கேளாதவர்கள். இதைத்தான் வள்ளுவன் சொன்னான்.

'குழல் இனிது யாழ் இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளாதவர்'
என்று

ஆனால் கலைஞர் 'கருணாநிதி வேறுவிதமாகச் சொல்லுகிறார். 'குழலையும் யாழையும் வெல்லுவாய் என்ற குறளையும் வெல்லும் உனது மழலைமொழி' என்று. அவர் சொல்லும்போது 'அற்புதம்! அபாரம்' என்று கூறத் தோன்றுகிறது.

'தளிர்' என்ற தலைப்பில் குழந்தையை வர்ணிக்கிறார் கருணா. 'அருப்பு பொதிய விழா மல்லிகையைப் பார்த்தால் ஆகா—எத்தனை இன்பமாயிருக்கிறது வயலிலே நாற்று, வண்ணப் பொய்கையில் மீன் குஞ்சு, காட்டிலே மான்குட்டி, வீட்டிலே குழந்தை!'...எத்தனை அழகான சொல்லோவியம்!

'குழந்தாய்! உனக்குக் கடவுள் என்ற எண்ணமுமில்லை. நீயும் நாத்தீகவாதி. நல்ல மனத்திற்கு குழந்தை மனம் என்று பெயர், ஆகையால் நாத்தீகர் நல்ல மனம் படைத்தவர்'—கொள்கையை உயிராகக் கொண்ட இத்தகு எண்ணங்கள் கருணாவுக்கே உரித்தான தனித்த பாணி!

குழந்தையிடம் கடவுளைப் பற்றியநினைவு ஏன் எழும்புவதில்லை? இதற்கும் கருணாநிதி பதில் சொல்லி விடுகிறார்:

"நீ யாரையும் கெடுப்பதில்லை—அதனால்தான் உனக்குக் கடவுள் அவசியமில்லை!"—கருணாவைக் கலைஞர் என்று போற்றாமலா இருக்க முடிகிறது?

*
* *

கவிஞர் கண்ணதாசனின் 'இல்லற ஜோதி'யில் எண்ணி எண்ணி மகிழத்தக்க ஒரு கட்டம்...

அவன் கவிதை வானில் பறக்கும் தேன்சிட்டு. அவனிடம் வெடித்த கனவுகளில் கவிதைகள் மலருகின்றன. துடிக்கும் எண்ணங்களில் இதயம் பாடுகிறது. ஆனால் அவனுக்கு வாய்த்த மனைவியோ ரசனையே தெரியாத அசட்டுப் பெண்!

ஒரு நாளிரவு கவிஞன் தனது ரசிகை ஒருத்தியை சந்திக்க புறப்படுகிறான். விஷயமறிந்த அவன் மனைவி குறுக்கிடுகிறாள்.

"எங்கே போகிறீர்கள்?"

கவிஞன் சிரித்து விட்டுச் சொல்லுகிறான்.

"எங்கேயா? கவிஞன் எங்கே போவான்? கலை இருக்குமிடத்தைத் தேடித்தான்!"

உடனே அந்த அசட்டு மனைவி கவிஞனின் வார்ப்படத்தை—இல்

லத்தின் குளிர் விளக்கை—பிள்ளைக்கனியமுதை—அவன் முன் நீட்டியபடி கேட்கிறாள்:

"இங்கே தெரியவில்லையா உங்களுக்கு கலை?"

அவள் கேள்வி கவிஞனுக்கு மின்னலடித்தாற் போலிருக்கிறது.

இந்தக் கேள்வியில் எவ்வளவு அழகும் பொருளும் இருக்கிறது பாருங்கள். எவ்வளவோ கவிஞர்கள் குழந்தையை எப்படி எப்படியோ வர்ணித்திருக்கிறார்கள். முழு நிலவே! முல்லைப்பூவே! கன்னலின் சாறே!பளிங்குருவே! பச்சைக்கிளியே!...என்றெல்லாம் வர்ணித்திருக்கிறார்கள். ஆனால் கண்ணதாசன் குழந்தையைக் காட்டி 'இங்கே தெரியவில்லையா கலை?' என்று கேட்கும் போதுதான் அவர் ஒரு படி மேலே போகிறார். அவரது கலைத்திறன் முழுதும் இங்கே வெளிப்படுகிறது!

* * *

பெண்களின் அழியாத கனவு குழந்தைகள்தான். இன்பச் சூட்டில் கணவன் விதைத்த வித்தைத் தாங்கி, பத்து மாதம் தனது ரத்தத்தால் அந்தக் கருவை வளர்த்து, பின் வெளிப்பட்ட பிஞ்சுடலை அள்ளி அணைத்து, அதன் சுனை உதடுகளில் முத்த மழை பொழியும்போது ஏற்படும் அந்தப் பூரிப்பு...அதைப் பெண்களால் மட்டுமே உணர முடியும்! அந்தப் பூரிப்புக்கு அவர்கள் படுகிற தவிப்பு...ஏங்குகிற ஏக்கம்...அதை வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது!

கவிஞன் முடியரசனின் 'இன்பக்குழவி' என்ற கவிதை இதை விளக்குகிறது.

அவளுக்குத் திருமணமாகி விட்டது. ஆனால் கணவன் தந்த இன்பத்தின் சின்னம் இல்லை. அவளுக்கோ தனது உயிர்க்கொழுந்தைக் காண வேண்டுமென்ற ஓயாத துடிப்பு...அதனுடைய அரும்பு இதழ்கள் சிந்தும் சிரிப்பை அள்ளிப் பருக வேண்டுமென்ற அடங்காத வெறி... புண்ணியத் தலங்கள் சென்றும் தீராத தவிப்பு...என்ன செய்வது?...பக்கத்து வீட்டு இளைஞன் ஓரக் கண்ணால் ஒப்புதல் கேட்கிறான். தப்பென்றறிந்திருந்தும் தாய்மைப்பாசம் சம்மதம் தந்து விடுகிறது! அப்புறம் என்ன?...மற்றவன் வயலில் மாடுகள் மேய்கின்றன! இல்லத்தின் தூண்டா விளக்கு ஒளிவிடுகிறது!

அவள் செய்தது பாவந்தான். உலகம் காறி உமிழும். ஆனாலும் அந்தக் குழந்தை 'அம்மா' என்றழைக்கும்போது அவள் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை!

ஊரார் அறிந்தால் ஒழுக்கம் [இல்லா
உலுத்தை என்றே ஊறிக் [கொட்டுவர்
கொண்டவன் கண்டால் [தண்டனை என்பான்

உற்றார் எனினோ பற்பல
[கதைப்பர்
எனினும் அந்த இன்பக் குழவி
'அம்மா என்றே அழைத்திடும்
[என்னை
இம்மா நிலத்தில் எண்ணிய
[இன்பம்
பெற்றேன்! பெற்றேன்!
[பிறருரை வீணே!

*
* *

வளர்ந்த மனிதனின் பேச்சில் காரண காரிய அறிவின் நிழல் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் குழந்தையின் குதலை மொழியில் பேதமைதான் இருக்கிறது—அந்தப் பேதமையில் தான் பேரின்பமும் இருக்கிறது!

இந்தப் பேரின்பத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமானால் நாம் பிரெஞ்சுநாட்டுப் பேனமன்னன் பால்சாக்கிடந்தான் போக வேண்டும்: விண்ணுக்கும் மண்ணுக்குமாக விரிந்து நிற்கும் ஆற்றல் படைத்த மேதை அவன். அவனது கதைத்தொகுதியில் காணப்படும் கதை இது.

காதரைன் ராணி ஆட்சி செய்துகொண்டிருந்த காலம். அவளுடைய மாமனார் பிரெஞ்சு நாட்டின் பேரரசராக இருந்தார். அவர் மற்ற முடிதாங்கிகளிலிருந்து வேறுபட்டவர். கலையின் ரசிகனாக கலைஞர்களின் தோழனாக வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருந்தார். லியனார்டோடாவின்ஸி, ராபெல், பிரைமாட்டிஸ் போன்ற கலைச்சிற்பிகளின் நட்பைப்பெற்றவர். அவர்களுக்கு அவ்வப்போது வேண்டிய உதவிகளையெல்லாம் உள்ள நிறைவோடு செய்து வந்தார்.

மாமனாரின் கலை ஆர்வத்தை உணர்ந்த காதரைன் அவரை மகிழ்விப்பதற்காக, அவருக்கு மிகவும் பிடித்தமான இத்தாலி நாட்டு ஓவியங்கள் பலவற்றை அவ்வப்போது வாங்கி அனுப்புவாள். அப்படி அனுப்பப்பட்ட படங்களில் ஒரு ஓவியம் மட்டும் மிகவும் அருமையாக அமைந்திருந்தது. அதுபோன்ற சித்திரத்தை இதுவரை எவருமே தீட்டியதில்லை என்று சொல்லும் வண்ணம் அதை வரைந்திருந்தான் வெனீஸ் நகரத்து சித்திரக்காரனான டிஷியன் என்பான். அப்போது அவன் சார்லஸ் மன்னனின் அரசவைக் கலைஞனாக இருந்தான்.

அந்தப் புகழ் பெற்ற ஓவியத்தில் மனித குலத்தின் ஆதி பிதாக்களான ஆதாமும் ஏவாளும்—கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட முதல் ஆணும் பெண்ணுமான ஆதாமும் ஏவாளும்—ஏதேன் தோட்டத்தில் சுற்றித் திரியும் காட்சி சித்தரிக்கப்பட்டிருந்தது. அவர்கள் இருவரும் அந்தக் காலத்து ஆடை அணிந்திருந்தார்கள்: அதாவது கொஞ்சங்கூட மறைப்பின்றி பிறந்த மேனியோடு காட்சி யளித்தார்கள். ஏனெனில் அவர்கள் தங்கள் பேதமையையே ஆடையாக அணிந்திருந்தனர்!

பூலோக சொர்க்கத்தின் முதல் பிரஜைகளான இவர்களின் உணர்ச்சி பாவங்களை வர்ணப் பூச்சில் காட்டுவது சிரமசாத்திய மான காரியந்தான். மைனிணும் டிஷியன் தனது கலைத்திற மையை எல்லாம் காட்டி அந்த ஓவியத்தில் குறையில்லாத முழு எழிலை—கவர்ச்சி குன்ருத உயி ரோட்டத்தை—பெய்திருந்தான். அந்த ஓவியம், ஓவியக் கலையின் மிகப்பெரிய வெற்றியாகப் போற் றப்பட்டது. அதைக் காண வேண்டுமென்று எல்லோரும் விரும்பினர்கள். ஆனல் ராணி காதரைனின் மாமனாரான பிரெஞ்சு அரசர் சாகும்வரை அந்த ஓவியத்தை எவராலும் பார்க்க முடியவில்லை. ஏனெனில் அவர் வாழ்ந்த காலம் வரை அந்த ஓவியம் அவரது அறையிலேயே மாட்டப்பட்டிருந்தது.

ஒருசமயம் அவர் நோய்ப் படுக்கையில் கிடந்தபோது காத ரைன் ராணி அவரைக் காணச் சென்றிருந்தாள். அவள் தனது மகனை பிரான்ஸிசையும் மக ளான மார்கரெட்டையும் கூடவே அழைத்துச் சென்றிருந்தாள். அந்தக் குழந்தைகள் இருவரும் ஆதாம் ஏவாள் சித்திரத்தைப் பற்றிப்பலரும் ஏதேதோ பேசிக் கொள்வதைக் கேட்டிருக்கிருர் கள். அதனல் அந்த ஓவியத் தைக் காண வேண்டுமென்று அவர்களின் பிஞ்சு நெஞ்சங்கள் ஆசையால் துடிதுடித்தன. அந்த ஆசையைத்தங்கள் தாயாரிடமும் தெரிவித்தனர். காதரைன் ராணி யும் குழந்தைகளின் வேண்டு கோளுக்கு இணங்கினாள்.

ஆதாம் ஏவாள் சித்திரத்தின் முன்னே குழந்தைகளை நிறுத்தி 'இதோ இவர்கள்தான் நமது முதல் பெற்றோர்கள்' என்று விளக்கினாள் காதரைன்.

சித்திரத்தின் முன்னே குழந் தைகள் இருவரும் பிரமித்துப் போய் நின்றுகொண்டிருந்தனர். நாணத்தின் சிறிதின்றி, நிர்வா ணக் கோலமாய், பேதமையே ஆடையாய், அழகின் ஒளிச்சித றல்களாய், ஏதேன் தோட்டத் தில் திரிந்து கொண்டிருந்த ஆதா மையும் ஏவாளையும் இமைக்காத விழிகளோடு இனம்புரியாத அதி சயத்தோடு பார்த்தபடி நின்ற னர் குழந்தைகள் இருவரும்.

பிரான்ஸிசுக்கு திடீரென்று ஒரு சந்தேகம் வந்தது. மார்க் கரெட்டைப் பார்த்து கேட்டான் —"இவர்கள் இருவரில் ஆதாம் யார்?'

சட்டென்று மார்கரெட் பதில் கொடுத்தாள்—'முட்டாள்! அவர் கள் ஆடை அணிந்திருந்தாலல் லவா அது தெரியும்'

இதைக்கேட்டு காதரைன் ராணியும் படுக்கையிலிருந்த அவள் மாமனாரும் சிரித்து விட் டனர்! ஆயுள் முழுதும் நினைத்து நினைத்து மகிழக்கூடிய பதில் தான் அது!

இந்தச் செய்தி காதரைன் ராணி பிளாரன்ஸ் நகரிலிருந்து

எழுதிய ஒரு கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் பால்சாக்கைத் தவிர வேறு எந்த எழுத்தாளனும் இந்த விஷயத்தைக் கவனிக்கவில்லை! பால்சாக்கின் கதைத் தொகுதியில் இந்தக் கதை பனித்துளி படிந்த புது ரோஜா மலரைப்போல மனதைக் கவருகிறது!

இதைப் படித்து முடிக்க ஐந்து நிமிஷம்கூட ஆவதில்லை. இதிலிருந்து உயர் தரமான கருத்துக்களையோ, ஆழ்ந்த தத்துவங்களையோ தெரிந்து கொள்ள முடியாது! இதில் பிரமாதமான நகைச் சுவையோ, கடைபிடிக்க வேண்டிய போதனைகளோ இல்லை! ஆனால் பாலுணர்ச்சிப் பேதம் தெரியாத பேதைக் குழந்தைகளின் மனப்பண்பை—அறிவின் அழுக்கு படிவதற்கு முன்னால் குழந்தைகளிடம் வாழுகின்ற பேதமையை—ஒப்புவமை சொல்ல முடியாத வகையில் சித்தரிக்கிறது இந்தச் சின்னஞ்சிறு கதை!

ஆடை அணிந்தால்தான், ஆண்—பெண் வேற்றுமையை புரிந்து கொள்ள முடியுமாம்! ஏதேன் தோட்டத்திலிருந்த அறிவு என்னும் கனியை ருசிப்பதற்கு முன்னால் ஆதாமும் ஏவாளும் எத்தனை பேதமையோடு விளங்கினார்களோ, அதே போலத்தான் அந்தக் குழந்தைகளும் பேதமையின் பிரதிபிம்பங்களாகக் காட்சியளித்தனர்! அறிவு மொட்டு விடுவதற்கு முன்னால்—ஞானப்பல் முளைக்கு முன்புள்ள அந்த ஆனந்தம் பேதமையில் தான் இருக்கிறது!

*

உலகிலேயே குழந்தைகளைப் பற்றிப் பாடிய கவிஞர்களை எடுத்துக்கொண்டால், வங்கக்கவிஞன் தாகூருக்கு இணையாக வேறு எவரையும் கோடுகிழித்துக்காட்ட முடியாது. குழந்தை விளையாட்டைப்பற்றித் தனக்கேஉரித்தான பாணியில் அவர் எழுதியபுதுமை ஓவியம் இது...

'முடிவற்ற விண்ணில் அமைதி நிலவுகிறது. ஓய்வற்ற கடல் கொந்தளித்துக் குமுறுகிறது. குழந்தைகள் இலைச்சருகுகளால் படகு கட்டி கடலில் மிதக்க விட்டு சிரித்து விளையாடுகின்றன. நீந்தத் தெரியாத குழந்தைகள்... வலைவீசத் தெரியாத குழந்தைகள்...வஞ்சனையற்ற குழந்தைகள்! முத்துக் குளிப்பவர்கள் கடலில் மூழ்கி முத்துக்களை வாரி வருகிறார்கள். பணந்தேடிகள் திரைகடலோடி செல்வம் சேர்க்கிறார்கள். குழந்தைகளோ கூழாங்கற்களை வீசி விளையாடுகின்றன!...கடல் சிரிப்பு தாங்காது சிரிக்கிறது. கடற்கரையில் ஒளி வெள்ளம் தேங்கி வடிகிறது. சீறிவரும் அலைகள் குழந்தைகளுக்கு அர்த்தமற்ற—ஆனால் இனிமையான—பாடல்களைப் பாடுகின்றன. அலையின் பாடல் தாயின் தாலாட்டைப் போலக் கொஞ்சுகிறது! ஆம்... கடல் குழந்தைகளோடு சிரித்து விளையாடுகிறது. அதனால் கடற்

(46-ம் பக்கம் பார்க்க)

...AUG 1956
MADRAS

இணைந்த துருவங்கள்

ஓர் செந்தமிழ் நாடகம்

[முத்தமிழ்ப் பித்தன்]

நாடக உறுப்பினர்கள்

சபாபதி.........................ஓர் பிரபல மனிதர்.
மோகன்.........................அவர் மகன்.
கலா.............................அவர் மகள்.
டாக்டர் சந்தானம்...............சபாபதியின் நண்பர்.
வனஜா...........................டாக்டர் மகள்.

மற்றும் நோயாளிகள் முதலியோர்.

(இந்த நாடகத்தில் வரும் நிகழ்ச்சிகள், பெயர்கள் அனைத்தும் கற்பனையே. யாரையும், எந்நிகழ்ச்சிகளையும் குறிப்பிடுவன அல்ல.)

காட்சி 1.

கலா :—(ஓடிவருகிறாள்) அப்பா ஓர் மகிழ்ச்சிகரமான செய்தி சொல்லட்டுமா, அப்பா?

சபா :—உம், சொல்லம்மா, ஏன் தயக்கம்?

(45–ம் பக்கத் தொடர்ச்சி)

கரை மின்னி ஜொலிக்கிறது! வழியற்ற வானவெளியில் புயல் அணுதையாக அலைகிறது. தடமிடல்லாத கடலில் மரக்கலங்கள் மோதி அழிகின்றன. மரணம் எங்கும் வாழ்ந்திருக்க, குழந்தைகள் கொஞ்சுகின்றன. முடிவற்ற உலகங்களின் கடற்கரையில் குழந்தைகளின் மகத்தான அதிசய சந்திப்பு நிகழுகிறது!'

"திராவிடன்"

கலா :—ஊ ஹூம். நான் மாட்டேன். சொன்னால் எனக்கு என்ன தருவீர்கள். அதை முதலில் சொல்ல வேண்டும்.

சபா :—உனக்கு என்ன வேண்டுமோ கேள், தருகிறேன்.

கலா :—எது வேண்டுமானாலும் தருவீர்கள்.....உம்....எனக்கு என்ன வேண்டும்? (சிந்திக்கிறாள்)...எனக்கு என்ன கேட்பதென்றே தெரியவில்லையே. உங்களுக்குப் பிடித்தமானதைத் தாருங்கள், அப்பா.

சபா :—ஒரு நல்ல வாணைப் பார்த்து........

[இடி இடி யென்று சிரிக்கும் ஒலி கேட்கிறது, இருவரும் திரும்பிப் பார்க்கின்றனர். மோகன் வருகிறான்.]

கலா :—அப்பா, அண்ணு...... (மோகன் அவள் வாயைப் பொத்துகிருன்.)

மோகன் :— நான் சொல்லு கிறேன்.

கலா :—(அவன் கையை உதறித் தள்ளி விட்டு) அப்பா, அண்ணு பரீட்சை (மீண்டும் மோகன் அவள் வாயைப் பொத்துகிருன்.)

மோகன் :—கலா, நிறுத்து.

கலா :—என்னடா இதெல்லாம். பரீட்சை என்ன ஆயிற்று. யாராவது ஒருவர் சொல்லுங் கள். போட்டி என்ன இதில்?

கலா :—(மோகன் கையை மீண் டும் உதறித்தள்ளி) அண்ணு பாஸ். அப்பா, அண்ணு பாஸ்.

சபா :—உஸ், அப்பாடா, இப் பொழுதுதான் எனக்கு உயிர் வந்தது. என் வயிற்றில் பாலே ஊற்றிஞய்.

மோகன் :—ஐந்து நீண்ட வரு டங்கள் அவை என் வாழ்க்கை யில். அந்த ஐந்தாண்டுக் காலத்தில் புத்தகத்தோடு கட் டுண்டுகிடந்தேன். இரவைப் பகலாக்கிக் கொண்டு ஊரும் உலகமும் தூக்கம் என்னும் இன்ப லாகிரியில் அமிழ்ந்து கிடக்கும் பொழுது நான் என் உயிரைக் கொடுத்து எழுத் துக்களுடன் போராடினேன். என் ஐந்தாண்டு கால உழைப்பு வீண் போகவில்லை. இதோ இன்று அதன் அறுவடை நாள்!

கலா :—மேற்கொண்டு என்ன அண்ணு செய்யப்போகிருய்?

மோகன் :—கலா, நான் யாரா வது தேர்ச்சி பெற்ற வைத்திய ரிடம் தொழில் நுட்பங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். பின்பு நான் என் வாழ்நாள் பூராவும் பணி செய்து கிடப் பேன். சமுதாயத்தைச் செல் லாக அழித்து வரும் பிணி ஒழிக்கப் பணியாற்றுவேன். கலா, இன்று உன்முன் உறுதி கூறுகின்றேன். என் கடன் பணி செய்து கிடப்பதே. வாலிபர்கள், நாட்டின் விலா எலும்புகள். அந்த விலா எலும்புகள் இந்த நாட்டிலே எப்படிக் காட்சி அளிக்கின் றன தெரியுமா? கூனிக் குறுகி உள்ளன. வாலிப வயதிலே வயோதிகத் தோற்றம். ஒரு மனிதனின் சராசரி வயது இருபத்து ஐந்து இந் நாட்டில். அந்த இருபத்தைந்தாண்டில் அவன் எத்தனையோ நோய் என்னும் ஆறுகளைக் கடக்க வேண்டி இருக்கிறது.

சபா :—சரி மேற்கொண்டு நடக்கவேண்டியதைக் கவனிப் போம்......நீ நாளைக்குக் காலே யில் தயாராய் இரு. டாக்டர் சந்தானத்திடம் உன்னை அழைத்துப்போய் அறிமுகம் செய்து வைக்கிறேன். அவர் பெரிய டி. பி. ஸ்பெஷலிட்.

கலா :—அண்ணு, உன்போல்

எல்லோருமே மாறிவிட்டால்......

மோகன் :—அந்த நாள் வெகு தொலைவில் இல்லை, கலா!

சபா :—தம்பி இப்படியெல்லாம் பேச எங்கேயப்பா கற்றுக் கொண்டாய்.

மோகன் :—பல்கலைக் கழகத்தில் —இல்லை—நடமாடும் பல்கலைக் கழகத்தில், அப்பா!

போதாதகுறைக்கு எத்தர் பரப்பிய மாயா வாதம். ஓயாமல் ஒழியாமல் மாயா வாதம். அம்மை வார்த்தால் மாரியம்மன் படையல். காய்ச்சல் கண்டால் கச்சி ஏகம்பனுருக்கு அபிஷேகம். நோய்கண்டால், நோயின் காரணத்தை ஆராயாமல், ஆடு வெட்டுகிறார்கள், கோழி சுற்றிவிடுகிறார்கள். உருப்போல உரு செய்து ஏழுமலையான் உண்டியிலே சேர்க்கிறார்கள். இந்தச் சீர் கேட்டை ஒழிக்க உறுதி பூண்டு விட்டேன். நல்லதோ, கெட்டதோ எது வரினும் ஏற்க இதயம் உண்டு என்ற துணிவோடு.

பெரிய ஜமீந்தார்களுக்கெல்லாம் வைத்தியம் பார்க்கிறார். பெரிய மனிதர். அவரிடம் அசட்டு பிசட்டு என்று நடந்து விடப்போகிறாய், ஜாக்கிரதை!

[திரை]

காட்சி 2.

சந் :—டாக்டர் மோகன், வைத்தியத் துறைக்கு மனோ-தத்துவ ஞானம் மிகமிக அவசியம். பேஷண்டுகள் வாயைக் கிளரி விட்டால் பேசிக் கொண்டே போவார்கள். அவர்கள் கூறுபவை அனைத்தும் நீங்கள் நன்றாக மனதில் பதிய வைக்கவேண்டும். ஆனால் அவையெல்லாம் நூற்றுக்கு நூறு உண்மை என்று எண்ணி விடக்கூடாது. நமக்குத் தேவையானவைகளை மட்டும் எடுத்துக் கொண்டு மற்றவைகளைத் தள்ளிவிட வேண்டும். இதெல்லாம் போகப் போகப் பழக்கத்தில் தெரியும்.

மோ :—பக்கத்தில் நீங்கள் இருக்கும் போது எனக்கு என்ன குறை!

சந் :—நோயாளிகளுக்கு நோய்க்கு மட்டும் மருந்து கொடுத்தால் போதாது. வாய் ஜாலக்கால் அவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாகிவிட வேண்டும். அந்த நம்பிக்கை ஏற்படுத்தினால்தான் நாம் கொடுக்கும் மருந்து பிடிபடும்.

[வனஜா வருகிறாள்.]

வன :—ஒரேயடியாக உபதேசத்தில் இறங்கி விட்டீர்களே! நாளைக்குக் கொஞ்சம் வைத்துக் கொள்ளுங்கள் அப்பா!

சந் :—ஓ, வனஜாவா, வாம்மா! மிஸ்டர் மோகன், இவள்தான் என் ஒரே மகள் வனஜா. ரொம்பக் குறும்புக்காரி. அரை நிமிஷம் வாயை வைத்

துக் கொண்டு சும்மா இருக்க மாட்டாள்......வனஜா, இவர் தான் டாக்டர் மோகன்; என் புது அப்ரென்டிஸ்.

வன :—வணக்கம் மிஸ்டர்.

மோ :—வணக்கம்.

வன :—[சந்தானம் பக்கம் திரும்பி] உங்கள் அறிமுகம் செய்யும் பாணியே புதியதாக இருக்கிறது. சரி போகட்டும் உங்களை ஒன்று கேட்க விரும்புகின்றேன்.

சந் :—என்ன வேண்டும் கேளேன்.

வன :—உங்களுக்குத் தெய்வ நம்பிக்கை உண்டா, அப்பா?

சந் :—நல்ல கேள்வியம்மா! எண்ணைக்காவது நான் பூசை செய்யாமல் நோயாளிகளைப் பார்த்ததுண்டா? இல்லை, சோழங்கிபுரத்தில் ஆஞ்சநேயர் கோவிலுக்குப் படி போட்டேனே, தெய்வ நம்பிக்கை இல்லாமலா போட்டேன்?

வன :—இல்லை திடீரென்று சந்தேகம் வந்தது, கேட்டேன்... ...ஆமாம் அப்பா, உங்களுக்கு யாரிடம் பயம்? என்னிடமா? கடவுளிடமா?

சந்தானம் :—(யோசித்துவிட்டு) ஏன், கடவுளிடம்தான்.

வன :—நிச்சயமாக?

சந் :—நிச்சயமாக!

[வனஜா தன் இரு கரங்களையும் சந்தானம் முகத்தருகே கொண்டு போய்த்தட்டி, 'டப்' பென்ற ஓசை செய்கிறாள். சந்தானம் அதன் விளைவாக இமை கொட்டுகிறார்].

வன :—[கை தட்டிக் குதித்துக் கொண்டே] அப்பா, நீங்கள் கண்ணை அடித்து விட்டீர்கள். உங்களுக்கு என்னிடம்தான் பயம், கடவுளிடமல்ல!

[மூவரும் சிரிக்கிறார்கள்].

சந் :—இன்னும் நீ குழந்தை போல் விளையாடிக் கொண்டிரு.

வன :—சொல்ல மறந்து விட்டேன். வெந்நீர் ஆறிவிடப் போகிறது. நீங்கள் போய் குளியுங்கள் அப்பா.

சந் :—சரி மிஸ்டர் மோகன், நான் வருகிறேன்.

(போகிறார்).

[வனஜா பூமியைப் பார்த்தபடியே நிற்கிறாள். அவளை விழுங்கிவிடுபவன் போல் மோகன் பார்க்கிறான்].

வன :—(தைரியமாக) இதுவரை நீங்கள் பெண்களையே பார்த்ததில்லையோ?

மோ :—(மென்று விழுங்கி) ஏன் இல்லை....................பார்த்திருக்கிறேனே.

வன :—பின் ஏன் என்னை வைத்த விழிவாங்காமல் பார்க்கின்றீர்கள்?

மோ :—(தைரியத்தை வரவழைத்துக் கொண்டு) மன்

னிக்க வேண்டும். உங்கள் பேச்சு, அதில் நெளியும் சாகசம், எல்லாவற்றிற்கும் மேலாகப் பொருள் பொதிந்த உங்கள் கேலி அனைத்தும் என்னை..............

வன :—புண் படுத்துகின்றதா?

மோ :—இல்லை, வனஜா, புளகாங்கிதமடையச் செய்கின்றன.

வன :—உண்மையாகவா?

மோ :—சத்தியமாக.

வன :—என் விளையாட்டைக் கண்டு அனைவரும் என் மேல் சீறி விழுகிறார்கள், ஆனால் நீங்கள்தான் முதன் முதலாகப் பாராட்டுகின்றீர்கள்!

மோ :—வனஜா, நீ விளையாடு, கேலி பேசு, பேசிக் கொண்டே இரு. நான் என் வாழ்நாள் பூராவும் அவற்றை ரசித்துக் கொண்டே இருப்பேன்.

வன :—வாழ்நாள் பூராவுமா? அதெப்படி முடியும்?

மோ :—இன்னும் வெளிப்படையாகக் கூறச் சொல்கிறாயா, வனஜா, நான் உன்னை, உன் அழகை, உன் அறிவாற்றலை காதலிக்கிறேன்.

வன :—மிஸ்டர் மோகன்!

மோ :—வனஜா........!!

[திரை]

காட்சி 3.

[மோகன் வருகிறான்].

கலா :—அண்ணா, டாக்டர் சந்தானத்திடம் ஏராளமான நோயாளிகள் வருகிறார்களோ?

மோ :—ஏன், வருகிறார்கள்!

கலா :—அவர்கள் அனைவரையும் நீதான் கவனிக்கிறாயாக்கும்.

மோ :—இல்லை. அவர் கொஞ்சம் பேரை, நான் கொஞ்சம் பேரை.

கலா :—(வியப்பாக) கொஞ்சம் பேரைக் கவனிப்பதற்கு இத்தனை நாழிகை யாகிறதா?

மோ :—(விரைப்பாக) இதெல்லாம் என்ன கேள்வி?

கலா :—(அதிகாரத் தோரணையில்) ஏன் இத்தனை நாழிகை என்பதுதான் என் கேள்வி.

மோ :—வேலை இருந்தது.

கலா :—(மிருதுவான குரலில்) ஏன் அண்ணா, டாக்டர் சந்தானம் ரொம்ப நல்லவரோ?

மோ :—நல்லவர் தான்.

கலா :—யாரைவிட அவர் நிரம்ப நல்லவர்? அவர், அவருடைய மகளை விடவா?

மோ :—(சிரித்துக் கொண்டே) கலா, நீ பெரிய குறும்புக்காரி, எதையோ மனதில் வைத்துக்கொண்டு எப்படியெல்லாமோ சுற்றி வளைத்துப் பேசுகிறாய்.

கலா :—பின் என்ன அண்ணா, டாக்டர் சந்தானத்திற்கு ஒரு

பெண் இருக்கிறாள் என்று இதுவரை நீ என்னிடம் கூறவே இல்லையே, நீ சொல்லா விட்டாலும் நான் கண்டு பிடித்து விட்டேனா இல்லையா?.........(குழைவாக) அதிருக்கட்டும் அண்ணா அவள் அழகாயிருப்பாளா?

[கலா காப்பியை ஊற்றிக் கொடுக்கிறாள். மோகன் அதை உறிஞ்சிக் குடிக்கிறான்.]

மோ :—ஒரு நாளைக்கு உன்னை அழைத்துக் கொண்டு போய் அறிமுகம் செய்துவைக்கிறேன்.......தூ......தூ......, இதென்ன வாயில் வைக்க முடியவில்லையே ...... ஒரே கசப்பு......... காப்பித்தூளா, சிக்காய்த்தூளா நீ உபயோகிப்பது?

கலா :—(வெறுப்பாக) கசக்கத்தான் கசக்கும். ஏன் என்றால் இது வனஜா போட்ட காப்பி அல்லவே.

மோ :—கலா, நீ பலே ஆள். அவள் பேர் கூடத் தெரிந்து வைத்திருக்கின்றாயே!

கலா :—என்னை யார் என்று நினைத்தாய். நான்தான் கலா.

[கலா, கல கல வென்று சிரிக்கிறாள். மோகனும் அவளுடன் சேர்ந்து சிரிக்கிறான்].

[திரை]

(தொடரும்)

ஆரம்பக் கல்வி சீர்திருத்தக் குழுவிடம் பேட்டி

13-4-55 மாலை 3 மணிக்கு மேற்சொன்ன குழுவின் அழைப்பின் பேரில் சென்னை ஜில்லா ஆசிரிய மானேஜர்கள் மானேஜர்கள் சங்கத்தின் சார்பில் கீழ்க் குறித்த உறுப்பினர்கள் பேட்டி கண்டனர்.

1. பி. வீராகவன், 2 ஏ. ஆர். சேஷாசலம், 3. என் ஏ., நடேச முதலியார், 4. திருமதி மான்யூவல் அம்மையார், 5. எல். இராமச்சந்திர சாஸ்திரி.

சங்கத்தின் சார்பாக ஒரு மனு கொடுக்கப்பட்டது. இதில் எயிடட் பள்ளிகள் செய்துவரும் தொண்டைப்பற்றி விளக்கமாக எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. அடிக்கடி அரசாங்கமும், கல்வியதிகாரிகளும் எயிடட் பள்ளி நிர்வாகத்தில் குறுக்கிட்டு அவர்களைக் கலக்காமலே பல சட்டங்களையும் முறைகளையும் மாற்றி வற்புறுத்துவதால், பொதுவாக ஆரம்பக் கல்வி வளர்ச்சியின் தரம் குறைந்து கொண்டு வருகிறதென்றும், இ. எஸ். எல். ஸி. பரீட்சை ஒழிக்கப்பட வேண்டுமென்றும், ஆசிரியர்களுக்குச் சம்பளம் உடனடியாக உயர்த்தப்பட வேண்டுமென்றும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

கல்விக்கு ரூ. 880 கோடி

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம்பெறுமாம்!

இந்திய சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் கல்வி அபிவிருத்திக்கென மொத்தமாக ரூ. 880 கோடி செலவாகுமென்றும், இத்தொகையில் இடைநிலைப் பள்ளி கல்விக்கென ரூ. 300 கோடிக்கு மேல் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளதென்றும் இங்கு நடைபெற்ற கல்வி இலாகா செயலாளர்கள், டைரக்டர்கள் ஆகியோரதுமாநாட்டின்போது தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தற்போதுள்ள சாதாரண பள்ளிகளில், 2,500 பள்ளிகளை, வரும் 1961–ம் ஆண்டிற்குள்ளாகவே பல நோக்கு உயர்தர இடைநிலைப் பள்ளிகளாக மாற்ற வேண்டும் என்ற தீர்மானம் ஒன்றும் அம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ஆதாரக் கல்விப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள் ஆசிரியர்களுக்குக் குறைந்தபட்ச சம்பள விகிதத்தைப் பற்றியும் யோசனை தெரிவிக்கப் பட்டிருக்கிறது. பயிற்சி பெறாத ஆசிரியருக்குக் குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளம் ரூ. 50; அதற்குக் குறைவாக வாங்குவோருக்கு இப்போது கொடுக்கப்படும் சம்பளத்திற்கும் ரூ. 50–க்குமுள்ள வித்தியாசத் தொகையைத் தந்துவிடுவது; மெட்ரிகுலேஷன் தேறிப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்குச் சம்பளம் ரூ. 75; மெட்ரிகுலேஷன் தேறாது பயிற்சி பெற்ற ஆசிரியருக்கு ரூ. 60 என்றும் யோசனை கூறப்பட்டிருக்கிறது.

ஆதாரப் பள்ளிகளில் இரண்டு ஆசிரியர்களுக்காவது குடியிருப்பு வசதி செய்து தரப்பட வேண்டுமென்றும் கோரப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ. 5 லட்சம் வீதம் பள்ளிக்கூடப் பகல் உணவுக்கும், ஆசிரியர்களுக்குக் குடியிருப்பு வீடுகள் கட்ட கடன் உதவிக்காக ரூ. 20 கோடியும், திருப்திகரமான வீடுகள் கட்டித்தரும் திட்டத்திற்கு ரூ. 277 கோடி பிடிக்கும் என்றும் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.

தற்போதுள்ள பள்ளிகளை சீர்திருத்திக் கட்டுவதற்கு அடையாள முறையில் ரூ. 10 கோடி ஒதுக்கப்படுமாம்.

இது தவிர, காரக்பூரிலுள்ள உயர்தரத் தொழில் நுட்பக் கல்லூரியைப் போலவே பம்பாய்க்கு அருகில் ஒன்றும், தென்னேட்டியில் ஒன்றுமாக மேலும் இரண்டு கல்லூரிகள் புதிதாகத் திறக்க முடிவெடுக்கப் பட்டிருக்கிறதாம்.

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

செத்தும் கொடை கொடுத்தான் சீதக்காதி !

இப்படி ஒரு பழமொழி வழங்கி வருகிறது. தமிழ் நாட்டின் தென் பகுதிகளில் பதினெட்டாம் நூற்றாண்டில் காயல் பட்டினத்தில் சீதக்காதி என்னும் பெயர் படைத்த இஸ்லாமிய வள்ளல் ஒருவர் கொடைத்திறம் மிகுந்த அருள்திறம் வாய்ந்தவராக ஒளி வீசித் திகழ்ந்தார். படிக்காசுப் புலவர் போன்ற அறிஞர் பெரு மக்களை அன்புடன் ஆதரித்த பெருமை பிறங்கியவர் சீதக்காதி என்னும் அண்ணல். "ஓர் தட்டிலே பொன்னும், ஓர் தட்டிலே நெல்லும், ஒக்கவிற்கும் கார் தட்டிய பஞ்ச காலத்திலே கூட" வரையாது வழங்கிய வள்ளலாம் அவர். புலவர் படிக்காசர் மிக அழகாகப் பாடியிருக்கிறார். அத்தகு கொடை வள்ளலைப் பற்றித்தான் செத்தும் கொடை கொடுத்தான் சீதக்காதி என்கிற பொன்மொழி நாட்டில் உலவி வருகிறது. சீதக்காதியார், செத்த பிறகு எப்படி கொடை கொடுக்க முடியும்—அது நமக்குப் புரியவில்லை—ஆனால் இந்தக் காலத்தில், விஞ்ஞான மேதை ஈன்ஸ்டின் அந்த அருஞ் செயலைச் செய்து முடித்திருக்கிறார். அது நமக்கு நன்றாகத் தெரிகிறது. அறிவு ஒளி ஈன்ஸ்டின், உயிருடன் இருந்த காலத்தில், தம் ஆராய்ச்சித் திறத்தாலும் ஓய்வறியா உழைப்பாலும், மிகச் சிறந்த விஞ்ஞான உண்மைகள். பலவற்றைக் கண்டுபிடித்து மனித சமுதாயத்திற்கு மட்டற்ற நன்மை புரிந்திருக்கிறார் என்பது, அனைவரும் அறிந்ததே. ஆனால் அவர் இறந்தபிறகும் ஓர் இனிய செயல் புரிந்திருக்கிறார்! அந்தச் செயலாலும் மானிட சாதிக்கு மாபெரும் நன்மைகள் கிடைக்கக்கூடும்.

இயற்கையெய்திய விஞ்ஞான மேதை ஈன்ஸ்டின்,ஏற்கெனவே, தம் மூளை—இதயம்—முதலிய முக்கியமான பல உறுப்புக்களை, தாம் இறந்ததும், தம் உடலிலிருந்து பிரித்தெடுத்து, விஞ்ஞான மருத்துவ ஆராய்ச்சிகட்குப் பயன் படுத்திக்கொள்ள அனுமதி தந்திருக்கிறார். அவ்வாறே அவர் இறந்ததும், அந்த உறுப்புகள் அவர்தம் உடலிலிருந்து எடுக்கப் பட்டு,நியூயார்க்கிலுள்ள டாக்டர் ஹாரிசிம் மார்மன் என்பவரிடம், மருத்துவ ஆராய்ச்சிக்காக ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

பிற பலரிடம் இல்லாத அளவு வியக்கத்தக்க அறிவுக் கூர்மை விஞ்ஞானிஈன்ஸ்டினிடம் காணப் பட்டதே, அதற்கு என்ன காரணம்? அவர்தம் மூளையில், பிற பலரின் மூளைகளில்காணப்படாத சிறப்பான பண்புகள் எவையேனும் இருக்குமோ? பிறரிடம் சிறிதளவே வளர்ச்சிபெற்றுள்ள மூளைக் கூறுகள் எவையேனும், அவரிடம் பெரிய அளவு வளர்ச்சி பெற்றிருக்குமோ? இவைபோன்ற பல ஐயப்பாடுகளை, அன்னார் தம் மூளையை ஆராய்ச்சி செய்வதன்

மூலம், தீர்க்க முடியலாம். எது எப்படியிருந்தாலும், மனித மூளையைப் பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சிக்கு அறிஞர் ஈன்ஸ்டினின் மூளை மிகப் பெரிய அளவு பயன்படும் அல்லவா?

நாம் இறந்தபிறகும் நம் உடலின் உறுப்புகளை வெட்டியெடுப்பதா—செச்சே—அது நமக்கு அவமானமல்லவா என்பது போன்ற போலிப் பெருமையையும் வீண் கவுரவத்தையும் சிறிதும் எண்ணாமல், மனித சமுதாயத்தின் அறிவு வளர்ச்சிக்காக, தானே முன் வந்து, தன் உடல் உறுப்புகளை எடுத்துக்கொள்ளும்படி அனுமதித்த ஈன்ஸ்டினின் உயர்ந்த பண்பை எவ்வளவு போற்றினாலும் தகும். ஆமாம். **இறந்த பின்பும் அறிவை வளர்த்தார். இணையற்ற அறிஞர் ஈன்ஸ்டின்** என்று கூறுவதில் ஏது தவறு?

தமிழ்ச் சுவடி

(Tamil Seat & Desk work)

[இயற்றியவர்:—வித்துவான் பெ. அண்ணாமலையார், தலைமைத் தமிழாசிரியர், அர்ச் கேபிரியல் உயர்நிலைப்பள்ளி, செகண்டரி கிரேடு போதனாமுறைப்பள்ளி, சென்னை—1.]

"தமிழ்ச் சுவடி" என்னும் இந்நூல் ஆரம்பப்பள்ளி இரண்டு மூன்றும் வகுப்பு மாணவர்கட்கு மிகவும் பயன் அளிக்கும். தமிழ் எழுத்துக்களின் அடிப்படை வேற்றுமையாகிய குறில் நெடில் ஓசை உருவ வேற்றுமைகளைப் படங்கள் பயிற்சிகள் மூலம் விளக்குவது. பொருளறியும் சக்தியை வளர்ப்பது. ஆசிரியருடைய சிரமத்தைக் குறைப்பது. 28 விளக்கப் படங்களையும் 32 பயிற்சிகளையும் கொண்டுள்ளது. புத்தம் புதியநூல். முன்னாள் கல்வித்துறைத் தலைவர் **S. சச்சிதானந்தம் பிள்ளை B.A. L.T.** அவர்களுடைய மதிப்புரை பெற்றுள்ளது. மானேஜர்களும் ஆசிரியர்களும் இந்நூலைத் தங்கள் பள்ளிகளில் வைத்து ஆதரிக்க வேண்டிக்கொள்ளப்படுகின்றார்கள். விலை 5 அணா. மொத்தமாகத் தருவிக்கும் வியாபாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் 20% கழிவு தரப்படும். மாதிரிப்பிரதி வேண்டுவோர் 4 அணா தபால் பில்லைகள் அனுப்பிப் பெறலாம்.

முகவரி :—

P. R. பச்சையப்ப செட்டியார்
19. காளத்தி பிள்ளை தெரு,
யானை கௌனி, சென்னை 1.

சுழலும் உலகம்

பார்வையைக் கவர்ந்த பதினொரு நாட்கள்!

மே திங்கள் 10ம் நாள் முதல் 21ம் நாள்வரை, புதிய சீனாவின் தலைநகரமாகிய பீகிங்கின் மீதே உலகத் தலைவர்கள் அனைவரின் பார்வையும் படிந்து கிடந்தது. அங்கே அந்தப் பதினொரு நாட்களும், புதிய சீனாவின் முதலமைச்சர் சூ—என்—லாய் அவர்களை இந்தியாவின் அயல்நாட்டு விவகார வல்லுநர் திரு. கிருஷ்ணமேனன் அவர்கள் சந்தித்து, பார்மோசாப் பிரச்சினையைப்பற்றி உரையாடிக் கொண்டிருந்தார். அவர்களுடைய உரையாடலின் விளைவாக சிக்கல் நிரம்பிய பார்மோசா பிரச்சினைக்கு ஒரு பரிகாரம் கிடைக்கக்கூடும் என்று உலகத் தலைவர்கள் அனைவரும் ஒருமுகமாக நம்புகின்றனர். ஆகவேதான் அனைவரின் கவனத்தையும் ஒருங்கே கவரத் தக்க உயரிய சிறப்பு அந்த உரையாடலுக்குக் கிடைத்தது.

இருவர்தம் உரையாடல் முடிந்து திரு. கிருஷ்ணமேனன் இந்தியாவுக்குப் புறப்பட்டநேரத்தில், உரையாடல் மிகவும் திருப்திகரமாக இருந்தது என்றும், மீண்டும் ஓர்முறை தாங்கள் இருவரும் சந்திக்க நேரிடும் என்றும், பிரச்சினையைப்பற்றிய எல்லா விவரங்களையும் தாங்கள் அலசிஆராய்ந்ததாகவும் தெரிவித்திருக்கிறார். சீனப்பிரதமர் சூ-என்-லாய் இது பற்றிப் பேசும்போது, "உரையாடல் மிகுந்த பயனுள்ளதாக இருந்தது. இனி எதிர்காலத்தைப்பற்றி மிகுந்த நம்பிக்கையோடு இருக்கமுடியும்" என்று அறிவித்திருக்கிறார்.

உரையாடல்முடிந்து, மேனன் அண்மையில்தான் டில்லிக்குத் திரும்பியிருக்கிறார். இந்தியாவின் முதலமைச்சர் பண்டித நேருவை அவர் கண்டு இதுபற்றி உரையாடிய பிறகு இத்துறையில் மேலும் பல சிறந்த மாற்றங்கள் ஏற்படக்கூடும் என்று உலகம் எதிர்பார்க்கிறது.

பார்மோசாவைப்பற்றி; அமெரிக்கத் தலைவர் பேசினாலும், பிரிட்டனின் பிரதமர் குறிப்பிட்டாலும், சீனாவின் முதல்வர் முழக்கமிட்டாலும், இந்தியாவின் தலைவர் விளக்கம் தந்தாலும், எவர் எங்கே எப்போது அது பற்றி இயம்பினாலும் உலகம் இதுபோது மிக மிகக் கூர்ந்து கவனிக்கிறது. இந்த அளவுக்கு உலகத்தின் கவனத்தைத் தன்பால் ஈர்த்துவிட்ட பார்மோசா, ஒரு பெரிய தீவு. நாற்புறமும் கடலால் சூழப்பட்ட அந்த நிலப் பகுதி, பசிபிக் கடலில், சீனாவுக்

குக் கிழக்கேயும், ஜப்பானுக்குத் தென்மேற்கேயும், பிலிப்பைன் தீவுகளுக்கு வடக்கேயுமாக, அமைந்து கிடக்கிறது. அதனுடைய பரப்பளவு, ஏறத்தாழ 14,000 சதுர மைல். மக்கள் தொகை, கிட்டத்தட்ட 70 லட்சம். ஒரு சில ஆயிரம் என்கிற எண்ணிக்கையையுடைய பூர்வீகக் குடிகளைத் தவிர அத்தீவினில் உள்ள எல்லா மக்களும் சீன இனத்தவரே.

பெயரிலே அழகு— வரலாற்றிலே கொடுமை!

பார்மோசாவுக்கு, அந்தக் தீவின் மக்கள் தொன்றுதொட்டு வழங்கிவரும் பெயர் **தைவான்** என்பதாகும். இப்போது சீன நாட்டு அரசாங்கம் அந்தத் தீவை தைவான் என்றுதான் குறிப்பிடுகிறது. தைவான் என்றால் சீன மொழியில் எழில் என்று பொருளாம். பெயருக்கு ஏற்ப அந்தத் தீவு உண்மையிலேயே எழில் பொருந்திய ஒன்றாகத்தான் காட்சியளிக்கிறது. அடர்ந்த காடுகளும், உயர்ந்த மலைகளும், பசுமை நிரம்பிய வயல்களும் நிறைந்து காண்பவர் தம் கண்களை மட்டுமல்லாமல் கருத்தையும் கவர்ந்து, அவர்கள்தம் கலையுள்ளத்தில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றுவிடும் ஆற்றலும் அழகும் வாய்ந்ததாகத் தான் இருக்கிறது பார்மோசா.

பெயரிலேயும், நாட்டின் அமைப்பிலேயும், அழகு ததும்புவது, எவரும் மறுக்கொணாத உண்மை. ஆனால் அதன் அரசியல் வரலாற்றிலே அழகு நிரம்பிய அமைதி அல்ல, கொடுமை ததும்பிடும் கொந்தளிப்புதான் இருந்து வந்திருக்கிறது நீண்ட காலமாக.

பார்மோசாத் தீவின் சென்ற கால வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், போர்ச்சுகீசியர், ஸ்பெயின் நாட்டினர், டச்சு தேசத்தவர், பிரெஞ்சுக்காரர் ஆகிய பல்வேறு நாட்டினரின் ஆதிக்கத்தில் அது மாறி மாறி இருந்து வந்த உண்மை தெளிவாகத் தெரிகிறது. பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் அந்தத் தீவு ஜப்பானியரின்படையெடுப்புக்கு ஆளாகி அவர்களுடைய ஆதிக்கத்தின்கீழ் அடங்கிவிட்டது.

1939 முதல் 1945வரை நடைபெற்ற இரண்டாவது உலகப் போரின் முடிவில் ஜப்பான் தோல்வியடைந்து நேசநாடுகளிடம் சரணாகதி அடைந்ததல்லவா? அந்த நேரத்தில் பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா ஆகிய மூன்று வல்லரசுகளின் தலைவர்கள் கூடிப் பேசியபோது பார்மோசாத் தீவு யாருக்கு உரியது என்பதை ஆரத் தீர ஆராய்ந்து பார்த்தனர். பார்மோசாவில் வாழ்பவர்கள் நூற்றுக்குத் தொண்ணூற்றி ஒன்பது பங்கு சீனர்களே. சீன மொழியும் சீனக் கலையும், சீனப் பண்பாடுமே பன்னெடுங் காலமாக அந்தத் தீவில் இருந்துவருகிறது.

சீன நாட்டோடு சேரவேண்டிய ஒரு பகுதியே அது என்பதில், யாருக்கும் எப்போதும் ஐயம் இருந்ததில்லை. சீன நாட்டின் கிழக்குக் கரைக்கு மிக அருகே 150 மைல் தொலைவில் இருப்பது அத்தீவு. வரலாறு, நில அமைப்பு, பேசும் மொழி, வாழும் மக்கள், வளரும் கலை ஆகிய எந்தக்கண்ணோட்டத்தின் படிப் பார்த்தாலும் பார்மோசா சீனாவுக்கே உரியது என்பது தெளிவாகத் தெரிவதால், அப்படியே அறிவித்து விட்டன ரஷ்யா—பிரிட்டன் — அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளும்.

உலகப்போர் முடிந்த நேரத்தில், **பாட்ஸ்டாம்** என்னும் இடத்தில், அமெரிக்காவின் சார்பில் ட்ரூமன், பிரிட்டனில் சார்பில் அட்லி, ரஷ்யாவின் சார்பில் ஸ்டாலின் ஆகிய மூவரும் கூடிப் பேசி இறுதியில் வெளியிட்ட கூட்டு ஒப்பந்தத்தில் இந்த உண்மை ஐயத்திற்கு இடமின்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வென்றது புரட்சி! பிறந்தது சிக்கல்!

பாட்ஸ்டாம் ஒப்பந்தம் வெளியிடப்பட்டபோது, பார்மோசாத் தீவு, சீனாவுக்குத்தான் உரியது என்பதிலே, உலக வல்லரசு எதற்கும் எந்த அளவு ஐயமும் இல்லை. ஆனால் அதுபோது சீன நாட்டின் ஆட்சி, அமெரிக்க நாட்டுடன் இணைபிரியா உறவுகொண்டிருந்த சியாங்—கே—ஷேக் குழுவினரிடம் இருந்தது.

ஆனால் போர்முடிந்த சிறிது காலம் கழிந்ததும், சீனாவில், சியாங்—கே—ஷேக் கும்பலை எதிர்த்து நீண்ட காலமாக நடைபெற்றுவந்த மக்கட் புரட்சி அதன் உச்சநிலையை அடைந்தது. முதலாளித்வ சக்திகளின் செல்லப் பிள்ளையாக உள்ள சியாங்—கே—ஷேக்கா இன்னமும் எங்களை ஆள்வது என்று வீறு கொண்டெழுந்து, வீரப்போர் விளைத்தனர் சீனநாட்டு இளைஞர்கள். சியாங்—கே—ஷேக்கின் நீண்டகால ஆட்சியில் பேயாட்டம் ஆடிக்கொண்டிருந்த அதிகாரிகளின் கொடுமை, லஞ்சம், ஊழல், வறுமை, பசி ஆகிய தீய சக்திகளெல்லாம் மக்களிடத்தில் கட்டுக்கடங்காத கோபத்தை மூட்டி, சியாங்கின் ஆட்சியைக் குப்புறக் கவிழ வைத்தது. மக்களின் பட்டாளம் கிடுகிடுவென முன்னேறிற்று. அவர்களின் தலைவர் மா—சே—துங் வெற்றி பெற்றார். சியாங்-கே-ஷேக்கோ தப்பினேன் பிழைத்தேன்என்று அருகேயிருந்த பார்மோசாதீவுக்குத் தப்பியோடி அடைக்கலம் புகுந்தார். சீனநாடு முழுவதும் மா—சே—துங்கின் தலைமையில் அமைந்த ஆட்சிக்கு உள்ளாயிற்று. சூ—என்-லாய், புதிய ஆட்சியின் முதலமைச்சரானார்.

சீன நாட்டிற் கிளர்ந்தெழுந்த புதிய ஆட்சி, அதுவரை அந்த நாட்டைத் தன்னுடைய கைப்பாவையாக வைத்து ஆட்டிப் படைத்து வந்த அமெரிக்க அரசின் தொடர்பைத் துளியும்

விரும்பவில்லை. அதற்கு மாறாக சோவியத் ரஷ்யாவின் தோழமையையே அது விரும்பலாயிற்று. சீன நாட்டின் புதிய அரசும், சோவியத் ரஷ்யாவைப் போலவே, பொதுவுடமைப் பாதையைத் தன்னுடைய பாதையாகக் கொண்டிருந்த காரணத்தால், இரு நாடுகளுக்கிடையே தோழமை மலர்வதும் வளர்வதும் இயற்கையாக அமைந்தன. முதலாளித்வக் கொள்கையில் முழு ஈடுபாடு கொண்ட அமெரிக்கா, புதிய சீனவின் அரசாங்கத்தை சீனவின் அரசாங்கம் என்று ஒப்புக் கொள்ளவும் மறுத்தது. பார்மோசாத் தீவில் அடைக்கலம் புகுந்த சியாங்—கே—ஷேக்கையே, இனியும் சீன நாட்டின் தலைவராகக்கொள்வோம் என்று அறிவித்துவிட்டது அமெரிக்க அரசு.

சீனவில் புதிய ஆட்சி ஏற்பட்டு விட்டது. எனவே புதிய ஆட்சியின் பிரதிநிதியே சீனவின் பிரதிநிதியாக உலக மன்றத்தில் (U. N. O.) இடம் பெறவேண்டும். சீன நாட்டை முற்றிலும் இழந்துவிட்டு, அதற்கு உரிமை உள்ள பார்மோசாத் தீவைமட்டும் தன்னிடம் வைத்துக் கொண்டிருக்கிற சியாங்கே ஷேக்கின் பிரதிநிதிக்கு, சீன நாட்டின் பிரதிநிதி என்று சொல்லிக்கொள்ள சிறிதும் உரிமை இல்லை. சீனவின் பிரதிநிதியாக உலக மன்றத்தில் இடம் பெற்றுள்ள சியாங்கே ஷேக்கின் பிரதிநிதி அங்கிருந்து அகற்றப்பட்டு, மா—சே—துங் ஆட்சியின் பிரதிநிதி அங்கு அமரவைக்கப்படுவதே முறை. அதுதான் நேர்மை என்பதை சோவியத் ரஷ்யாவும் சரி, பிரிட்டிஷ் வல்லரசும் சரி, இந்திய அரசாங்கமும் சரி, தெளிவாக அறிவித்திருக்கின்றன. ஆனல் அமெரிக்க அரசாங்கம் மட்டும் இந்த உண்மையை ஒப்புக்கொள்ள மறுக்கிறது. புதிய சீனவின் பிரதிநிதிக்கு உலக மன்றத்தில் இடம் தர மறுத்து, சீனவை ஆளாத சியாங்கின் பிரதிநிதிக்கே அந்த இடத்தை இனியும் தரவேண்டுமென்று வல்லடி வழக்குச் செய்கிறது.

இத்தகு விசித்திர சூழ்நிலை ஏற்பட்ட நேரத்தில்தான், மா—சே—துங்கின் அரசாங்கம் மற்றொரு பிரச்சினையைக் கிளப்பிற்று. பார்மோசாத் தீவு சீனவுக்கு உரியது என்பதை எல்லா நாடுகளும் ஒப்புக் கொண்டிருக்கின்றன—ஆனல் இப்போதோ அது சீன நாட்டின் அரசாங்கத்திடம் இல்லை—அந்தத் தீவில் இப்போது இருக்கும் சியாங்கோ சீன மக்களால் விரட்டியடிக்கப்பட்டவர்—எனவே பார்மோசாவிலிருந்து அந்த மக்கள் துரோகி விரட்டியடிக்கப்பட்டுத் தீவு சீனவிடம் சேர்க்கப்பட வேண்டும் என்று பேசலாயிற்று புதிய சீன அரசு.

"பார்மோசா, சீனவின் ஒரு துண்டு' எனவே அதனை மீண்டும் நாங்கள் எங்களோடு சேர்த்

துக் கொள்ள விழைகிறோம் என்றால் அது எங்கள் உள்நாட்டுப் பிரச்சினை, பார்மோசாமீது படையெடுப்போம். அதனை உடனே எங்களுடன் இணைத்துக் கொள்வோம்" என்றெல்லாம் கூடி சீன நாட்டு அரசு முழக்கமிடலாயிற்று.

முழக்கமிட்டதே தவிர, பார்மோசாமீது நேரடியாகப் படையெடுத்துவிடவில்லை. ஏனெனில் அப்படிப் படையெடுத்தால், பல பயங்கர விளைவுகள் உருவாகக் கூடுமென்பது சீன அரசுக்கு நன்றாகத் தெரியும். ஏனெனில், பார்மோசாவில் சியாங் கொலுவீற்றிருக்கிறாரே தவிர, உண்மையில் அவருடைய ஆதிக்கத்தில் அந்தத் தீவு இருக்குமானால், அதனைத் தன்னுடன் இணைத்துக் கொள்ள அதிகத் தொல்லைகூட அடையவேண்டாம் சீன அரசு. ஒரே ஒரு படையெடுப்பு போதும்—சியாங்கின் துருப்பு சிதறியோடிவிடும். ஆனால் உண்மையில் பார்மோசா இப்போது சியாங்கின் ஆதிக்கத்தில் இல்லை. அமெரிக்காவின் ஆதிக்கத்தில் இருக்கிறது. இந் நிலையில் சீன அரசு பார்மோசாவின்மீது படையெடுத்தால் அமெரிக்கத் துருப்புகளோடு அது போரிட வேண்டி வரும். அமெரிக்காவுக்கும் சீனாவுக்குமிடையே இப்படியொரு போர் மூளுமானால் சோவியத் ரஷ்யா வாளாயிருக்காது. தன் தோழனாகிய சீனாவைக் காக்க சீனாவின் பக்கம் குதித்துவிடும். அந் நிலையில் பிரிட்டன் பிரான்ஸ் முதலிய நாடுகள் அமெரிக்காவின் பக்கம் சேராமல் இருக்கமுடியாது. இந்த அளவு நிலைமை வளர்ந்து விட்டால் உலகில் உள்ள ஏனைய நாடுகள் இந்தப் பக்கமோ அந்தப் பக்கமோ ஏதேனும் ஒரு குழுவுடன் சேர்ந்துதானே ஆக வேண்டும்? அமெரிக்கா, ரஷ்யா, இரு நாடுகளிடமும் அணுக்குண்டுகள் குவிந்துகிடக்கின்ற இன்றைய நிலையில், இத்தகு போர் மூளுமானால், வெற்றி எவர் பக்கம் என்பதை எவர் தான் கூறமுடியும்?

பார்மோசாவின்மீது தான் நேரடியாகப் போரிட்டால் இப்படியெல்லாம் விளைவுகள் ஏற்படக் கூடும் என்பதை நன்றாக அறிவதால்தான், புதிய சீனா, அப்படிச் செய்யாமல் பொறுமையாக இருக்கிறது.

முறைப்படிப் பார்த்தால் பார்மோசா சீனாவுக்குத்தான் சொந்தம். ஆனால் அமெரிக்கா இந்த உண்மையை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. மறுப்பதற்குக் காரணம், இந்த உண்மையை ஏற்றுக்கொண்டுவிட்டால், பார்மோசாவின்மீது தனக்குள்ள ஆதிக்கத்தை விலக்கியாக வேண்டும். அப்படி விலக்கி விட்டாலோ பசிபிக் கடலில் தனக்குள்ள பாதுகாப்புச் சக்தி குறைந்து, சீனாவின் சக்தி பல மடங்கு வளர்ந்துவிடும். சீன நாடோ சோவியத் ரஷ்யாவுடன் நெருங்கிய நட்புக் கொண்டிருக்கிறது. எனவே சீனாவின் பலம்

வளர்வது, ரஷ்யாவின் பலத்தை வளர்த்து, அந்த அளவுக்கு அமெரிக்காவின் பலத்தைக் குறைத்துவிடும். எனவேதான் அமெரிக்கா பார்மோசாப் பிரச்சினையிலே சிறிதளவும் விட்டுக் கொடுக்க மறுக்கிறது.

பார்மோசாமீது நேரடிப் படையெடுப்பதைத் தொடங்கியே தீருவோம் என்று சீன அரசு பேச்சளவில் முழங்குவதோடு நில்லாமல், செயலளவிலும் பணியாற்றத் தொடங்கி விட்டால், உலக அமைதிக்கு அதைவிடப் பேராபத்து வேறு தேவையில்லை. அங்கிலேயில் உலகப் போர் நிச்சயம் வேண்டு விடும். எனவேதான் பார்மோசாப் பிரச்சினை அமைதியான முறையில் தீரவேண்டுமே என்பதில் உலக நாடுகள் அத்தனையும் முழு ஆர்வம் காட்டுகின்றன.

இந்திய அரசு, சீனுவோடும் நட்புக்கொண்டிருக்கிறது. அது போலவே அமெரிக்க அரசோடும் நட்புடன் இருக்கிறது. ஆதலால் தான், சீனு — அமெரிக்கா — ஆகிய இரு சாராருக்கு இடையே மூண்டுள்ள பார்மோசாப் பிரச்சினையைத் தீர்க்க அந்த இரு சாராரிடமும் ஒரு சேர நட்புக் கொண்டுள்ள இந்தியாவே ஏற்றது என்று பிற நாடுகள் எண்ணுகின்றன.

சூ—என்—லாய்— கிருஷ்ண மேனன் உரையாடலை அனைத்துலகமும் ஆர்வத்தோடு கவனித்ததே அதற்குக் காரணம் இது தான்.

எயிடட் பள்ளி ஆசிரியர்களுக்கு ஓர் வேண்டுகோள்

1955–56–க்கு நமது பாடபுத்தகங்கள் தமிழ் நாட்டிலுள்ள பல புத்தகக் கடைகளில் விற்பனையாகி வருகின்றன. இக் கடைகளில் சுமார் ரூ 50–க்குக் குறையாமல் புத்தகங்கள் வாங்கும் ரசீதுகளை (Cash Bills) எயிடட்பள்ளி தலைமை யாசிரியர்கள், மானேஜர்கள் உடனடியாக அந்த ரசீதுகளைச் சென்னை ஆரம்பக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படிக் கேட்டுக் கொள்கிறோம். அதன் பிறகுதான் அந்தப் பாடசாலையின் பெயரைப் பதிவு செய்து கொண்டு, ஜூலை முதல் 'ஆரம்பக் கல்வி'யை ஒழுங்காக அனுப்ப வைக்க முடியும். புத்தக்கடை ரசீதுகள் ஜூன் 30–க்குள் வந்து விட வேண்டும்.

சென்னை அலுவகத்திற்கு நேராக 'ஆர்டர்' கொடுக்கும் எயிடட் பள்ளி தலைமையாசிரியர்களும் மானேஜர்களும் புத்தகக்கடை ரசீதுகளை அனுப்ப வேண்டியதில்லை. அவர்களுடைய பெயரை 'ஆர்டர்'களைக் கொண்டே பதிவுச் செய்து கொள்ளப்பட்டு, ஜூலை முதல் ஆரம்பக் கல்வி அனுப்பிவைக்கப்படும்.

மானேஜர்,
'ஆரம்பக் கல்வி'

ஆமை வேகத்தில் ஆதாரக் கல்வி!

ஆசிரியர்களின் நிலை உயர்ந்தால்தான் கல்வியின் நிலை உயரும்

சென்னை ராஜ்யக் கல்வி மாநாட்டில் திருவாளர் பரமேஸ்வரன் தலைமையுரை

12—5—55 *அன்று, கடலூரில், சென்னை ராஜ்ய 45-வது கல்வி மாநாடு கூடியபோது, மாநாட்டிற்குத் தலைமை பூண்ட* **திருவாளர் ஈ. எச். பரமேஸ்வரன் எம். எல். சி. அவர்கள்** *நிகழ்த்திய தலைமைப் பேருரையின் முக்கியமான பகுதிகள் பின்வருமாறு:*

நம் நாட்டின் கல்வியின் சரித்திரத்திலேயே மிக முக்கியமான கட்டத்தில் நாம் கூடியிருக்கிறோம். அரை நூற்றுண்டு காலமாக நடத்திவந்த விவாதங்களின் பயனுகச் சில புதுவித சீர்திருத்தங்கள் உதயமாகின்றன.

கல்விக் கமிஷன்கள்

நமது நாட்டின் கல்வி சரித்திரத்தை ஒருமுறை ஆராய்ந்து பார்த்தால் பல கமிஷன்களும் கமிட்டிகளும் சென்னை மற்றும் மத்திய அரசாங்கங்களினுல் நியமிக்கப்பட்டிருந்தும் அவைகளின் சிபாரிசுகளை அமுல் நடத்த எந்த விதமான முயற்சிகளும் எடுக்கப்படாதது ஆச்சரியமானதே. யுத்தத்திற்கு பின் கல்வி அபிவிருத்திக்காக மத்தியக் கல்வி ஆலோசனை போர்ட் 14 வயது வரை ஆண் பெண் இருவருக்கும் இலவசக் கல்வி அளிக்க சிபார்சு செய்திருந்தது. ஆனுல் அரசங்கம் கமிட்டிகள் செய்த சிபார்சுகளை அமுலாக்கவில்லை. இதனுல் இன்று இந்தியாவில் 80 சதவிகித மக்கள் எழுத படிக்கத் தெரியாதவர்களாயிருக்கின்றனர்.

கல்வியும் ஜனநாயகமும்

முதல் 5 ஆண்டு திட்டத்தில் கல்வியின் முக்கியத்துவம் உணர்ந்து இருந்தபோதிலும் மொத்தம் ரூ. 2,069 கோடிகளில் கல்வி அபிவிருத்திக்காக 156 கோடியே ஒதுக்கியுள்ளது மிகவும் வருந்தத் தக்கது.

படிப்பு இல்லாத மக்களையுடைய நாட்டில் குடியரசு மிகவும் ஆபத்தானது. குழந்தைகளுக்குச் சரியான கல்வித் திட்டம் இருந்தால்தான் ஜனநாயகம் தழைத்து வளரும். வாக்காளர்கள் போதிய ஞானமும் வயது வந்தவருக்கு ஓட்டுரிமை என்பது தோல்வியே அடையும். ஆகவே குறைந்த காலத்தில் பெருமளவில் மக்கள் கல்வியறிவு பெறச் செய்வதற்கு வழிசெய்ய

வேண்டும். இந் நாட்டில் ஆதாரக் கல்வித் திட்டத்தைத் தொடங்கியவர்கள், ஆரம்பப் பள்ளி முதல் சர்வகலாசாலை படிப்புவரை பல நிலைகளையுடைய ஆதாரக்கல்வியே சிறந்த திட்டம் என்று நினைத்தனர். ஆனால் ஆரம்பப்பள்ளி நிலையில்கூட சிறு முன்னேற்றம் ஏற்படவில்லை. இதைப் பார்த்தால் எல்லாப் பள்ளிகளையும் ஆதாரப் பள்ளியாக மாற்ற இன்னும் ஒரு நூற்றாண்டு காலம் ஆகும் போலிருக்கிறது. நம் ராஜ்யத்தில் 21,552 ஆரம்பப் பள்ளிகள் இருக்கையில் 76 சீனியர்கள் ஆதாரப்பள்ளி உள்பட 927 ஆதாரப் பள்ளியே உள்ளன.

சென்னை ராஜ்யத்தில் உள்ள ஆதாரப் பள்ளிகளில் பல அவை எப்படியிருக்க வேண்டுமோ அப்படியில்லை. திட்டத்திற்கும் நடைமுறைக்கும் மிகுந்த வேற்றுமை இருக்கிறது. இதற்கு பல காரணங்கள் உண்டு. பல ஆதாரப் பள்ளிகளுக்கு கல்வியில் இந்த புரட்சியை நடத்த போதியவசதிகள் இல்லை. 50 சதவிகிதம் பள்ளிகளில் போதிய இடவசதி, தண்ணீர், தோட்ட இடம் முதலிய வசதிகள் இல்லை. அவைகளுக்குச் சரியான நல்ல உபாத்தியாயர்களும் கிடையாது. தேவையான வசதிகளும், சூழ்நிலையும் அளிக்கப்பட்டாலும் ஆதாரப் பள்ளியின் சிறப்பு அதன் நல்ல அறிவுள்ள வாத்தியார்களையேபொறுத்திருக்கிறது. ஆதாரக் கல்விவெற்றி பெற வேண்டுமானால் திறமை மிகுந்த உபாத்தியாயர்கள் தேவை. இதை எவ்வளவு சீக்கிரம் உணருகிறோமோ அவ்வளவுக்கும் நல்லது.

விவசாயம் ஆதாரப் பயிற்சி

குழந்தைகளின் தயாரிப்பான துண்டு நூல்கள் துண்டு ஆடைகளை எவ்விதம் விற்பனை செய்வது என்பது ஒரு முடிவு காண முடியாத பிரச்னையாக இருந்து வந்துள்ளது. அவைகளின் தரம் மிகவும் மட்டமானதே. ஆகவே அவைகளை விற்பனை செய்வது கடினம். ஆதாரப் பள்ளியினால் தயாரிக்கப்படும் பொருள்களை சேமிக்கும் அரசாங்க கைத்தொழில் பொருள்கள் ஸ்டோர்களில் ஏராளமான ஆடைகளும் நூல்களும் தேங்கி கிடக்கின்றன. எல்லா ஆரம்பப் பள்ளிகளும் ஆதாரப் பள்ளிகளாக மாற்றப்பட்டால் இந்த பிரச்னை இன்னும் பெரிதாகும். அதனால் தான் போலும் நமது கல்வி மந்திரி ஆதாரக் கைத்தொழிலாக விவசாயத்தையே வைக்கவேண்டும் என்று வற்புறுத்துகிறார். ஆனால் விவசாயம் எல்லா வசதிகள் நிறைந்த கிராமப்புற பள்ளிகளில்தான் வைக்கலாம்.

ஹைஸ்கூல் படிப்பு

சென்ற 5 ஆண்டுகளாகவே தெ. இ. ஆசிரியர் சங்கம் ஹைஸ்கூல் படிப்பை இன்னும் ஒரு வருஷம் நீடிக்க வேண்டும்என்று சொல்லி வந்திருக்கிறது.

படிப்பை ஒரு வருஷம் நீடிப்பதால் பள்ளி படிப்பின் தரம் உயரும் என்றும் பல்வேறு தொழில்களில் மாணவர்கள் பிரவேசிக்க இயலுமாதலால் கல்லூரிகளில் சேர நெருக்கடி ஏற்படாது என்றும் முன்பே கூறியுள்ளோம். ஹைஸ்கூல் படிப்பை முடிக்கும் மாணவர்களில் 85 சதவிகிதம் கல்லூரிகளுக்கு போகாமல்வேறு வேலைகளுக்குச்சென்றுவிடுகிறார்கள். ஆகவே ஹைஸ்கூல் படிப்பு பூர்த்தியான படிப்பாக இருக்க வேண்டுமேயல்லாது கல்லூரியில் சேர தயார் செய்யும் படிப்பாயிருக்கக்கூடாது. சமீபத்தில் பிரசுரிக்கப்பட்ட சர்வ கலாசாலை கமிஷன் அறிக்கை டிக்ரி வகுப்புக்கு முன்பு 12 வருட ஸ்கூல் படிப்பு இருக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறது. அரசாங்கமும் சர்வ கலாசாலையும் இந்த சிபார்சை அமல் நடத்துவார்கள் என எதிர்பார்த்தோம். செனட்டும், சென்னை சர்வ கலாசாலை அகடமிக் கவுன்ஸிலும், மத்திய கல்வி ஆலோசனை போர்டும், ஹைஸ்கூல் படிப்பை ஒரு வருடம் நீடிப்பதால் கல்லூரி படிப்பை 3 ஆண்டுகளாகக் குறைக்க முடிவு செய்தது. ஏதாவது ஒரு பெரிய சீர்திருத்தத்தைக் கொண்டு வரும்போது சீர்திருத்தத்தின் உபயோகத்தைப் பற்றிய சந்தேகத்தைக் கிளப்பி அந்த திட்டம் நிறைவேறாமல் ஒத்திப்போடப்படுவது இந்நாட்டின் துர்பாக்கியமாகவே இருந்து வருகிறது.

அடுத்தடுத்த மூன்று நிலைகளிலும் பாடதிட்டங்கள் வகுக்கும் போது அவை ஒன்றோடு ஒன்று இணைந்ததாக இருக்கவேண்டும். ஆரம்ப, மத்ய நிலைகளில் 7 அல்லது 8 வருடங்கள் அளிக்கும் கல்வி ஒன்று முழு திட்டமாக இருந்தால்தான், 4 வயதுவரை இலவசக் கல்விச் சலுகை அளித்தால், ஒரேவிதமான கல்வியாக அது இருக்கும்.

பிரிக்கப்பட்ட பாடத்திட்டங்கள்

ஹைஸ்கூல்களில் பலவகைப்பட்ட பிரிக்கப்பட்ட பாடத் திட்டங்கள் அமைக்கவும், பல—நோக்கு பள்ளிகள் ஏற்படுத்தவும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. இதை எல்லோரும் வரவேற்கின்றனர். பல-நோக்கு பள்ளிகள் ஆரம்பிப்பதால் பலவித நோக்கமுள்ள மாணவர்களுக்கு அவரவர் நோக்கம்,உற்சாகத்தை ஒட்டி பாடங்களைத் தேர்ந்தெடுக்க சாத்தியப்படும்.

தற்போதுள்ள ஹைஸ்கூல்கள், ஹயர் செகண்டரி பள்ளிகளாகத் தங்களை உயர்த்தவும்,பல நோக்குப் பள்ளிகள் திறக்கவும் வசதிகளில்லை என்று சிலர் சொல்வது உண்மையே. ஆகையால் மத்ய மற்றும் ராஜ்ய சர்க்காரே இதற்கான பண உதவியையும் செய்யவேண்டும்.

செகண்டரி கல்வி விஸ்தரிப்பு கமிட்டியின் சிபார்சுகளை அமுலாக்க மத்ய அரசாங்கம் முன் வந்துள்ளது. அதன்படி முதல் 5 ஆண்டு திட்ட முடிவிற்குள்

நாட்டில் 500 ஹைஸ்கூல்கள் பல-நோக்குப் பள்ளிகளாக மாற்றப்படும்.

பரீட்சை முறை

செகண்டரி கல்வி கமிஷன், பரீட்சைகளைப்பற்றி ஒரு அத்தியாயமே கூறியுள்ளது. ஹைஸ்கூல் படிப்பு முடிவில் உள்ள பொது பரீட்சைக்கு வைக்கப்பட்டுள்ள 6 பாடங்களில், 4—ல் மாணவர்கள் தேறினால் போதும் என்றும், பாக்கி பாடங்களுக்கு, வகுப்புகளில் அவர்கள் தேர்ச்சியையே எடுத்துக்கொள்ளலாம் என்றும், பொது பரீட்சையில் கூட மாணவன் இஷ்டப்பட்டால், பரிட்சை எழுதலாம், கட்டாயம் இல்லை என்றும், ஹைஸ்கூல் படிப்பை முடிக்கும் ஒவ்வொரு மாணக்கனுக்கும் பள்ளியில் அவன் வெற்றியை பொறுத்து அத்தாக்ஷி பத்திரம் வழங்கலாம் என்றும் கூறியுள்ளது.

குளிர்ந்த மாதங்களாகிய டிஸம்பர், ஜனவரியில் தேர்வு பரீட்சைகளை வைத்துக்கொள்ளலாம் என்று நமது கல்வி மந்திரி சமீபத்தில் கூறியுள்ளது சில நன்மைகள் உண்டாக்கும். சர்வகலாசாலையினரையும் கலந்துகொண்டு, சாத்தியமானால் நாடு முழுவதும் ஒரேவித கொள்கையை கடைபிடிக்கவேண்டும்.

பள்ளிக் குழந்தைகளுக்கு நடுப் பகல் உணவு

குழந்தைகள் காலையில் சாப்பிடப் போதுமான ஆகாரமின்றி பாதிப் பசியுடன் பள்ளிக்கு வருவதால், பள்ளியில் பாடத்தைக் கவனிக்காமல் சோர்ந்து இருக்கக்கும். ஆகவே குழந்தைகளுக்குச் சாப்பாடு போடுவதும், பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் மற்ற குழந்தைகளுக்குச் சமமாக ஏழைப் பையனும் இருக்கச் சரியான உடை வகைகளும் அளிக்கப்படவேண்டும். சென்னை முதன் மந்திரி இதுவிஷயங்களைக் கவனிப்பதாக உறுதியளித்திருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறோம்.

ஜாதி மத வேறுபாடின்றி 3-ம் பாரம் வரை எல்லா குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி சலுகையளித்துள்ளதையும் குறித்து மகிழ்ச்சி யடைகிறோம்.

ஆசிரியர்கள் நிலையும் சம்பளமும்

ஆசிரியர்களின் பரிபூர்ண ஒத்துழைப்பின்றி எந்த கல்வி சீர்திருத்தமும் வெற்றியடையாது. ஆசிரியர்களின் சம்பளத்தையும், நிலையையும் உயர்த்தாது கல்வி முன்னேற்றத்தைப்பற்றி யோசிப்பது முடிவில் தோல்வியே யடையும். தஞ்சையில் நடந்த சென்ற மாநாட்டில் டாக்டர் ஏ. எல். முதலியார், உபாத்தியாயர்கள், (1) பதவி உத்திரவாதம், (2) வாழ்வதற்கான சம்பளம், (3) எவ்வித குறுக்கீடும் இல்லாத சுதந்திரம், (4) அநியாயமாய் குற்றஞ் சாட்டப்பட்டால் அப்பீல் செய்ய ஒரு அதிகாரி இவைகளைப்பெறஉரிமையுண்டு என்று கூறியுள்ளார்.

முக்கிய அறிவிப்பு

"ஆரம்பக் கல்வி பத்திரிகை" இனும்

சென்ற 1954–55 ஆண்டுக்கு எமது வேண்டுகோளுக்கிணங்கி, பற்பல எயிடெட் பாடசாலை மானேஜர்களும், தலைமை ஆசிரியர்களும், பஞ்சாயத்து போர்டு தலைமை ஆசிரியர்களும், எமது **புது முறை சங்க வாசகங்களை** ஒன்று முதல் ஐந்தாவது வகுப்புவரை **வீரபாண்டியன் வாசகங்கள்** 1 முதல் 8-வது வகுப்பு வரையில் பாட புத்தகங்களாக வைத்தும், சிலர் எமது இதர பாட புத்தகங்களைப் பாடசாலையில் வைத்தும், ஆதரித்தமைக்கு எமது அன்பு கலந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அம்மாதிரியே 1955–56 ஆண்டுக்கும் மீண்டும் எமது பாட புத்தகங்களைத் தொடர்ந்துவைத்து எமது பத்திரிகையை ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

இவ்வாண்டும் எமது பாட புத்தகங்களைத் தொடர்ந்து வைத்துக்கொள்ளும் தலைமை ஆசிரியர்கள், 1955–56–க்குத் தொடர்ந்து வைத்துக்கொள்வதாக, நமது அலுவலகத்திற்கு மே 31–ம் தேதிக்குள் ஒரு கார்டு மூலம் தகவல் அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

அவ்விதம் தகவல் அனுப்பும் பாடசாலைகளின் பெயர்கள் 1955–56 ஆண்டுக்கு மறுபடியும் புதிதாக ரிஜிஸ்டர் செய்யப்பட்டு வழக்கம்போல் நமது ஆரம்பக் கல்வி பத்திரிகையை இனமாகத் தொடர்ந்து அனுப்பப்படும். புத்தகங்கள் வாங்கும் புத்தகக் கடை ரசீதுகளை (Cash Bills) அலுவலகத்திற்கு 1955 ஜுன் மாதம் 30–ம் தேதிக்குள் அவசியம் அனுப்பி விடவும். சென்னை அலுவலகத்திற்கு அனுப்பப்படும் ஆர்டர்களுக்கு Billகள் அனுப்பத் தேவையில்லை. ஆர்டர்களைக்கொண்டே பெயர்களை ரிஜிஸ்டர் செய்யப்படும்.

ஆர்டர்கள் அனுப்பும்போது கவனிக்க வேண்டியவை :

முன்பு தபாற் கட்டணம் 5 தோலாவுக்கு அரையணாவாகயிருந்தது. தற்போது ஓரணாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக சுமார் 20 ரூபாய்க்குப் பெறுமான, சுமார் நாற்பது

புத்தகங்களை தபால் மூலம் அனுப்பப்பட வேண்டுமானால் அதற்கு தபாற் செலவு 5 முதல் 6 ரூபாயாகின்றது. அதாவது 20 ரூபாய்க்குக்கொடுக்கப்படும் 20% கமிஷன் ரூபாய் 4-க்குமேல் தபாற் செலவாகிறது. ஆதலால் புத்தகங்களை ரயில்வே பார்சல் மூலம் வரவழைத்துக்கொள்வது மிகவும் இலாபகரமானது. இரயில்வே செலவு 20 ரூபாய் பெறுமான புத்தகத்துக்கு 1 ரூபாய்க்கு மேல் ஆகாது.

ஆதலால் நேரிடையாகச் சென்னை அலுவலகத்திற்கு ஆர்டர் அனுப்புபவர்கள், மறக்காமல் அருகிலுள்ள இரயில்வே நிலையத்தின் (Railway Station) பெயரை ஆர்டரில் குறிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். அப்படிக்குறிக்கப்படாமல் அனுப்பப்படும் ஆர்டர்கள் நிறுத்தி வைக்கப்பட்டுத் தங்கள் பதில் கிடைத்த பிறகே அனுப்பப்படும்.

கமிஷன் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, தபால்மூலம்தான் அனுப்ப வேண்டுமென விரும்புகிறவர்கள் தங்கள் ஆர்டர்களி லேயே அவ்விதம் குறிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இரயில்வே நிலையம் (Railway Station) அருகாமையில் இல்லாதவர்களும், மொத்தமாகச் சென்னையிலிருந்து புத்தகங்களை வரவழைத்துக்கொள்ள வசதி இல்லாதவர்களும், தங்களுக்கு அருகாமையிலுள்ள புத்தக வியாபாரிகளிடம் ஆர்டர் கொடுத்துச் சில்லரையாக வாங்கிக்கொள்வது இலாபகரமானதாகும்.

எல்லாப் புத்தக வியாபாரிகளுக்கும் 20% கமிஷன் கொடுக்கின்றோம். அவர்கள் செலவும், இலாபமும் போகக் குறைந்தது ரூபாய்க்கு 1 அணா ($6\frac{1}{4}$%) கமிஷன் கொடுக்கும்படியாவது கேட்டு வாங்கலாம். 20% கமிஷன் வேண்டுமென்று விரும்புபவர்கள் சென்னை அலுவலகத்திற்கே ஆர்டர்கள் அனுப்பி இரயில்வே நிலையத்தின் (Railway Station) பெயரையும் தவறாமல் குறித்தனுப்பவும். செலவு 5% போக 15% ஆசிரியர்களுக்கு அவசியம் இலாபம் கிடைக்கும்.

நமது பத்திரிகையில், நமது புத்தகங்களை வாங்கி விற்கும் வியாபாரிகளின் பெயர்களை ஜில்லா வாரியாகப் பிரசுரித்திருக்கின்றோம். அவர்கள் மூலம் புத்தகங்களை வாங்கிக்கொள்ளலாம்; தக்க கமிஷன் கொடுப்பார்கள். இன்னும் எங்கள் புத்தகங்கள் அகப்படாத இடங்களில் ஆங்காங்குள்ள வியாபாரிகளை நமது புத்தகங்களை வரவழைத்து விற்கும்படி ஏற்பாடு செய்து கொள்ளவும்.

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் கவனிக்க வேண்டியவை

நமது அலவலகத்தில் ஒன்று முதல் எட்டாவது வகுப்பு வரையில் ஆரம்பப்பாடசாலைகளுக்குத் தேவையான எல்லாப்பாட புத்தகங்களும் பிரசுரிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஆரம்பப் பாடசாலைகளுக்கு 25 புத்தகங்களும், உயர்தரப் பாடசாலைகளுக்கு 11 புத்தகங்களும் வெளியிடப்பட்டுள்ளன. இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை பாட புத்தகங்களை மாற்றலாமென அரசாங்க உத்தரவில் கண்டிருக்கிறது. ஆதலால் சில பாடசாலைகளில் சிற்சில புத்தகங்களையே மாற்ற வசதியிருக்கும். சில ஆரம்பப் பாடசாலைகளில் எல்லாப் புத்தகங்களையும் மாற்றவசதியாயிருக்கும். அப்பாடசாலைகளுக்கு 25 மாதிரிப் புத்தகங்களை அனுப்புவதென்றால் தபாற்கட்டணம் அதிகமாகின்றது. அப்படி முழு செட்டையும் தபால்மூலம் அனுப்ப எண்ணுபவர்கள் ரூபாய் 7 மணியார்டர் (M. O.) அனுப்பவும். இரயில்வே நிலையம் அருகே உள்ளவர்கள் ரூபாய் 6 அனுப்பினால் முழுசெட் இரயில்வே Paid பார்சல் மூலம் அனுப்பப்படும்.

6 முதல் 8 வகுப்பு வரையில் 11 புத்தகங்கள் தபால் மூலம் பெற விரும்புகிறவர்கள் ரூ. 7–ம் இரயில்வே பார்சல்மூலம் பெற விரும்புகிறவர்கள் ரூ. 6–ம் M. O. அனுப்பவும்.

குறிப்பிட்ட புத்தகங்கள் மட்டும் வேண்டுபவர்கள் ஆரம்பக் கல்விப் பத்திரிகையில் வெளியிட்ட அளவு தபால் பில்லைகள் வாங்கி கவரில் வைத்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தபால் மூலம் அனுப்பப்படும்.

மாதிரிப் பிரதிகள் அனுப்பப்படும் பாடசாலைகளை ரிஜிஸ்டர் செய்து வருகிறோம். குறிப்பிட்ட பாட புத்தகங்களை ஒரு முறைக்குமேல் எக்காரணத்தைக்கொண்டும் மறுமுறை அனுப்ப முடியாது. அப்படி மறுபடியும் பணம் அனுப்பப்பட்டால் தபாற் செலவு கழித்துக்கொண்டு மீதித் தொகையைத் திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

எமது புத்தகங்கள் கிடைக்குமிடங்கள்

சென்னை

1. M. துரைசாமி முதலியார் & கோ.
புக் செல்லர்
1–1, மலையப்பன் தெரு
சென்னை–1.

2. C. குமாரசாமி நாயுடு & சன்ஸ்
புக் செல்லர்
சைனபஜார்
சென்னை–1.

3. P. K.Naidu
புக் செல்லர்
1, பத்ரைய்யன் தெரு
சென்னை–1.

4. பாலகுமார் & கோ
புக் செல்லர்
சைனபஜார்

5. தாமோதரம் & கோ
புக் செல்லர்
சைனபஜார்
சென்னை–1.

6. R. அய்யாவு செட்டியார்
புக் செல்லர்
சிந்தாதிரிப்பேட்டை
சென்னை–2.

7. ராஜன் வித்யா எம்போரியம்
புக் செல்லர்
வேப்பேரி, சென்னை–7.

8. ராஜா ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
78, பெரம்பூர் பாரக்ஸ்
வேப்பேரி, சென்னை–7.

9. திருமலை ஸ்டோர்
புக் செல்லர் & ஜெனரல் மர்ச்சண்ட்
தி. நகர், சென்னை–17.

10. P. T. சாமி & கோ
புக் செல்லர்
நுங்கம்பாக்கம்
சென்னை–6.

11. சரஸ்வதி ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
நுங்கம்பாக்கம், சென்னை–6.

செங்கல்பட்டு

1. லட்சுமணசிங்
புக் செல்லர்
குன்னத்தூர்
வயா—பூந்தமல்லி

2. மோகன் புக் டிப்போ
காஞ்சீபுரம்

3. P. T. மாசிலாமணி முதலியார்
புக் செல்லர்
காஞ்சீபுரம்

4. T. K. முனிரத்தினம்
புக் செல்லர்
திருக்கழுக்குன்றம்

5. M. D. அய்யாசாமி
புக் செல்லர்
கருங்குழி.

வடஆற்காடு

1. A. M. ஜெயராமன்
புக் செல்லர்
திருப்பத்தூர்

2. ஸ்டேஷனரி மார்ட்
புக் செல்லர்
குடியாத்தம்

3. K. M. சாமி & சன்ஸ்
புக் செல்லர்
ஆற்காடு

4. K. V. பிரஸ் புக் டிப்போ
வேலூர்

5. K. M. பாச்சா
புக் செல்லர்
வந்தவாசி

6. எவர் கிரீன் புக் ஷாப்
குடியாத்தம்

7. S. K. வெங்கட்ட கிருஷ்ணா
& கோ
புக் செல்லர்
திருப்பத்தூர்

8. V. D. ரத்தன முதலியார்
புக் செல்லர்
குடியாத்தம்

9. A. M. முனிரத்தின
முதலியார்
புக் செல்லர்
ஆம்பூர்

10. K. J. R. சாமி
புக் செல்லர்
போளூர்

11. A. பாக்கிய முதலியார்
புக் செல்லர்
வேலூர்

12. குருகுல கிருஷ்ணா
ஸ்டோர்
41, லாங் பஜார்
வேலூர்

13. S. ராமசாமி
புக் செல்லர்
ஆம்பூர்

14. கிருஷ்ணா ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
வாணியம்பாடி

15. தேவி லுங்கி கம்பெனி
புக் செல்லர்
சம்பத்ராஜம்பேட்டை

16. ஸ்ரீ லட்சுமி புக் டிபோ
ஆரணி

17. T. V. C. ஷண்முகம்
புக் செல்லர்
திருவண்ணாமலை

18. N. K. பாணி & பிரதர்ஸ்
வேலூர்
புக்செல்லர்

19. B. ராமகண்ணு செட்டி
& சன்ஸ்
புக் செல்லர்ஸ்
திருவத்திபுரம்

20. கோதண்ட செட்டி
புக் செல்லர்
ஆரணி

21. மாதா ஸ்டோர்ஸ்
கஸ்தூரி மார்க்கட்
ஆற்காடு

23. V. M. ராஜமாணிக்கம்
புக் செல்லர்
திருப்பத்தூர்

24. P. தங்கவேல் பிள்ளை
புக் செல்லர்
திருவண்ணாமலை

25. A. G. முகமது சிபக்துல்லா
ஊஸ்வி

புக் செல்லர்
பஜார் ஆம்பூர்

26. K. M. கேசவ சேர்வை
மர்ச்சண்ட்
மேலாலங் குப்பம்
குடியாத்தம் P.O.

27. P. C. M. வெங்கட்டராம
செட்டி
ஜெனரல் மரச்சண்ட்
போளூர்

28. T. V. C. கண்ணன்
புக்டிப்போ
மண்டபம்
திருவண்ணமலை

29. P. S. சரவணமுதலியார்
புக் செல்லர்
ராணிப்பேட்டை

30. T. V. C. முனிரத்தின
செட்டியார்
புக் செல்லர்
திருவண்ணமலை

தென் ஆற்காடு

1. A. G. ராஜன் ஸ்டோர்ஸ்
ஜெனரல் மர்ச்சண்ட்
பண்ருட்டி

2. K. V. ராஜா செட்டியார்
ஜெனரல் மர்ச்சண்ட்
வெள்ளயன்குப்பம்.

3. V. B. கணேசன்
புக் செல்லர்
விழுப்புரம்

4. T. R. சுந்தரமூர்த்தி
செட்டியார்
மளிகை & புக்ஷாப்
சங்கராபுரம்

5. கமலா ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
பஜார் தெரு
விழுப்புரம்

6. S. V. சாரங்கபாணி
ஜெனரல் மர்ச்சண்ட்
விருத்தாசலம்

7. V. K. M. அருணசல
செட்டியார் & கோ
ஜெனரல் மர்ச்சண்ட்
திருப்பாப்புலியூர்

8. C. C. ராமாநுஜ செட்டியார்
& சன்ஸ்
புக் செல்லர்
சிதம்பரம்.

9. P. முனுசாமி நாயுடு
ஜெனரல் மர்ச்சண்ட்
திண்டிவனம்

10. V. கன்னையா
செட்டியார்
புக் செல்லர்
கள்ளக்குறிச்சி

11. S. R. வெங்கட்ராம
செட்டியார்
ஷாப் மர்ச்சண்ட்
விருத்தாசலம்

12. P. S. ராஜன் & கோ.
புக் செல்லர்
பண்ருட்டி

13. அம்பிகா ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
ஆநந்தபுரம்

14. G. சம்பந்த முதலியார்
ஜெனரல் மர்ச்சண்ட்
திண்டிவனம்

15. R. ஜெயராம் நாயுடு
மளிகை
ஆண்டிமடம்

16. குமரன் டிரேடிங் அவுஸ்
46, லாரன்ஸ் ரோடு
திருப்பாப்புலியூர்

17. S. கோவிந்தசாமி செட்டி
ஜெனரல் மர்ச்சண்ட்
குறிஞ்சிப்பாடி

18. R. தக்ஷிணாமூர்த்தி
ஜெனரல் மர்ச்சண்ட்
குறிஞ்சிப்பாடி

19. C. N. R. செந்தி
விநாயகம் செட்டியார்
இரும்பு வியாபாரம்
வளவனூர்

20. கேசவலு செட்டியார்
புக் செல்லர்
திண்டிவனம்

21. T. ராஜகோபாலன்
புக் செல்லர்
கிருஷ்ணபுரம்
செஞ்சி P. O.

22. G. பார்த்தசாரதி
அய்யங்கார்

புக் செல்லர்
19, மேற்கு சந்நதி
சிதம்பரம்

23. பாரதி ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
ஆநந்தபுரம்

24. K. S. அப்துல் ஜபார்
ராவுத்தர்
புக் செல்லர்
மேல் சித்தாமூர் P. O.
திண்டிவனம் Tk.

25. N. கண்ணப்ப முதலியார்
புக் செல்லர்
சத்தம்பாடி P. O.
செஞ்சி Tk.

26. C. P. S. புக் ஷாப்
சிதம்பரம்.

27. R. அர்க்காலி
ஜெனரல் மர்ச்சண்ட்
செஞ்சி

தஞ்சை

1. மனோன்மணி விலாஸ்
புக் டிபோ
விஜயபுரம்
திருவாரூர் Tk.

2. இராமலிங்கா புக் டிபோ
விஜயபுரம்
திருவாரூர் Tk.

3. K. கோவிந்தசாமி பிள்ளை
& பிரதர்ஸ்
மளிகை
பந்தணை நல்லூர்
வயா, குத்தாலம்

4. R ஸ்ரீனிவாச நாயுடு
புக்செல்லர்
மாயூரம்

5. சன்மார்க்க கலா நிலையம்
வள்ளுவர் இல்லம்
ஆக்கூர்

6. P. V. நாதன் & கோ
புக் செல்லர்
கும்பகோணம்

7. பிரகாஷ் டிரேடர்ஸ்
புக் செல்லர்
கும்பகோணம்

8. M. கணபதி
புக் செல்லர்
காசிக்கடை தெரு
திருத்துறைப் பூண்டி

9. ஸ்ரீ நாராயண புக் ஸ்டால்
காந்தி ரோட்
மன்னார்குடி

10. R. ராமாநுஜம் நாயுடு
புக் செல்லர்
மாயூரம்

11. திரு. வள்ளலார் புக் டிப்போ
த. பழூர்.

12. பாரதமாதா புக் டிப்போ
93 எல்லையம்மன்
கோவில் தெரு
தஞ்சை

13. குமரன் ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
மாயூரம்

14. விஸ்வநாத செட்டியார்
ஷாப் மர்ச்சண்ட்
நாகூர் தஞ்சை

திருச்சி

1. முத்து புக் டிப்போ
மைலம் சந்தை
திருச்சி

2. T.A. பச்சையப்ப முதலியார்
புக் செல்லர்
பொன் பரப்பி
Ponparappi

3. T. பெரியசாமி பிள்ளை
ஜெனரல் மர்ச்சண்ட்
பெரம்பலூர்

4. பழனியப்ப பிரதர்ஸ்
புக் செல்லர்
தெப்பக்குளம்
திருச்சி

5. S. B. பாலநாகய்ய செட்டியார்
புக் ஷாப்
கரூர்

6. C. M. நடேசன்
புக் செல்லர்
அரியலூர்

7. பழனி ஆண்டவன்
புக் டிபோ
தெப்பக்குளம்
திருச்சி

8. R. சின்னப்பன்
News paper Merchant
அரியலூர்

9. சென்னப்ப ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
தாத்தய்யங்கார் பேட்டை

10. நாதன் விலாஸ்
புக் டிப்போ
கீழ் பழூர்
(வயா) அரியலூர்

11. V. ஜெகதீசன்
புக் செல்லர்
பட்டுக் கோட்டை

12. சரஸ்வதி ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
கோனப்பட்டி

13. B. கோவிந்தராவ்
புக் செல்லர்
துறையூர்

மதுரை

1. ராமசாமி
புக் செல்லர்
பழனி

2. V. ராமசாமி செட்டியார்
புக் செல்லர்
வத்தலக் கோட்டை

3. ஸ்ரீ மீனாட்சி & கோ
புக் செல்லர்
புது மண்டபம்
மதுரை

4. H. M. முகபது மொகிதீன்
ஷாப்
உசிலம்பட்டி

5. S. முத்துசாமி
புக் செல்லர்
போடிநாயகனூர்

6. M. நடன சுந்தரம்
பிரதர்ஸ்
புக் செல்லர்
புது மண்டபம்
மதுரை

7. K. கிருஷ்ணமாச்சாரி
ஷாப்மர்ச்சண்ட்
நிலக் கோட்டை

8. P. K. A. குழந்தை வேலு
நாடார்
புக் செல்லர்
திண்டுக்கல்

9. S. V. S. சிவராம லிங்க
நாடார்
புக்ஷாப்
திருமங்கலம்

10. M. தக்ஷிணாமூர்த்தி
& கோ
புக் செல்லர்
புதுமண்டபம்
மதுரை

11. P. L. அருணாசல முதலி
யார் அண்டு சன்ஸ்
எஜுகேஷனல்
பப்ளிஷர்
புது மண்டபம்
மதுரை

12. கணேசன் ஸ்டோர்ஸ்
காந்தி ரோடு
பழனி

13. K. V. அபபாஷா ராவுதர்
அண்டு சன்ஸ்
ஜெனரல் மர்ச்சண்ட்
ஒட்டன் சத்திரம்

14. V. ஆறுமுகம் பிள்ளை
ஷாப் மர்ச்சண்ட்
பெரியகுளம்

15. S. K. காளி முத்து
செட்டியார்
ஷாப் மர்ச்சண்ட்
போடிநாயகனூர்

16. K. P. R. சாரங்கபாணி
செட்டியார்
ஷாப் அண்டு ஜனரல்
மர்ச்சண்ட்
பழனி

K. V. நாராயண அய்யர் சன்ஸ்
புக்செல்லர்
மெயின்ரோட்
திண்டுக்கல்

18. அமீதியா ஸ்டோர்ஸ்
ஷாப் மர்ச்சண்ட்
பேரையூர்

19. S. M. சோமய்யா
ஷாப்
சின்னக் கடை வீதி
திருமங்கலம்

20. ஜெனரல் ஸ்டோர்ஸ்
30. பெரிய கடை வீதி
பழனி

21. T. S. குருசாமி நாடார்
ஜெனரல் மர்ச்சண்ட்
கள்ளிகுடி

22. V. முத்து தேவர்
தனலக்ஷ்மி ஸ்டோர்ஸ்
சில்வார் பட்டி

23. K. சிவசுப்பிரமணி
ஷாப் மர்ச்சண்ட்
போடி நாயகனூர்

24. S. P. சூரியநாராயண
பிள்ளை
புக் ஷாப்
மெயின்ரோட்
திண்டுக்கல்

25. S. P. M. தங்கமணி
& பிரதர்ஸ்
ஷாப்
கள்ளி குடி

26. அருணா ஸ்டோர்ஸ்
ஜெனரல் மர்ச்சண்ட்
உசிலம்பட்டி

27. S. S. இராஜன்
புக்செல்லர்
புதுமண்டபம்
மதுரை

ராமநாதபுரம்

1. T. அமிர்தம்
ஷாப்
கல்லூரணி

2. A. V. வேல் முருக நாடார்
புக் ஷாப்
கள்ளிச் சேரி
துலுக்கப்பட்டி P.O.

3. K. S. பிள்ளை & சன்ஸ்
புக் செல்லர்
ராஜ பாளையம்

4. S. நடராஜ நாடார்
புக் ஷாப்
அருப்புக்கோட்டை

5. K. M. S. சோமசுந்தரம்
செட்டியார்
புக் ஷாப்
ராமநாதபுரம்

6. M. M. சின்னசாமி பிள்ளை
& சன்ஸ்
புக் செல்லர்
ஸ்ரீ வில்லிபுத்தூர்

7. அருணா ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
ராமநாதபுரம்

8. S. T. சாமி & சன்ஸ்
புக் ஷாப்
ராமநாதபுரம்

9. ஸ்ரீ மாரியம்மன்
ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
விருதுநகர்

10. V. பானுசாமி செட்டியார்
புக் ஷாப்
காரைக்குடி

11. T. முத்துசாமி நாடார்
மார்ச்சண்ட்
சிட்டி பஜார்
அருப்புக்கோட்டை

12. ராஜா ஸ்டோர்ஸ்
புக் செல்லர்ஸ்
ஸ்ரீ வில்லிப் புத்தூர்

13. M. M. S. ராமசாமி
செட்டியார்
புக் செல்லர்
பரமகுடி

14. M. S. கருப்பைய்ய
நாடார்
புக் செல்லர்
சாத்தூர்

15. ஸ்ரீ கண்ணன் ஸ்டோர்
தியாகிகல் ரோட்
தேவகோட்டை

16. ராணி ஸ்டோர்ஸ்
வண்டிக்கார தெரு
ராமநாதபுரம்

17. C. முத்து
ஷாப் மார்ச்சண்ட்
இளையான் குடி

18. பூதக பண்ணை
ஆர்ச்
தேவகோட்டை

19. A. R. முத்து பானு செட்டி
புக் செல்லர்
சாலையூர்
இளையான் குடி

20. S. G. ரோசரி
புக் செல்லர்
புதிய குடி
சாயல் குடி P.O.

21. கலா நிலையம்
புக் செல்லர்
கரைக்குடி

22. K. S. ஷாவுல் ஹமீத்
ஜெனரல் மார்ச்சண்ட்
முஸ்லிம் பஜார்
கீழக்கரை

23. O. R. A. ஷேக் தாவுத்
& கோ
புக் செல்லர்
அபிராமம்

24. C. M. M. முகமது
காஸிம்
ஜெனரல் மார்ச்சண்ட்
முதுகுளத்தூர்

25. M. S. அண்ணாமலை
நாடார்
ஜெனரல் மார்ச்சண்ட்
சாத்தூர்

26. S, நடராஜ நாடார்
ஷாப் மார்ச்சண்ட்
அருப்புக்கோட்டை

27. S. C. சங்கம செட்டியார்
மளிகை
மெயின் பஜார்
விருது நகர்

28. R. கருப்பய்யா
புக் செல்லர்
பெட்டி கடை
சாயல் குடி P.O.

திருநெல்வேலி

1. ஸ்ரீ கோபாலன் ஸ்டோர்
புக் செல்லர்
சங்கரன்கோயில்

2. U. R. பாபநாசம் பிள்ளை
புக் செல்லர்
வீரவநல்லூர்

3. டவுன் பிரஸ்
புக் செல்லர்
கோவில்பட்டி

4. K. S. முத்து
பாணிஸ் புக் டிப்போ
கள்ளி குளம்

5. M. ஷண்முகம் பிள்ளை
புக் செல்லர்
கோவில்பட்டி

6. ஸ்ரீ கோபாலன் அண்டு கோ
புக் செல்லர்
கோவில்பட்டி

7. A. S. C. சோனமுத்து
நாடார் அண்டு கோ
புக் செல்லர்
பெரியகடை வீதி
கோவில்பட்டி

8. ஸ்ரீ ஷண்பகவள்ளி
புக் ஷாப்
கோவில்பட்டி

9. ஸ்ரீ முருகன் ஜெனரல்
ஸ்டோர்ஸ்
தென்காசி

10. டயோசீஸன் புக் டிப்போ
பாளையங்கோட்டை

திருநெல்வேலி

11. J. A. செலஸ்டயின்
பெர்னன்டோ
புக் செல்லர்
வீரபாண்டியன் பட்டணம்

12. நேஷனல் ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
எருவாடி

சேலம்

1. சக்ரபாணி செட்டி
புக் செல்லர்
இராசிபுரம்

2. L.M. நாகமய்யா செட்டியார்
புக் செல்லர்
ஆத்தூர் சேலம்

3. A.K. சந்திரய்ய செட்டியார்
புக் செல்லர்
(Fort) சேலம்

4. பரமசிவம் பிள்ளை அண்டு
சன்ஸ்
புக் செல்லர்
செவ்வாய்பேட்டை

5. M. S .R. பொன்னுசாமி
முதலியார் அண்டு சன்ஸ்
மளிகை
பாப்பாரப்பட்டி

6. ஸ்ரீ சாய் ஜெனரல் ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
1–வது அக்ரகாரம்
சேலம் டவுன்

7. D. A. மாணிக்க செட்டி
புக் செல்லர்
தர்மபுரி

8. ராக் அவுஸ்
புக் செல்லர்
நாமக்கல்

9. மவுண்ட் அவுஸ்
புக் செல்லர்
நாமக்கல்

10. G. ராமசந்திர நாயுடு
ஸ்ரீராம விலாஸ் புக்ஷாப்
ஓமலூர்

11. D. A. நந்த கோபால்
புக் ஷாப்
தர்மபுரி

12. M. N. சுப்பிரமணிய
முதலியார்
யார்ன் மர்ச்சண்ட் அண்
புக் செல்லர்
திருச்செங்கோடு

கோயம்புத்தூர்

1. K. O. பேட்டை கவுடர்
புக் செல்லர்
கோயம்புத்தூர்

2. P. R. S. மணியம்
பல்லடம் ரோட்
திருப்பூர்

3. கவிஞர் பதிப்பகம்
241, ராஜா தெரு
கோயம்புத்தூர்

4. C. R. நடராஜன் அண் சன்
கிருஷ்ணா விலாஸ் புக் டிப்போ
பெரிய கடைத் தெரு
கோயம்புத்தூர்

5. M. K. சுப்பிரமணியன்
ஷாப் அண்டு புக் மர்ச்சண்ட்
வால்பாறை

6. ஷண்முகாநந்தா புக் டிப்போ
கோபிசெட்டி பாளையம்

7. S. S. பானுசாமி செட்டி
புக்ஸ் அண்டு ஸ்டேஷனரி
மர்ச்சண்ட்
சத்தியமங்கலம்

8. தண்டபாணி ஸ்டோர்ஸ்
ஷாப் அண்டு புக் செல்லர்
தாராபுரம்

9. K. V. N. கவுண்டர்
அண்டு கோ
ஜெனரல் மர்ச்சண்ட்
பெருந்துறை

10. N. பழனிசாமி கவுண்டர்
அண்டு கோ
புக்செல்லர்ஸ் அண் ஸ்டேஷனரி
14/16 பல்லடம் ரோடு
திருப்பூர்

11. U. S. நாகமாணிக்கம்
செட்டியார்
புக் செல்லர் அண்டு ஜெனரல்
மர்ச்சண்ட்
டாலி ரோடு
உடுமலைப்பேட்டை

12. A. L M. பொன்னுசாமி
முதலியார்
ஜெனரல் மர்ச்சண்ட்
அந்தியூர்

13. பாலதண்டாயுதம்
செட்டியார்
புக் செல்லர்
32, பஜார் தெரு
பொள்ளாச்சி

14. ஜெயம் அண்டு கோ
புக் செல்லர்
ஈரோடு

15. டைமன் ஜுப்லி
புக்ஸ் & ஸ்டேஷனரி டிப்போ
கோபிசெட்டிபாளையம்

16. ராஜா புக் ஷாப்
டாலி ரோட்
உடுமலைப்பேட்டை

17. சிவலிங்க விலாஸ்
புக் டிப்போ
ஈரோடு

18. பாலசுப்பிரமணியம்
செட்டியார் அண்டு சன்ஸ்
புக் செல்லர் & ஸ்டேஷனர்ஸ்
பொள்ளாச்சி

19. A. A. குட்டியப்பா
முதலியார்
ஜெனரல் மர்ச்சண்ட்
ராஜா தெரு
அந்தியூர்

20. கருப்பண்ண கவுடர்
புக் செல்லர் அண் ஸ்டேஷனரி
ராஜா தெரு
கோயம்புத்தூர்

நீலகிரி

1. அறிவு நூலகம்
புக் செல்லர்
உதகமண்டலம்

2. M. குமாரசாமி அண் சன்ஸ்
புக் செல்லர்
மார்க்கட்
கூனூர்

3. T. M. ஆரோக்கியசாமி
அண் சன்ஸ்
புக் செல்லர்
மார்க்கட்
உதகமண்டலம்

4. T. R. மீரா மொஹிதீன்
புக் செல்லர்
மார்க்கட் கூனூர்

5. S. நாகப்ப செட்டியார்
புக் செல்லர்
மார்க்கட், கூனூர் R. S.

6. I. B. J. நந்தி கவுடர்
& கோ
ஜெனரல் மர்ச்சண்ட்
உதகமண்டலம்

(79-ம் பக்கத் தொடர்ச்சி)

உங்களுடைய மதிப்புக்குத் தக்கபடியே கடவுள் வெகுமதி அளிக்கிறார்.

பயன்படாப் புல்லிய வாழ்க்கையைக் காட்டிலும் மரணம் பன்மடங்கு மேலானது.

அறிவு அன்பு ஆற்றல் முதலியவைகளின் வளர்ச்சியே வாழ்க்கையின் நோக்கம்.

எல்லோருடைய தற்பெருமையும் காலக்கிரமத்தில் அழிந்து போம். ஆனல் தான் ஒரு ஞானி என்று தற்பெருமை கொள்ளும் ஞானியின் ஆணவம் சுலபத்தில் அழிவதில்லை.

பிறருடைய நன்மையை நாடுதல் ஒன்றே மனதைப் பண்படுத்துதற்கு உற்ற உபாயம்.

அறிவுடையோன் பொருள் ஒன்றை மிக மேலான வழியில் பயன் படுத்துவது போன்று வாழ்க்கையையும் நல்வழியில் பயன் படுத்துகிறான்.

—சௌபாக்கியம்.

மணிமொழிகள்

எஸ். சீதாலட்சுமி

காற்று எத்திசையில் அடித்தாலும் மலையை அசைப்பதில்லை. மனம் அவ்வாறு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உறுதியாயிருக்க வேண்டும்.

அற்ப மனதுடையோர் அடித்துப் புடைத்துக் கொண்டிருக்கையில் சீரிய மனதுடையோர் அமரிக்கையாகத் தன் கடனாற்றுகின்றனர்.

தன்னுள் ஆனந்தத்தைக் கண்டுகொண்டவன், பிரயாசையின்றிப் போராட்டமின்றித் தனக்குத்தானே எஜமானனாக வீற்றிருக்கின்றான்.

ஆசை என்னும் காற்று வீசிக்கொண்டிருக்கும் பரியந்தம் கடவுளின் பேரொளியை உள்ளத்தினுள் காணமுடியாது.

கண்ணில் மணிபோன்று உள்ளத்தில் இறைவன் ஒளிர்கின்றான். இதை அறியாத மூடன் அவரை நாடி வெளியுலகில் அலைகின்றான்.

சுகதுக்கம், இன்பதுன்பம் முதலிய இருமைகளால் உன்னிருதயம் குழப்பமடையாதிருக்கட்டும்.

மனதில் நடுநிலை வெறும் குருட்டுவாய்ப்பல்ல. ஞானத்தாலும் தன்னைத்தானே வெல்லுவதாலும் அது வருகின்றது.

வீரனைப்போன்று மாளத் தெரிந்துகொண்டவனே வீரனைப் போன்று வாழவும் வல்லவனாகிறான்.

மனிதன் தன் சீரிய நிலையினின்று தவறி இப்போது கீழே வீழ்ந்திருக்கிறான் என்று எல்லா மதங்களும் முறையிடுகின்றன.

அஞ்ஞானத்தில் உழல்வர்களால் மானிடர் என்று சொல்லப்படும் தேவதைகளை நாம் வணங்கித் தொண்டாற்றுவோம்.

பழத்தினின்று மரத்தின் பெருமையை அறிகிறோம். அவ்வாறே வார்த்தையினின்றல்லாது வாழ்க்கையினின்றே மனிதனது பெருமையை அறிகிறோம்.

மனிதருள் சிரேஷ்டனாக விரும்புபவன் தன் உள்ளம் எனும் சாம்ராஜ்யத்தை ஆளக் கற்றுக் கொள்ளட்டும். ஆசை, அச்சம் எனும் கலகக்காரர்களை அடக்கித் தன் தனி அரசை நிறுவட்டும்.

உலகப் பந்தங்களுக்குட்படாது பரிபக்குவம் அடைபவனே வீரனென்று சொல்லப்படுவான்.

(78-ம் பக்கம் பார்க்க)

உயர்தர ஆரம்பப் பாடசாலைகளுக்கு

(For Higher Ele Schools)

வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

(Vidwan- V. Subramaniam)

ஆறும் வகுப்பு	0	12	0	23	19-5-'54
ஏழாம் வகுப்பு	0	14	0	41	19-5-'54

மாதிரிப் பிரதிகளுக்கு 0–14–0 அனுப்பவும்.

புதுமுறை சங்கக் கணிதங்கள்

(V. K. Seshadri, B. A., L. T., & V. S. Leela B. A., B. T.)

ஆறும் வகுப்பு	1	2	0	15	19-5-'54
ஏழாம் வகுப்பு	1	4	0	15	19-5-'54
எட்டாம் வகுப்பு	1	4	0	16	19-5-'54

மாதிரிப் பிரதிகளுக்கு 2–0–0 அனுப்பவும்.

சமூக நூல்

(T. S. Umapathy, M. A., L. T.)

ஆறும் வகுப்பு	1	4	0	38	19-5-'54
ஏழாம் வகுப்பு	1	8	0	38	19-5-'54
எட்டாம் வகுப்பு	1	8	0	38	19-5-'54

மாதிரிப் பிரதிகளுக்கு 2–4–0 அனுப்பவும்.

அநுமான முறை இலக்கணமும் உரை நடை ஆக்கமும்

ஆறும் வகுப்பு	0	12	0	41	19-5-'54
ஏழாம் வகுப்பு	0	12	0	41	19-5-'54
எட்டாம் வகுப்பு	0	12	0	41	19-5-'54

மாதிரிப் பிரதிகளுக்கு 1–2–0 அனுப்பவும்.

Edited, Printed and Published by P. Veeraraghavan at the
'Venkatesan Press' 94,95 New St. Mannady, Madras-1.

வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
முதல் வகுப்பு	0 4 0	25	19–5–'54
இரண்டாம் வகுப்பு	0 5 0	25	19–5–'54
மூன்றும் வகுப்பு	0 8 0	25	19–5–'54
நான்காம் வகுப்பு	0 9 0	25	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0 10 0	25	19–5–'54

மாதிரிப் பிரதிக்கு 1–2–0 அனுப்பவும்.

கதைப் புத்தகங்கள்

(S. S. அருணகிரிநாதர்)

பாலர் நல்ல கதைகள்			
நான்காம் வகுப்பு	0 5 0	28	19–5–'54
பாலர் கதா போதினி			
ஐந்தாம் வகுப்பு	0 5 0	29	19–5–'54

இந்த இரண்டு புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 0–5–0 அனுப்பவும்.

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

(M. விவேகானந்தா, B. Sc., L. T.)

மூன்றும் வகுப்பு	0 5 0	...	...
நான்காம் வகுப்பு	0 7 0	18	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0 8 0	18	19–5–'54

இந்த மூன்று புத்தகங்கள் வேண்டுவோர் 0–10–0 அனுப்பவும்.

புதிய தேச ஆட்சி முறை

(D. சிவசங்கரராவ், B.A.,L.T.)

மூன்றும் வகுப்பு	0 5 0	11	19–5–'54
நான்காம் வகுப்பு	0 7 0	8	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0 8 0	8	19–5–'54

இந்த மூன்று புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 0–10–0 அனுப்பவும்.

Regd No. M. 5018.

புதுமுறை சங்கக் கணிதம்

K. வீராசாமி, B.A., B.T.

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
மூன்றாம் வகுப்பு	0 8 0	14	19–5–'54
நான்காம் வகுப்பு	0 10 0	14	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0 12 0	14	19–5–'54

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் 0–15–0 அனுப்பவும்.

நம் நாட்டு வரலாறு

M. தக்ஷிணாமூர்த்தி, B. A., B. T.,
T. S. உமாபதி, M. A., L. T.

மூன்றாம் வகுப்பு	0 5 0	11	19–5–'54
நான்காம் வகுப்பு	0 7 0	8	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0 9 0	10	19–5–'54

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் 0–11–0 அனுப்பவும்.

தமிழ் இலக்கணம்

T. S. உமாபதி, M.A.,L.T.

4, 5–வது வகுப்புகளுக்கு	0 5 0	8	4–5–'55

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் 0–2–0 அனுப்பவும்.

சிறுவர் பூகோளம் (Tamil)

T. S. உமாபதி, M. A., L. T.

இரண்டாம் வகுப்பு	0 5 0	13	19–5–'54

V. K. சேஷாத்திரி, B. A., B. T.

மூன்றாம் வகுப்பு	0 7 0	12	19–5–'54
நான்காம் வகுப்பு	0 10 0	12	19–5–'55
ஐந்தாம் வகுப்பு	0 12 0	12	19–5–'54

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் 1–1–0 அனுப்பவும்.

Mother India English Reader Primer - I 0—5—0

மாதிரிப் பிரதிகளுக்கு 0–2–0 அனுப்பவும்.

Printed at the Venkatesan Press, Madras—1.